OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
8-FEB 1910
MADRAS.

# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

தொகுதி 2 } ஸௌம்ய௵ மார்கழி௴ 1909-௵ டிசம்பர்௴ { பகுதி 6

## ஆராதனை: பொதுவான பிரிவுகள்

### WORSHIP: GENERAL DIVISIONS

**நா**ம் நித்யவஸ்துவில் (ஆத்மாவில்) நிலைபெற்று சாந்தம் அடைந்து ஆனந்திப்பதற்கு முக்கிய ஸாதனம் ஆராதனையே. இந்த ஆராதனை அனேக விதம், இவ்வாராதனைகள் எல்லாம் பொதுவாக வெளிப்படை ஆராதனை என்றும் அந்தரங்க ஆராதனை என்றும் இருவகைப்படும்.

வெளிப்படை ஆராதனை என்பது கோயில் குளங்கள் நல்ல ஸ்தலங்கள் முதலியவைகளுக்குப் போய் செய்வதே. இது புத்தி விசாலத்தையும் எல்லா விஷயங்களையும் நடுநிலையில் இருந்து பக்ஷபாதமின்றி தெளிவாக நோக்கும் திறனையும், மதத்துவேஷம் இன்மையையும் உண்டாக்கும். இதோடும்கூட அந்தரங்க ஆராதனையும் இருத்தல் வேண்டும். இது ஒருவன் தனதுவீட்டுள் அல்லது தனிமையாகச்செய்யும் அனுஷ்டானம் பூஜைகள் முதலியவைகளே. இவை நம்மனதின்சஞ்சல ஸ்வபாவத்தை நமக்கே விளங்கும்படி காட்டி அதை நீக்கும் வழிகளை அறிந்து முயற்சிக்கும்படி செய்யும். இதனால் பாழான நமது மனம் குவியும்படி செய்யத்தக்க தந்திரங்கள் மூலமாக நமக்கு சித்த ஏகாக்கிரம் வரும். இவ்விருவித ஆராதனைகளிலும் நாம் பழகவேண்டியதவசியம்.

வேறு விதமாக நோக்கில் ஆராதனைகளைக் காம்யம் என்றும் நிஷ்காம்யம் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். காம்ய ஆராதனையாவது இஹலோகஸுகம் ஸ்வர்க்காதி போகங்கள் முதலியபலன்கள் வேண்டும் என்ற ஆவலோடு ஆராதிப்பதே. யாகாதிக்ரதுக்கள் செய்வது, கீர்த்தி வரவேண்டும் என்று ஆடம்பர ஆராதனம் செய்தல், லோகாந்தரஸுகாதிகள் வேண்டும் என்று தானதர்மாதிகளைச் செய்தல் ஆகிய இவைகள் இத்தகைய ஆராதனைகள். இவ்வாறு ஆராதனை செய்பவர்கள் அடையும்பலன் நீடித்து நிலைக்கா, மறுபடியும் உலகில்வந்து அவர்கள் உழல வேண்டியதுதான். நிஷ்காம்ய ஆராதனம் முற்கூறியவைகளை விரும்பாது பாரமார்த்த விஷயங்களாகிய நிராசை, பக்தி, மோக்ஷம் முதலியவைகளை விரும்பிச் செய்வது. இவ்வித ஆராதனத்தின் நோக்கத்தைத்தான் பிரஹலாத ஸ்வாமி,

துன்பவாத்தரும் இன்பவாவின்மையே தொகுக்கும்
இன்பவேதுவின் னன்பினா லன்றியார்க் கெய்தும்
வன்பிலாவிலங் கென்பிலாப் புழுவின்யான் வரினும்
நின்பதாம்புயத் தன்புமா றாமைதா நெடியோய்.

என்று நரஸிம்ம மூர்த்தியிடம் வரத்தைக் கேட்டுக் கொள்ளுகிறார். நமது மஹான்கள் செய்த ஆராதனங்கள் பெரும்பாலும் இத்தகைய ஆராதனங்களே. நம்மால் கூடியவரையில் நாம் காம்ப ஆராதனைகளைக் குறைத்து நிஷ்காம்ய ஆராதனைகளிலேயே அதிகமாக மனப்பூர்வமாகப் பழகவேண்டும். இல்லாவிடில் ஸுகதுக்கங்கள் பேதாபேதமின்றிக் கண்மூடித்தனமாய் ஸதாசக்கிராகாரமாகச் சுழன்றுவரும் இப்பிரபஞ்சத்தில் மனங்கோணாது நம்மால் அரைநாழிகை இருக்கமுடியாது. இப்படி இருப்பின் காம்ய ஆராதனையில் எவ்வாறு நிலைத்து நிற்கமுடியும். ஆதலால் நிஷ்காம்ய ஆராதனையையே நாம் கதியாகக்கொண்டொழுகவேண்டும். காம்ய ஆராதனையே இல்லாமலிருந்தால் மிகவும் நலம்.

ஆகவே ஆராதனைகள் பொதுவாக நான்குவிதம் என்றும், அவை காம்யவெளிப்படை, நிஷ்காம்ய வெளிப்படை, காம்ய அந்தரங்கம், நிஷ்காம்ய அந்தரங்கம் ஆகிய இவைகளே என்றும் தெரியவருகிறது.

ஆராதனைகளின் சிறப்புப் பிரிவுகளை அடுத்த ஸஞ்சிகையில் எடுத்து விவரிப்போம்.

# விவேக போதினி

தொகுதி 2] ஸௌம்யஹூ மார்கழிமீ [பகுதி 6

## வேதங்கள்-கர்மகாண்டம்

### *VEDAS—THE KARMA KANDAM*

முன்னர் கூறியபடி, வேதங்கள் பொதுவாக கர்மகாண்டம், ஞானகாண்டம் என இருவகைப்படும். இவைகளுள் கர்மகாண்டம் சில கர்மங்களால் ஸ்வர்க்க ஸுகத்தை மனிதனுக்கு உண்டாக்கும் நோக்கத்தை உடையது. பிரபஞ்சத்தில் எவ்வித ஸுகமானாலும் ஸரி, எவ்வளவு காலம் இருந்தாலும் ஸரி, நிலையற்றதாயும், மாறும் தன்மையை உடையதாயும் இருத்தலால் கர்மகாண்டத்தின் முடிவு மிக சிறந்ததல்ல. ஆதலால் இதில் அடங்கியிருப்பவைகளுக்கு அபரவித்தை (ஞானகாண்டத்தைவிடத்தாழ்ந்த வித்தை) என்று பெயர். ஆனால் கர்மகாண்ட விஷயங்களில் ஒருவன் ஒழுங்கு தவறாது பழகி வருவானாகில் அவனுக்கு சித்த சுத்தி உண்டாக, அவன் பரவித்தையாகிய ஞானகாண்டத்தை அறியத்தகுந்த அதிகாரியாவான். கர்மகாண்ட விஷயங்களை வெளி நாட்டார் அநேகவிதமாகக் குற்றங் கூறியுள்ளார். அவர்கள் முற்கூறிய கர்மகாண்ட ஞானகாண்ட ஸம்பந்தத்தை உணராமையால்தான் அவ்வாறு செய்தார்கள். முதலில் இங்கு கர்மகாண்டத்துள் அடங்கிய விஷயங்களைப் பொதுவாக எடுத்து விசாரிப்போம்.

கர்மம் என்ற பதத்திற்குச் செய்கை என்று பொருள். வைதிக கர்மம் என்றால் வேதத்தில் சித்தசுத்திக்காக ஏற்பட்டிருக்கும் யாகங்கள்போன்ற செய்கைகள். கர்மம் என்ற பதத்திற்குப் பொதுவாக விரிவான அர்த்தம் ஒன்று உண்டு. அதாவது மனிதன் எண்ணுவது, சொல்வது, செய்வது எல்லாம் கர்மம் என்பதே. இந்தப்பொருளில் தான் கர்மம் என்ற பதம் பகவத்கீதையில் பகவானால் உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. இவ்விரிவான பொருளை வைதிககர்மம் என்ற தொடருக்குக் கொள்ளாது முற்கூறிய சிறப்புப் பொருளே ஸாதாரணமாக எடுத்துக்கொள்ளப் படுகின்றது.

ஆரியர்கள் அவசியம் செய்யவேண்டிய கர்மங்கள் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் வேதங்களில் கூறப்பட்டுள்ள ச்ரௌதகர்மம், ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டுள்ள ஸ்மார்த்தகர்மம், ஸ்ம்ருதிகளுக்கும் புராணங்களுக்கும் இடையே நிற்கும் ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ள ஆகமகர்மம் ஆகிய இவைகளே. த்விஜர்கள் எல்லோரும் முதல் இருவித கர்மங்களையும் அவசியம் செய்யவேண்டியது. அத்விஜர்கள் முக்கியமாக ஆகமகர்மங்களையும் சிற்சில ஸ்மார்த்த கர்மங்களையும் அனுஷ்டிக்கவேண்டியது. ஆகமகர்மங்களிலும் சிற்சில பிராம்மணர்கள் மாத்திரமே அனுஷ்டிக்கவேண்டியவை, பெரும்பாலும் அத்விஜர்களே அனுஷ்டிக்கவேண்டியவை. இவ்வாகமங்களாலும், இவைகளைப் பின்பற்றி தமிழில் பிரவசனம் செய்த ஆழ்வார்கள், நாயனார்கள், ஆசாரியர்களாலும்தான் அத்விஜர்களுக்கு ரஹஸ்யங்கள் வெளியாக அவர்கள் மேன்மை அடைந்தார்கள். வேதங்கள் எவ்வாறு த்விஜர்களை மேம்பாடுடையவராக்கினவோ அவ்வாறே ஆகமங்கள் அத்விஜர்களுக்கு உதவின.

சுருதி ஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்ட கர்மங்களைச் செய்தால்தான் த்விஜனுக்கு த்விஜத்வம் தக்கும். இக்கர்மங்கள் இரண்டுவிதம். அவைகள் அவசியகர்மங்கள், இஷ்ட (காம்ய) கர்மங்கள் என்பவைகளே. அவசியகர்மம் இரண்டுவிதம். முதலாவதாகிய நித்யகர்மம் என்பது தினம் அவசியம் செய்யவேண்டிய கர்மங்கள்; ஸந்தியாவந்தனம், அனுஷ்டானங்கள் போல்வன. இரண்டாவதாகிய நைமித்திக கர்மம்

என்பது ஏதாவது ஓர் ஸமயத்தில் ஓர் காரணம்பற்றி அவசியம் செய்து தீரவேண்டியவைகள்:—கிரஹணம், ஸங்க்ரமணம், பர்வம், ஆகிய இக்காலங்களில் செய்யவேண்டிய கர்மங்கள் போல்வன.

இந்த அவசிய கர்மங்கள் பெரும்பாலும் ஒழுங்காக தினமாவது, ஒருநாளில் அநேகம் தரமாவது, பக்ஷத்திற்கு ஒருதரமாவது, மாஸத்திற்கு ஒருதரமாவது, வருஷத்திற்கு ஒரு தரமாவது செய்யவேண்டியவைகளாக இருக்கும். இம்மாதிரி அடிக்கடி வராததான ஓர் அவசிய வைதிக கர்மம் ஒவ்வொரு த்விஜனும் செய்யவேண்டியதென்று வேதங்களில் காணப்படுகிறது. இதுதான் ஸோமபாகம் என்று சொல்லப்படுவது. (இதைப்பற்றி வேறோரிடத்தில் விஸ்தரிப்போம்). சுருதிகளில் காணப்படும் மற்றைய அவசியகர்மங்களாவன:—அக்னி ஆதானம், அக்னிஹோத்ரம், பர்வயஞ்ஞங்கள் ஆகிய இவைகளே. இவைகளைவிட்டால், த்விஜன் சிறப்பு குறைந்துவிடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்மிருதிகளில் உள்ள அவசிய கர்மங்களாவன, ஸந்தியாவந்தனம், ஔபாஸனம், வைச்வதேவம் (ஸர்வ தெய்வ உபாஸனை) பிரம்மயஞ்ஞம் (வேதம் ரிஷிகள், தேவதைகள், பிதிர்க்கள் இவர்களை ஆராதித்தல்) ஆகிய இவைகளே.

இரண்டாவது விதமான அவசிய கர்மங்களாகிய இஷ்டகர்மங்கள் ஸ்வர்க்கபோகம் முதலிய பலனை உத்தேசித்தாவது அல்லது பகவத் அர்ப்பணம் செய்ய உத்தேசித்தாவது ஒருவன் இஷ்டப்பட்டு தானே செய்யப் படுபவைகள். முன் வித கர்மத்திற்கே காம்யகர்மம் என்ற சிறப்புப் பெயர்தரும். பின்னதற்கு நிஷ்காம்யகர்மம் என்று பெயர். (இதைத்தான் பகவான் கீதையில் விஸ்தரிக்கிறார்). இது வேதத்தில் குறிப்பாகத்தான் காட்டப்பட்டிருக்கிறது. இப்பாகத்தைச் சேர்ந்த வைதிக கர்மங்கள் பெரும்பாலும் சிறப்பான காம்யகர்மங்களே. அவைகளில் சில, வெகுகாலம் செய்யவேண்டியவைகளாகிய வாஜபேயம், அசுவமேதம், ஸத்ரங்கள் ஆகிய இவைகளே. முற்கூறிய ஸ்மிருதிகர்மங்கள் தவிர மற்றையவைகள் எல்லாம் ஸ்மார்த்த காம்ய கர்மங்களே.

சுருதி கர்மங்களுக்கும் ஸ்மிருதி கர்மங்களுக்கும் அதிக வித்யாஸம் இல்லை. முன்னவைகள் சுருதியிலும், பின்னவை ஸ்மிருதிகளிலும் விதிக்கப்பட்டவை. இவ்விரண்டிலும் ஒரே கர்ம விஷயத்தில் முரணான விதிகளை உடையவைகளாகக் காணப்படின் சுருதி விதியையே பின் பற்ற வேண்டும். இதைத் தவிர இருவித கர்மங்களிலும் வேதமந்திரங்கள் தாராளமாக உபயோகப் படுத்தப்படும். இம்மந்திரங்கள் ஸம்பந்தப்படாவிடில் எந்தக் கர்மத்திற்கும் பலன் கிடையாது. இவ்வாறு செய்யும் கர்மங்களுக்குத் தகுந்த பலன்களை உண்டாக்கும் மந்திரங்களையும் அவைகளைப்பற்றிய விஷயங்களையும் உடைத்தாயிருத்தலால்தான் இந்த வேத பாகத்திற்குக் கர்மகாண்டம் என்று பெயர்.

இதை முடிக்கும்முன் கர்மகாண்டத்தில் கூறப்படும் கர்ம மார்க்கத்திற்கும் கீதையில் கூறப்படும் கர்ம யோகத்திற்கும் உள்ள வித்யாஸத்தை எடுத்து விவரிப்போம். கர்ம காண்டத்தில் கூறப்படும் கர்ம மார்க்கம் பெரும்பாலும் காம்ய கர்மங்களால் நிறைந்தது. இவைகளின் நோக்கமாகிய ஸ்வர்க்காதி போகங்கள் நிலையற்றவை. இது பற்றியே பகவான் கீதையில் இம்மார்க்கத்தைத் தூமமார்க்கம் அதாவது இருள் நிறைந்தமார்க்கம், இதன் வழி போகிறவன் மறுபடி பிறப்பு இறப்பிற்கு ஆளாவான் என்று கூறியிருக்கிறார். இது மனிதனுக்கு கர்மத்தில் பொதுவாக ஓர்வித விரக்தியை நாளடைவில் உண்டாக்கி அதை விட மேலானது ஏதாவது இருந்தால் அதை அறியவேண்டும் என்ற ஆவலை உண்டாக்கும்.

இம்மாதிரி மனதைச்சுத்தம் செய்வதே கர்ம மார்க்கத்தின் முடிவான பலன். கீதையில் கூறியுள்ள கர்மயோகம் இதைவிட எவ்வளவோ சிறந்தது. முன்னமேயே இஷ்டகர்மங்களுள் சிற்சில பகவத் அர்பிதம்செய்ய உத்தேசித்து செய்யக்கூடியவைகள் என்றும், அவைகளைக் கர்ம காண்டத்தில் வற்புறுத்தவில்லை என்றும் இவ்விதகர்மங்களுக்கு நிஷ்காம்ய கர்மங்களென்று பெயர் என்றும் கூறப்பட்டுள்ளது. இம்மாதிரி கர்மங்கள் ஞான காண்டமாகிய உபநிஷத்துக்களில் கொஞ்சம் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளன. இந்தக் குறிப்புகளை வைத்துக் கொண்டு தான் பகவான் கீதையில் கர்மயோகத்தை எடுத்து விவரிக்கிறார். இந்தக் கர்மயோகம் ஞானகாண்டத்தில் சேர்ந்தது. ஞானகாண்டத்தின் முடிவாகிய பரமபதத்தை அடைய கர்மயோகம் முதல்படி. இது கர்மமார்க்கத்தின் முடிவில் வரக்கூடியது. கர்மமார்க்கம் என்ற தொடரில் கர்மம் என்பது வைதிகயாகாதி க்ரதுக்கள் என்ற சிறப்புப்பொருள் உடையது. கர்மயோகம் என்ற தொடரிலோ கர்மம் என்பது எண்ணம், வாக்கு, தொழில் இவைகளில் நடப்பவைகள் என்ற விரிவான பொருளையுடையது. வைதிக கர்மமார்க்கம் கர்மங்களில் ஓர்வித விரக்தியை முடிவில் உண்டுபண்ணும். கர்மயோகம் சித்தசுத்தியை உண்டாக்கி மனதைச் சாந்தப்படுத்தும். கர்மயோகத்திற்கும் கர்ம மார்க்கத்திற்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்யாஸம்.

அடுத்த ஸஞ்சிகையில் த்விஜன் அவசியம் செய்யவேண்டியதாகியும் கர்மமார்க்கத்தில் அவசியமான தாகியும் உள்ள ஸோமயாகத்தை வர்ணித்து யாகங்களின் உட்பொருளையும் எடுத்துரைப்போம்.

# அன்பின் சொரூபங்களும் பக்தியும்

## LOVE AND BHAKTI

அன்பென்பது எல்லா ஜீவராசிகளினிடத்தும் இன்றியமையாததாயிருந்து விளங்கும்படியான ஒரு பொருள். இவ்வன்பு எப்பொருளின்பாற் படுத்தப்படுகிறதோ அதன் தன்மைக்கேற்பப் பொருள்படும். தாய்தந்தையர் பாற் காட்டுமன்பைப் பட்சமென்றும், அவர்கள் தங்கள் மக்கள்பாற் காட்டும் பிரதியன்பை பாசமென்றும், குருவினிடத்திற் காட்டுமன்பை வணக்க மென்றும், தாழ்ந்தோரிடத்தும் ஈன அல்லது எளிய ஸ்திதியிலிருப்பவர்களிடத்தும் காட்டுமன்பைக் கருணையென்றும், சிநேகிதனிடம் பாராட்டுமன்பை நேசமென்றும், அன்னியோன்னியமென்றும், மனைவியின் பாற் காட்டுமன்பைக் காதலென்றும், பணியாளன் எஜமானிடத்திற் காட்டுமன்பை விசுவாசமென்றும், மிருகங்களிடத்துக் காட்டுமன்பைத் தயையென்றும், கடைசியாக யெல்லோரும் கடவுள்பாற் காட்டு மன்பைப் பக்தியென்றும் கொள்ளப்படும். நம்பிக்கை, எண்ணம் முதலியவைகளும், இன்னம் இதுபோன்ற மற்றைய மனஜ்ஜெனிப்புக ளெல்லாமும் இவ்வன்பின் சொரூபங்களே. இவ்வன்பு சாதாரணமாய் இருபிரிவினையுடையது. கைம்மாறு கருதிய அன்பு, கைம்மாறுகருதாதவன்பு. பிறரிடத்திலிருந்து ஒன்றை யடைவதனுலோ, அல்லது அடையவேண்டியோ காட்டுமன்பைக் கைம்மாறு கருதிய அன்பென்று சொல்லலாம். ஒன்றையும் எதிர்பாராது காட்டுமன்பே கைம்மாறு கருதாதவன்பு. பக்தியைத் தவிர்த்த மற்றைய யன்பெல்லாம் கைம்மாறு கருதிய யன்பென்று பொதுவாகச் சொல்லலாம். ஆனல் பக்தியிலும் கைம்மாறு கருதிய பக்தியிருக்கின்றது. அதுதான் மண், பொன், பெண்ணை

வேண்டிக் காட்டும் பக்தி. அவ்வாறு ஒன்றையும் கருதாமலே பக்தியைப் பெறுவதுதான் ஒழுங்கு. இனி இப்பக்தியெப்படி வருமென்றுராய்வோம். இது வெகு சிலரிடத்து மாத்திரம் தோன்றுவதனுல் பிறவிக்குணம் என்று சொன்னார்கள் பெரியோர்கள். ஆனுல் இது எல்லோருக்கும் கைவல்லியமாகலாம். எப்படியாகலாமென்றுல், அன்பென்பது ஒவ்வொருவரிடத்தும் இயற்கையா யமைந்துள்ளதென்று மேலே சொல்லியிருக்கிறது. அதைத் தகாத பொருளினிடத்தும், தகாத விதமாயும் உபயோகப்படுத்தாமல் கடவுள்பாற் படுத்தவேண்டும். இது நாளடைவில் படிப்படியாய் வரவேண்டியது. சிறு பிராயத்தில் தாய் தந்தையர்பாலிருக்கும் பட்சம் ஓர் வித்தியா குருவை யடைந்து அவரை வணங்கி மெய்ப்பொருளறிவதில் வணக்கமாக மாறும். பிறகு உற்ற வயதடைந்தபோது காதல் ஏற்பட அக்காதல் மக்களையடைந்து மேல் அவைகளின்பேரிற் பாசமாக மாறும். இப்பாசம் நீடித்திருக்கவிடாது, கடவுளின்பேரிற் பக்தியாக மாற்றவேண்டியது. மற்ற எல்லாம் இயற்கையாக மாறும். ஆனுல் கடைசியாகச் சொல்லியதை மாத்திரம் மனிதர்கள் தங்கள் முயற்சியினுல் மாற்றவேண்டியது. என் இப்படி பக்தியைப் பெறவேண்டியதென்றுலோ, மோக்ஷமென்னும் மெத்தையை யடைய யேற்பட்டிருக்கும் சரிதை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்கு படிக்கட்டினுள் பக்தி முதற்கண்ணுயமைந்துள்ள சரியையே. ஆதலின் அதைப் பெற்றுல் தான் மோக்ஷமென்னும் மெத்தையை யடையலாம். இப்படிகளின் வழியா யடைந்தாலல்லது வேறு விதமான மார்க்கம் கிடையாதோ வென்றுல் கிடையாது. இதை யனுசரித்தே தான் "விரும்புஞ் சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும், அரும்பு, மலர், காய், கனிபோல் அன்றே பராபரமே" என்றுர் நம் தாயுமானசுவாமிகளும். எப்படி கனியானது முறையே அரும்பு, மலர், காய் இல்லாதபடிக்கு திடீரென்று தோன்றுதோ, அப்படியே (ஞானமும் அதன் முடிவாகிய) மோக்ஷமும், பக்தி (சரியை) கிரியை, யோகமில்லாமற்படிக்குச் சித்திக்காது. மோக்ஷமென்று சொன்னேமே அது யென்னவென்றுராய்வோம். நாம் கடவுளாதலாலே மோக்ஷம். நாம் எப்படி கடவுளாவோமென்றுல், மனுஷன் கடவுளின் அமிசம். ஆனுல் கடவுளுக்கும் மனுஷனுக்கும் உள்ள ஒரே வித்தியாச மென்னவென்றுல், கடவுள் பாசமற்றவர். மனுஷன் பாசத்தாற் கட்டுப்பட்டவன். பாசமென்பது மக்கள்பாற் காட்டுமன்பென்றேம். ஆனுல் பாசமென்பது பக்தியைத் தவிர்த்தயெல்லா யன்பிற்குமே பொதுவாக வழங்கும் பெயர். ஆகையினுல் பாசமெல்லாம் அன்பானபோதிலும், பக்திதான் உண்மையான அன்பு. இது பிறப்படத்தான் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனுர் திருக்குறளில்,

> "என்பி லதனை வெயிற்போலக் காயுமே
> அன்பி லதனை யறம்"

என்றுர். அதாவது என்பில்லாத பிராணிகள், (புழு முதலியவைகள்) எப்படி வெயிலினுல் கஷ்டப்படுத்தப் படுகின்றனவோ அப்படியே அன்பில்லாத வொருவனை அறக்கடவுள் (காலன்) துன்புறுத்துவான். அன்புதானெல்லோரிடத்திலும் ஏதாவது ஓர் ரூபத்தில் பிரகாசிக்கின்றதே; அப்படியிருக்க, அன்பில்லாத மனிதனும் உண்டாவென்றுல் பக்தியே யன்பு. அப்பக்தியில்லாதவனே யன்பிலாதவனெனப்படுவானென்பது தான் விடை. ஆகையினுல் நாமெல்லோரும் நம் வாழ்நாளில் பக்தியைப் பெறுவதையே பிறந்ததின் பயனுகக் கைக்கொண்டு அதைப் பெற முயற்சிக்கவேண்டியது.

சா. தா. மூர்த்திமுதலியார்.

# நெற்பயிர்

## விதை விதைத்தல்

### SOWING PADDY SEED

சாதாரணமாய் நெற்பயிர் விளைவித்தலில் நமது தேசத்திலுள்ள முக்கியமான பழக்கங்களும் மாதிரிகளும் யாவருக்குந் தெரிந்தவிஷயங்களாகும். நன்செய் நிலங்களைச் செவ்வையாய் உழுது, பிறகு எருக்கூட்டி தண்ணீர்பாய்ச்சி நல்ல சேறு உண்டாகப் பண்ணுவார்கள். பிறகு பச்சைத் தழை மிதிப்பதானல் மிதித்து, பரம்படித்து வித்துப்போடுவது வழக்கம். விதைகள் முளை கிளம்பும் தருணத்தில் முளையெருவென்று சொல்லும்படியான ஸங்நமான புஷ்டியுள்ள எருவைத்தூவி வருவார்கள். இப்படிச் செய்வதில், அநேகர் நிலத்தைச் சீர்செய்து, விதையைக் கூடையில்கொட்டி யெடுத்துக் கொண்டு போய்க் கூடையைத் தோள்மேல் தூக்கிக்கொண்டு கைப்பிடி விதை யெடுத்தெடுத்து வீசித் தூவுவதை நாம் கண்டிருக்கிறோம். எவ்வளவோ சிரத்தை யெடுத்துக்கொண்டு விதைத்தும் பூச்சிமுதலிய காரணங்களாலும், அளவுக்கு மிஞ்சிய விதை விதைத்தாலும் முளை சரியாய்க் கிளம்பாமற் போவதுண்டு. அப்படிப்போனல், வேறுபுலங்களில் செவ்வையாய் வளர்ந்த நாற்றுகளை நாற்றுமுடி இவ்வளவுக்கு இவ்வளவு கிரயமெனப்பேசி வாங்கி நட்டுப் பயிர்செய்வார்கள். இப்படிப் பயிர்செய்வதில் தேக சிரமும் பணச் செலவும் இருமடங்கதிகமாய் விடுகின்றது.

இதைத்தவிர்த்துத் தாமே தமது நிலத்தின் ஒருபகுதியில் பயிர்செய்ய மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குமுந்தி கிணற்றின்பாய்ச்சலைக் கொண்டேனும் வேறு ஜலாதாரத்தைக் கொண்டேனும் நாற்று விளைவித்து நட்டுப் பயிர் செய்தால் அநேக சாதகங்கள் உண்டு. அவற்றை இங்கே விசாரிப்போம்.

முதலாவது, நிலம் என்ன செழிப்புள்ளதாயும் ஜலாதாரம் பெற்றதாயு மிருந்தபோதிலும், எரு தக்கதாயிருந்தாலும், விதைமட்டில் கெட்டியானதாயும் முதல்தரமானதாயு மில்லாவிடில், பயிர் பலிதமாவது கஷ்டமாகும். இது யாவரும் எளிதில் உணரக்கூடியது. இப்படி நல்ல விதையைச்சேகரம் செய்து வைத்துக்கொள்வது விவசாயிகளின் முக்கிய கடமையாகும். மலையாளம் ஜில்லா கள்ளிக்கோட்டையில் டிஸ்டிரிக்டு விவசாய ஆலோசனை சங்கத்துக்குத் தலைவராயிருந்த அந்த ஜில்லா கலெக்டராகிய ப்ரான்ஸிஸ் என்பவர், தாம் அந்த ஜில்லாவைவிட்டு வெளியே போகுங்காலத்தில் அச்சங்கத்தாருக்குத் தமக்குத் தோன்றிய அரிய விவசாய விஷயங்களைப் பற்றி ஒரு சுருக்கமான கடிதம் அனுப்பினர். அக்கடிதத்தில் முக்கியமாய் விவசாயிகள் விதை விஷயத்தில் அதிக சிரத்தை யெடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. முன் வருஷத்திலேயே பின் வருஷத்திற்கு வேண்டிய விதையைச் சேகரித்துவைக்கும் பக்குவம் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. நன்ருய்ச் செழித்து ஓங்கி வளர்ந்து முற்றிய கதிர்களை யாராய்ந்து பார்த்து, அவற்றைமட்டில் தனியே பிடுங்கி அக்கதிர்களை மட்டில் தனியே அடித்து தானியத்தை பிரத்தியேகமாய் அடுத்த வருஷ விதைக்காக உபயோகப்படுத்த வேண்டுமென்று அவர் சொல்லுகிருர். இந்தப் பழக்கம் எல்லாரும் அநுகூலத்தோடு கைக்கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

இப்படித் திரட்டிவைத்த விதையிலிருந்துமுளைத்த நாற்றை நட்டுப் பயிர் செய்தால் தகுந்த பிரயோஜனம் கிடைக்கும். மேலும் விதையைப் பூமியில் நேராக விதைத்து முளை கிளம்புகிறதைப் பார்த்துக்கொண்டு பிறகு பயிர் செய்வதில் அநேக இடையூறுகளும் அனுவசியமான செலவும் தொந்தரையும் இருக்கின்றன. நாற்று நடுவதில் மேற்கூறியதொந்தரைகள் கிடையாது. எல்லாவிதத் தொழிலிலும் பயிர்த்தொழில்மிகவும் சிரமத்தோடு கூடியதாயிருந்தாலும், காலாகாலங்களில் செய்யவேண்டிய தண்ணீர் பாய்ச்சல், களை பிடுங்கல், முதலிய காரியங்களிற் சிறிதும் வழுவாமல் நடத்தவேண்டியது அவசியமாயிருப்பதாலும், எவ்வளவு சிரமம் விவசாயி எடுத்துக்கொள்ளுகிருனே அவன் சிரமத்தின் அளவே பூமிபலனைக் கொடுக்கு மாதலாலும், பலவாற்ருனும் மட்டாய்ப் பூமியைப் பதஞ்செய்தல் செய் நேர்த்தி முதலிய செலவுகளைச்செய்து வந்தால் கட்டிவரக்கூடும்.

இவ்வளவு ஜாக்கிரதையாயும் அதிக கவனத்தோடும் செய்யவேண்டிய பயிர்த்தொழிலில் நாற்று நடுவதில், நேரே விதைப்பதைவிட மட்டுச்செலவும் அதிக உபயோகமும் வரும்படியும் இருக்கிறதென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல உள்ள விஷயங்கள்

மனதிற்படும்படி பலர் சொல்லி யிருக்கும்போதும் விவசாயிகள் பழைய வழக்கமாகிய விதை விதைத்தலையே பெரும்பாலும் கைக்கொண்டிருக்கின்றனர். நாற்று முளைக்கச்செய்து, பிறகு நாற்றைப் பிடுங்கி நிலங்களில் நட்டுப் பயிர் செய்வதில் உள்ள பலவகை உபயோகங்களை எத்தனைமுறை யெடுத்துக் கூறினலுஞ் செல்லும்.

நாற்று நடுவதில் விதை அதிகம் வீண்செலவாகாது. தனித்தனி அழகாய் சமதூரத்தில் நடலாம். அப்படிச் செய்வதில் தானியத்தின் ஜாதி பேதத்திற்கும் விளைச்சல் வளர்ச்சி பேதத்திற்குந் தக்கபடி நாற்றைநட சௌகரியமாக விருக்கும். மிகவும் உயரமாய் வளரக்கூடிய பயிராயிருக்கும்பக்ஷத்தில் சற்று தூரமாகவே நட்டு பயிர் நாலாபக்கமும் பரவி நிர்ப்பந்தமில்லாமல் செழித்து வளர இடங்கொடுக்கும்படி நடலாகும். தவிர ஒரு நாற்றுக்கும் மற்றொரு நாற்றுக்கும் இடையில் ஒரே சமமான தூரமிருக்கும்படி நடக்கூடுமாதலால் காற்றும் நீரும் ஒவ்வொரு நாற்றுக்கும் ஒரே ரீதியாய் எட்டி பயிர் ஒரே நிலையாய் வளர்ந்துவரும். இப்படிக்கில்லாமல் நேரே விதையை விதைத்துப் பயிர் செய்வதனல் ஒவ்வோரிடத்தில் மற்ற விடங்களைக்காட்டிலும் விதை யதிகமாய் விழுந்து வியர்த்தமாகும். இடம் தாராளமில்லாமல் குறுகிய இடத்தில் அதிக விதை வளரவேண்டி வந்தால் முளை அதிக உயரம் வளரக்கூடாமல் நிற்கும். மேலும் ஒவ்வொரு விதை பழுதாயிருக்கலாம். அந்த விதையிலிருந்து உற்பத்தியாகும் பயிரும் பிற்பயிரோடு சேர்ந்து வளர்ந்து மொத்த மேனியைக் குறைவு பெறச் செய்யும். நாற்று நடுவதிலோ அதிக உயரம் வளராத இளைத்த நாற்றுகளைத்தள்ளிவிட்டு செழித்தோங்கின நாற்றுக்களை மட்டில் எடுத்து நடலாகும். நாற்று நடுவதில் களைபிடுங்கும் வேலையும் சுலபமாய் முடியும். பிடுங்கி யெறியப்பட்ட களை சேற்றில் மிதிபட்டு அழிந்துபோம். நாற்று நட்ட ஒருமாதத்திற் கெல்லாம் ஒருகளை பிடுங்கினல் போதுமானது விதை விதைப்பதிலோ அப்படியில்லை. எங்கும் பயிர் பரவியிராமல் சில மூலை முடுக்களிலும் ஓரங்களிலும் பயிரில்லாமல் வெற்றிடமாகவே நிற்கும். அவ்விடங்களில் சேரும் நீர், எரு, முதலியவை வீணேயாகும். மேலும் பயிர், சிற்சில விடங்களில் அடர்ந்தும் வேறுசில விடங்களில் மெலிந்தும் வளர்ந்திருப்பதால் பிடுங்கியெறியப்பட்ட களைமடங்கியும் பயிரின்மீது விழுந்து களையெடுப்பதிலுள்ள பிரயோஜனத்தை யடையவிடாமற் கெடுக்கும்.

நாற்றைப் பிடுங்கி நடுவதால் பயிரின்வேர் நிலத்திற்செம்மையாய் ஊன்றும். வேர்பலமாயிருந்தாலன்றி செய் நோக்கிக்குத்தக்க பலன் கிடைப்பது அருமையாதலால் நாற்று நடுவது உபயோகமானதாய்த் தோன்றும். ஆகவே மாசூலும் நிரம்பக்காட்டும். நாற்று வாங்கி நடுவதில் செலவும் அதிகம் இல்லை. விதையை விதைத்து, பயிர் அடர்ந்து வளர்ந்த இடங்களில் அதிகப் பயிரைப்பிடுங்கி வேறிடங்களில் நடவும், பிடுங்கின இடங்களில் மண்ணைப் போட்டு நிலத்தைச் சமப்படுத்தவும், பிறகு வெகு சிரமப்பட்டு கண்டுபிடித்து களைபிடுங்கவும் செலவழிக்கும் பணம், நாற்றை நேரே வாங்குகிற கிரயத்தைவிட அதிகமாகுமே தவிர குறையாது. அப்படி கஷ்டப்பட்டு களைபிடுங்கினலும் அநேக விடங்களில் பயிர் அடர்த்தியாய் களையிருப்பது தெரியாமல் போவதும் உண்டு.

நிரம்ப ஜலாதாரமில்லாத விடங்களில் வேறிடங்களில் பயிரிடப்பட்ட நாற்றுமுடிகளை வாங்கி நடுவதே நல்ல யுக்தியாகும். அதிக நிலம் இருப்பவர்கள் நீர்வள மிகுந்த ஒருபாகத்தில் நாற்றைப் பயிர் செய்து பிற நிலங்களில் கொண்டுவந்து நடலாம். அப்படி நாற்றுப்பயிர் செய்யும் காலங்களில் இதரநிலங்களில் பச்சைச் செடிகளைப் பயிர்செய்து பிறகு உழுது நிலத்தோடு செடிசேர்ந்து மக்கி நல்ல உரமாகும்படி செய்யப் போதிய சாவகாசமு மிருக்கிறது.

இத்யாதி காரணங்களையும்நாற்றுநடுவதில் உள்ள பல அநுகூலங்களையும் உத்தேசித்து நாற்றை ஒற்றையொற்றை அலகாய் தனித்தனியே சமதூரத்தில் நட்டுப் பயிர் செய்து பரீக்ஷித்துப்பார்த்து அநுபோகத்தில் பலனைக் கண்டுகொண்டு தக்கமார்க்கத்தைக் கைநழுவ விடாமற் கைப்பற்றுவதே மெச்சத்தக்க பிழைக்கும் வழியாகும்.

C. P. வேங்கிடராமய்யர், பீ. ஏ.

# இரும்புக்கனிகள்

## IRON ORE

'நெல் காய்க்கிற மரம் எப்படி இருக்கும்' என்று கேட்கிறவன்யார்? ஏராளமான சொத்துக்களைத் தகப்பன் தேடிவைத்திருக்கிற குடும்பத்துப் பிள்ளையே! ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளையோ தன் ஜீவனத்திற்கு வேண்டிய பொருள்களின் நுட்பங்களையும் தொழில்களின் வேறுபாடுகளையும் சிறுவயது முதற்கொண்டே ஆராய்ந்து அறிய முயற்சிசெய்து, அதே கவலையாய் அலைந்து திரிந்து அறிவைப்பெற்றுப் பிழைக்கும் வழியைத் தெரிந்து கண்ணியமாய் ஜீவிக்கத் தொடங்குகிறான்.

இதற்குத் திருஷ்டாந்தம்.—இப்பொழுது நமது இராஜதானியில் பெரும்பாலும் உத்தியோகப் பதவிகளிலிருப்பவர்களில் பலர் பிறர் ஆதரவினால் படித்துப் பரீக்ஷைகளில் தேறியவர்களென்பதையாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இப்படியேபெருந்தொழில், வியாபாரம் முதலியவைகளில் செல்வமும் கீர்த்தியும் பெற்று உன்னத பதவியிலிருப்பவர்களில் பலர், பால்யத்தில் தரித்திரத்தினால் பீடிக்கப்பட்டவர்களே என்பதில் தடையில்லை. ஒரு தனி மனிதனைப் பொருத்ததே தேசத்திற்கும் பொருந்துமாவென்று பார்க்கும்பொழுது, இத்தேசத்தின் ஜனத்தொகையில் அதிகமானவர்களின் ஜீவனவுபாயம் வியவசாயமென்றே கருதப்பட்டாலும் வர்த்தகம், கைத்தொழில் முதலிய அலுவல்களில் பிரவேசித்துப் பிழைக்கிறவர்களுமில்லாமற் போகவில்லை. எந்தத் தேசமானாலும் பூமிவேண்டியவளவிருந்து காலாகாலத்தில் அவசியமான மழையடித்து, சீத உஷ்ணத்திற்குத் தகுந்தபடி விளையக்கூடியப் பயிர்கள் ஏராளமாய் விளைந்துவிட்டால் ஜனங்கள் மற்ற தொழில்களில் பிரவேசித்து பாடுபடவேண்டியது அவசியமாக விராது.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் இத்தேசத்தில் காலாகாலத்தில் மழை பொழிந்து நமக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் மிகுதியாக விளைந்து, சுகசௌக்கியத்திற்கு வேண்டிய துணி முதலிய செயற்கைப் பொருள்கள் அவசியமான அளவு செய்யப்பட்டு வந்தபடியால் அந்நிய தேசத்திய பொருள்களைப் பற்றிய கவலையே நம் தேசவாசிகளுக்கில்லாதிருந்தது. இத்தேசத்தைப்போல் பூமியானது சரியாகப் பயிரிடப்பட்டு வேண்டிய அளவு உணவுப் பொருள்களும் துணி முதலியவைகளும் கிடைக்கப் பெறாத தேசத்தவர்களே அந்நிய தேசத்தின் விளைபொருள்களைப்பற்றி யறிய ஆவல் கொள்ளவும் தங்கள் ஜீவனவுபாயத்திற்கு வேண்டிய தொழில்களைச் செய்யவும் தூண்டப்படுகிறார்கள். இவ்விதமாக மேல் நாடுகளிலுள்ள ஜனங்கள் தங்கள் பூமியில் வேண்டிய அளவு பயிர் வகைகள் விளைவதில்லையாகையால் தங்கள் உணவுப்பொருள்களுக்கும் உடைகளுக்கும் அந்நிய தேசங்களை ஆராயத் தொடங்குகிறார்கள். பூமியைத் தோண்டிப் பார்க்கவே நிலக்கரியையும் மண்ணெண்ணெயையும் பெற்றார்கள். பொன் இரும்பு முதலிய உலோகங்களையும் அடைந்தார்கள். கஷ்ட உழைப்பைத் தாங்கத் தகுந்த போதையைக் கொடுக்கக்கூடிய திராவகங்களைச் செய்தார்கள். இந்த வழியாகவே காப்பிக்கொட்டை, தேயிலை, கோகோ முதலியவைகளையும் கண்டுபிடித்தார்கள். இப்படியே பலவுள. நம் நாட்டாருக்கு இத்தகைய அவசியம் நேராமலே வெகு காலமிருந்தது.

ஆனால் இப்பொழுதோ பல காரணங்களினால் இத்தேச விளைவு குன்றி உணவுப்பொருள்களுக்குத் தரித்திரமுண்டாகவே, ஜனங்களுக்குள் வேறு தொழில் மார்க்கங்களையறிய அவா பெருகி சிறிது காலமாய் உழைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். விளைவுப் பொருள்களை அதிகரிக்கச் செய்ய நூதன வியவசாய முறைகளை யனுசரித்துப் பயிரிடத் தொடங்கியிருக்கிறார்கள். இன்னும் ஜனங்கள் தரித்திரமின்றி சுகமாய் வாழ அனுசரிக்கவேண்டிய முறைகள் பலவிருக்கின்றன. அவைகளை ஜனங்களுக்குச் சமயத்திற்குத் தக்கபடி போதிக்கத் தகுந்த ஒரு பத்திரிகை அவசியமெனவுணர்ந்து "பிழைக்கும் வழி" என்ற ஏற்ற நாமம் சூட்டி வெளிப்படுத்தப் பட்டிருப்பதைப்பார்க்க அதிக ஆநந்தமுண்டாகிறது.

நம் தேசத்தில் வியவசாயி, தச்சன், கொல்லன், தட்டான் முதலிய ஒவ்வொரு கைத்தொழிலாளிகளுக்கும் இரும்பு ஆயுதங்கள் அவசியமாகவேண்டியிருக்கிறது. வீடுகட்டவும், வண்டிகள் செய்யவும், மேஜை நாற்காலி முதலியவைகள் செய்யவும், சமையல் பாத்திரங்கள் செய்யவும், மற்ற ஒவ்வொரு வேலைக்கும் இரும்பு அவசியம். இவைகளுக்கு இத்தேசத்தில் எவ்வளவு இரும்பு கிடைத்தபோதிலும் போதாததாகவே இருக்கும். மத்திய மாகாணங்களில்

பலவிடங்களில் முதல்தரமான இரும்பு மிஸ்டர் J. N. டாட்டாவின் பெரும்முயற்சியால் எடுக்கப்படுகிறது. அவ்விரும்பைக் கொண்டு எவ்வளவோ இலக்ஷக்கணக்கான சாமான்கள் செய்து விற்கப்படுகின்றன. யாமறிந்தவரையில் இச்சென்னை இராஜதானியில் சேலம், கோயமுத்தூர், நீலகிரி முதலிய ஜில்லாக்களில், பலவிடங்களில் இரும்பு எடுக்கக்கூடிய விடங்களிருக்கின்றன. நீலகிரி ஜில்லாவில் எடப்பள்ளி என்ற கிராமத்திற்குச் சமீபத்தில் இரும்பு கலந்த கற்களையுடைய பூமிகள் அதிகமாயிருக்கின்றன. சேலம் ஜில்லா மார்க்கமாய் இருப்புப்பாதை வழியாக பிரயாணம் செய்கிறவர்கள்கூட, சில குன்றுகளுக்கு அடிவாரத்தில் கருநிறமும் பழ பழப்புமான பாறைகளைப் பார்த்திருக்கலாம். இவைகளெல்லாம் இரும்பு கலந்தவைகளே. கோயமுத்தூர் ஜில்லா பவானி தாலூகாவிலிருந்து சத்தியமங்கலம் செல்லுகிற பாதையின் நெடுக இரும்பு எடுக்கக்கூடிய விடங்கள் பலவிருக்கின்றன. இவைகளில் அத்தாணி என்கிற கிராமத்தையடுத்த பவானி நதியோரத்தில் சுமார் மூன்று பர்லாங்கு தூரத்திற்கு இரும்பு பாறைகளிருக்கின்றன. யாம் சென்ற மாதத்தில் இந்தக் கிராமத்திற்குப் போயிருந்தபொழுது மேற்சொல்லிய விடத்தை நேரில் பார்வையிட்டுச் சில கற்களை எடுத்து பரீக்ஷித்துப் பார்த்ததில் ஒரு பவுன் (40-ரூபாய்) நிறை யிருக்கக்கூடிய கல் மூன்று பவுன் நிறையுள்ளதாயிருந்தது. இந்தவிடம் நதியோரமாயிருக்கிறபடியால் வெட்டியெடுத்து உபயோகப்படக்கூடிய சாமான்களாக மாற்றத்தகுந்த விடமேயாகும். இந்தக் கிராமத்திற்குப் போகவேண்டுமானால் ஈரோடு ஸ்டேஷனில் இறங்கி ஒன்பதுமைல் தூரத்திலுள்ள பவானிக்குப் போகவேண்டும். அங்கிருந்து அத்தாணி என்ற கிராமம் 14-மைல் தூரமிருக்கிறது. நல்ல ஜட்காவண்டிகள் கிடைக்கின்றன. இப்பாதையில் சில பள்ளத்தாக்குகளிருக்கின்றபடியால் மழை காலம் பிரயாணத்திற்குத் தகுந்ததன்று.

தகுந்த தனவான்கள் இந்த இடத்தைப் பார்வையிட்டு ஒரு கூட்டுங் கம்பெனியாகச் சேர்ந்து, பெரும் முதல் சேர்த்து இரும்பெடுத்தால் நல்ல இலாபம் கிடைக்குமென்பதில் தடையில்லை. மத்திய மாகாணத்தில் இரும்பெடுக்க மிஸ்டர் J. N. டாட்டா என்ற புண்ணியவான் ஏற்பட்டதுபோல சென்னையில் ஒரு டாடா ஏற்படவேண்டும். ஏற்பட்டால் அநேக ஏழைகளுக்குப் பிழைக்கும் வழியுண்டாகும்.

T. C. V. ரமண அய்யர்.



# ரத்தின வியாபாரி

## A DIAMOND MERCHANT

---

1859-வது வருஷம் அக்டோபர்மீ 29உ நான் கொழும்பிலிருந்து கப்பலேறி தூத்துக்குடி வந்தேன். நான் ஒரு ரத்தின வியாபாரி. வியாபார விஷயமாய் கொழும்பு போயிருந்தேன். மிக்க விலையுயர்ந்த ரத்தினங்களையும் சிறந்த நகைகளையும் ஒரு கருப்புப் பையில்போட்டு எடுத்துக்கொணடு வந்தேன். தூத்துக்குடி வந்ததும் பட்டணம் வருவதற்காக முதல் கிளாஸ் வண்டியிலேறினேன். வண்டி நகர்ந்து கொண்டிருக்கும் சமயத்தில் ஒருவர், நானிருந்த வண்டியுட் புகுந்து எனக்கெதிரே உட்கார்ந்தார். ஆதலால் அவர் உருவத்தை நான் சரியாகக் கவனிக்க முடிந்தது. அவருக்கு வயது 24-க்கு மேலிராது. தலையில் உயர்ந்த சரிகை அங்கவஸ்திரம் ஒன்றைச் சுற்றியிருந்தார். அவர் முகத்தில் தெளிவில்லாமல் மிக்க துயரப்படுகிறவர்போல் தோன்றினார். ரயில் தப்பிப்போகாமல் சமயத்தில் வந்து அதைப் பிடித்ததற்காகத் திருப்தியடைந்தவர்போல் காணப்பட்டார். அந்தச் சமயம் அவர் சம்பாஷணையில் விருப்பமுள்ளவராகத் தோன்றாததால், நானும் மௌனமாகவே பிரயாணம் செய்தேன்.

என் பையை எனக்கு அருகாமையிலேயே வைத்துக்கொண்டு அதை நன்றாய் கவனித்து வந்தேன். கொஞ்சம் சிரமமாயிருந்தபடியால் அரைத் தூக்கமாகக் கண்மூடினேன். கொஞ்சநேரம் பொறுத்து விழித்துக்கொண்டதும் என் பையிருந்த விடத்தில் கண் செலுத்தினேன். அது அங்கேயே பத்திரமாகவிருந்தது. என்னுடன்கூடப் பிரயாணஞ் செய்தவர் மாத்திரம் இருந்த விடம் விட்டு மாறி வேறிடத்திலுட்கார்ந்திருந்தார் வண்டி திருச்சிராப்பள்ளி வந்ததும் அங்கு பத்து நிமிஷத்துக்குக் குறையாமல் நிற்குமென்று தெரியுமாதலால் என் பையைக் கையிலெடுத்துக்கொண்டு கீழிறங்கி ப்ளாட்பாரத்தில் உலாவிக்கொண்டிருந்தேன். நான் திரும்பவும் வண்டிக்குள் ஏறியதும் கூடவிருந்தவர் அயர்ந்து தூங்குவதைப் பார்த்தேன். அவரைத் தொந்தரை செய்யாமல் வேறிடம்போய் அவ்வண்டியிலேயே உட்கார்ந்து பிரயாணஞ்செய்தேன். கும்பகோணம் வந்ததும் அவர் கீழிறங்கினார். திரும்பவும் வண்டியில்வந்து ஏறவில்லை. இப்பொழுது எனக்குக் களைப்பாயிருந்ததால்

நகைப் பையைக்கையில் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு படுத்துத் தூங்கினேன், பட்டணம் வந்தபிறகு தான் எனக்கு விழிப்புக்கொடுத்தது. வண்டி நின்றதும் நான் இறங்கி எனக்காகக் காத்துக்கொண்டிருந்த என் சொந்த வண்டியிலேறி வீடுபோய்ச் சேர்ந்தேன். அங்கு நகைப் பையை மேஜைமேல் வைத்துவிட்டு, நகைகளைப் பத்திரப்படுத்துவதற்காக இரும்புப் பெட்டியைத்திறந்தேன். பிறகு நகைகளை எடுப்பதற்கு நகைப்பையைத்திறந்ததும் நகைகளுக்குப்பதிலாக சில இரும்புத் துண்டுகளும் மரத்துண்டுகளுமிருக்கக் கண்டேன். இதைப்பார்த்த எனக்கு என்னமாயிருக்குமென்று நீங்களே அறிந்துகொள்ளுங்கள். என் பையைத் தூக்கிக்கொண்டு அதற்குப் பதிலாக அதேமாதிரியான பையைவைத்துப் போயிருக்கவேண்டுமென்று நான் தீர்மானித்தேன். உடனே போய்ப் போலீஸ்காரரிடம் பைபோன கதையை ஆதியோடந்தமாகச் சொன்னேன்.

வருஷம் ஒன்றுக்கு மேலாயிற்று. நான் புதன் கிழமை தோறும் போலீஸ் ஸ்டேஷன்போய் பையைப்பற்றி ஏதாவது தடயம் அகப்பட்டதாவென்று கேட்டுவந்தேன். ஒவ்வொரு தடவையும் இன்னும் ஒன்றுமகப்படவில்லை என்ற பதிலைத் தவிர வேறொன்றும் கிடைக்கவில்லை. இருந்தும் பையகப்பட்டுவிடுமென்றும் நம்பிக்கைமாத்திரம் எனக்கு இருந்துகொண்டிருந்தது.

திரும்பவும் தூத்துக்குடி போகவேண்டிய காரியம் ஒன்று எனக்கு நேர்ந்தது. எப்பொழுதும்போல, தூரப்பிரயாணத்துக்கு முதல் கிளாஸ் வண்டியிலேயே ஏறிச்சென்றேன். அன்று நான் ஏறிய வண்டியிலே ஒரு ஸ்திரீயும் பிரயாணஞ்செய்தாள். அவள் கழுத்தில் மூன்று வடம் கடிகார சங்கிலி போட்டுக்கொண்டிருந்தாள். காற்றில் அவளுடைய மேல்துணி கொஞ்சம் கலைந்ததால் அச்சங்கிலியில் இணைக்கப்பட்டிருந்த தொங்கட்டம் ஒன்று என் கண்ணிற்பட்டது அதை நான் பாராததுபோல கவனித்து வந்தேன். அந்தத் தொங்கட்டத்தில் ஒருவருஷத்துக்கு முன்னால் என்னோடு பிரயாணஞ் செய்தவனுடைய சிறு உருவொன்று அடைக்கப்பட்டிருந்தது. அந்த உருவைப் பார்த்ததும் அது என்னுடன் பிரயாணஞ் செய்தவனுடையதே யென்று எனக்கு நிச்சயமாகத் தெரிந்ததால், அவனிருக்குமிடத்தை யறிந்து பையைமீட்க வேண்டிய ஏற்பாடுகளைச்செய்துவிட்டுத்தான் மேற்பிரயாணஞ் செய்வதென்று தீர்மானித்தேன்.

வண்டி கும்பகோணம் வந்ததும் அந்த ஸ்திரீ கீழிறங்கினாள். இங்குதான் அம்மனிதனும் ஒரு வருஷத்துக்கு முன்னாலிறங்கியது. ஆதலால் நானும் வண்டியை விட்டுக் கீழிறங்கினேன். அந்த ஸ்திரீக்காக ஒரு வண்டி வந்து ரயிலடியில் காத்துக்கொண்டிருந்தது. அதில் அவள் ஏறிச் சென்றாள். நான் ஒரு வாடகை வண்டி பிடித்துக்கொண்டு அந்த ஸ்திரீயின் வண்டிக்குப் பின்னாலேயே விடும்படியாக உத்திரவிட்டேன். அந்த ஸ்திரீ ஒரு பெரிய மாளிகையில் போயிறங்கினாள். ஆதலால் அவள் ஒரு சீமாட்டியாக விருக்கவேண்டுமென்று எண்ணினேன்.

இருந்தும், என் பையை எடுத்துக்கொண்டு போயிருக்கவேண்டியவன் முகம் எனக்கு நன்றாக ஞாபகமிருந்தபடியாலும், அந்தப்பை போனதினால் எனக்கு அநேக லக்ஷ ரூபாய் நஷ்டமாகிவிட்டபடியாலும் போலீஸ் ஸ்டேஷன் போய் நான் கண்டதையும் அதனால் எனக்குண்டான சந்தேகத்தையும் தெரிவித்தேன். நான் சொன்னதையெல்லாம் போலீஸ் சூபரின்டெண்டண்டு சாவதானமாய்க் கேட்டுவிட்டு உடனே "நீர் சொல்லும் ஸ்திரீ இந்த ஊருக்காக ஒரு பெரிய சீமாட்டி. அவளை யறியாதவர் ஒருவருமேயில்லை. அவள் ஒரு பெரிய உத்தியோகஸ்தரின் மனைவி. அவர் ஏராளமாகச் சொத்து சேர்த்து வைத்ததும் இறந்துவிட்டார். அவளுக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். ஒருவன் தூத்துக்குடியில் கடற்றீர்வை ஆபிஸில் வேலையாயிருந்தான். அவன் ஒரு வருஷத்துக்கு முன்னால்தான் படகுமுழுகி இறந்துவிட்டான். மற்றவன், போன அக்டோபரில் வெளியே சென்றவன் இன்னும் வீடுவந்து சேரவில்லை. இன்றைக்கு வருவான், நாளைக்கு வருவான் என்று அவனுடைய தாய் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறாள். அப்படிப்பட்டவர்கள் மேல் நீர் சந்தேகப்படுவது சரியாயிராது. அவர்களைப் போய் நாங்கள் விசாரணையும் செய்யமுடியாது" என்று சொல்லிவிட்டார். இதைக்கேட்ட எனக்கு வேறு வழி ஒன்றும் தோன்றவில்லை. ஆதலால் பேசாமல் திரும்பி பட்டணம் வந்து சேர்ந்தேன். அங்கு வந்ததும் போலீஸ் ஸ்டேஷனுக்குச்சென்று என்னுடைய சமுசயத்தையும் நடந்த விஷயங்களையும் ஒன்றுவிடாமற் கூறினேன். அங்கும் ஒன்றும் சரியான பதில் கிடைக்காதபடியால் திரும்பி வீடுவந்தேன்.

இதற்கு நாலுநாளைக்குப்பிறகு நான் என்கடையில்

நின்றுகொண்டிருந்தேன். அப்பொழுது ஒருவன் என் குமாஸ்தாவிடம் வந்து ஏதோ பேசிவிட்டு என்னை நோக்கி வந்தார் அவரைப் பார்த்ததும் என்னுடன் தூத்துக்குடியிலிருந்து பிரயாணம் செய்தவரென்றறிந்துகொண்டேன். உடனே அவரை உள்ளறைக்கு அழைத்துப்போய் ஒரு நாற்காலியிலுட்காரச் சொன்னேன். அவர் மிக்க அவசரப்பட்டவர்போல் காணப்பட்டார். ஆதலால் நாற்காலியிலுட்காராமலே "நான் உம்முடன்கூட தூத்துக்குடியிலிருந்து பிரயாணம்செய்தேனே ஞாபகமிருக்கிறதா" என்று கேட்டார். அதற்கு நான் "நன்றாய் ஞாபகமிருக்கிறது. அதை எப்பவும் மறக்காதிருக்கக் காரணமுமுண்டு" என்றேன். அவர் "நானும் மறக்கவேமாட்டேன். அன்றைக்கு முதல் நாளிரவு சமுத்திரக்கரையெல்லாம் அலைந்து திரிந்தேன். தமையனொருவர் படகுமூழ்கி சமுத்திரத்திலிறந்துவிட்டார். அவருடைய தேகம் கரையிலொதுக்கப்பட்டிருக்குமென்று தேடியலைந்தேன். ஆனால் தேகம் கிடைக்கவில்லை. படகில் உடைந்ததுண்டுகள் கரையிலகப்பட்டதால் அவற்றையெடுத்து ஒரு கருப்புப் பையில் போட்டுக்கொண்டு வந்தேன்.

நான்.—"கருப்புப் பையிலா"? உம்மிடம் கருப்புப் பையொன்றிருந்ததா என்ன?

அவர்.—"பொறுத்துக் கேளுங்கள்." உம்மிடம் ஒரு பையிருந்ததைப் பார்த்து அப்பொழுதே அது என் பை போலிருக்கிறது என்று சொல்லிக்கொண்டேன் திருச்சிராப்பள்ளியில் நீர் கீழே யிறங்கினதும் உம்முடைய பைக்குப் பதிலாக என் பையை எடுத்துக்கொண்டு போனீர். உம்முடைய சொக்காயையும் குடையையும் வண்டியிலேயே வைத்துவிட்டிறங்கினீராதலால் திரும்பி வந்துவிடுவீர் என்று சும்மாவிருந்தேன்.

நான்.—ஆமாம், ஆனபோதிலும் நீர்.

அவர்.—"ஒரு நிமிஷம் பொறும். நான் சொல்வதைச் சொல்லிவிடுகிறேன் நீர் என்ன சொல்லவந்தீரென்பது எனக்குத் தெரியும். நான் என் திரும்பவும் உம்மிடம் உமது பையைக் கொண்டுவந்து கொடுக்கவில்லையென்று கேட்கப் போனீர். நான் சொன்னதைக் கேட்டால் விஷயமெல்லாம் புரிந்துபோய்விடும்.

அவரை நான் உட்காரச்சொல்லி நானும் உட்கார்ந்து கொண்டேன்.

அவர்.—கும்பகோணம் வந்ததும் நான் அவசரத்தில் என் பையேயென்று நம்பி என்னருகிலிருந்த பையை யெடுத்துக்கொண்டிறங்கிவிட்டேன். நான் வீடுபோனதும், என் அண்ணன் இறந்ததைக் கேட்டதும் என் அன்னை எவ்வளவு துயரத்திலிருந்தாளோ, அவ்வளவுசோகத்திலேயே அப்பொழுதுமிருந்ததைக் கண்டேன். அங்கிருந்த வைத்தியரிடம் என் தமையன் தேகத்தைக் கண்டுபிடிக்கக் கூடவில்லையென்றும் ஆனால் உடைந்த படகில் சில துணுக்குகளைக் கொண்டுவந்திருக்கிறேனென்றும் சொன்னேன்.

வைத்தியர் இதைப்பற்றி யொன்றுமே என் தாயாரிடம் சொல்லாதிருக்கும்படி உத்திரவிட்டார் ஆதலால் நான் கொண்டுவந்த பையை அப்படியே என்னறையில் பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டு கும்பகோணத்தைவிட்டு சிங்கப்பூருக்கு வியாபார விஷயமாக அவசியமாய் உடனே போகவேண்டியிருந்ததால் அன்றே நாகப்பட்டணத்தில் கப்பலேறிவிட்டேன். அன்று போகாவிட்டால் எனக்கு வீணாகப் பெரு நஷ்டம் வந்திருக்கும். என் தாய்க்கு ஒத்தாசைக்கு என் சகோதரியும் சகோதரி புருஷனுமிருந்ததால் நான் போவதற்கு அவள் தடையொன்றும் சொல்லவில்லை. நான் நாகப்பட்டணம் போய்ச்சேர்ந்த கொஞ்சநேரத்துக்கெல்லாம் கப்பல் புறப்பட்டுவிட்டது. கொஞ்சம் தவறியிருந்தால் அன்று எனக்குக் கப்பல் கிடைத்திராது. நேற்று காலமே தான் திரும்பி ஊருக்கு வந்தேன். வீடுவந்து என் தாயை வணங்கியதும் அவள் என்னைப் பார்த்து தூத்துக்குடியிலிருந்து கொண்டுவந்த பை யெங்கேயென்று கேட்டாள். நான் என் அறையிலிருக்கிறது என்றேன். இங்கே எடுத்துக்கொண்டுவா என்றாள். மறுவார்த்தை பேசாமல் பீரோவைத் திறந்து பையை எடுத்து அவளிடம் கொண்டுவந்து அதைத் திறக்கப்போனபோது என் தாய் "அது உன் பைதானா, நிச்சயமாகச் சொல்லுவாயாடா குழந்தாய்" என்றாள். இதைக்கேட்ட எனக்கு வியப்புண்டாகிவிட்டது. இது என் பையாயிராவிட்டால் நான் என்னையே நம்பமாட்டேன் என்றேன். அதற்கு என் தாய் "அப்பையைக் கொண்டுவந்தபிறகு திறந்து பார்த்தாயா" என்றாள். நான் "இல்லையென்று நிச்சயமாய்ச் சொல்வேன். திறக்க எனக்கு அவகாசமில்லை. அன்றியும் அதைத் திறந்துபார்த்தால் இறந்த அண்ணனுடைய ஞாபகமுண்டாகி எனக்கு விசனத்தையுண்டு பண்ணும் ஆதலால் திறக்கவில்லை" என்றேன். அப்படியானால் ஒரு வேடிக்கை நடக்கப்போகிறது

அதற்குத் தயாராக விரு. நீ வேறு யாருடைய பையையோ எடுத்து வந்துவிட்டாய் என்று என் தாய் சொன்னாள்.

"நான் பதில்சொல்லாமல் பையைத்திறந்து கொண்டிருந்தேன். ஆனால் அந்தப் பூட்டுக்கு நான் வைத்துக்கொண்டிருந்த சாவி சரியாகவில்லை.

"உடனே என் தாய் ஒரு சத்தம் செய்ய இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த போலீஸ்இன்ஸ்பெக்டர் ஒருவர் உள்ளே வந்தார், என்று முடித்தார்.''

என்னுடன் இப்படிப் பேசிக்கொண்டிருந்தவர் வெளியே போய்த் தெருவில் வண்டியிலுட்கார்ந்த ஒருவருக்கு சமிக்ஞை செய்தார். உடனே அவர் வண்டியை விட்டிறங்கி உள்ளே வந்தார். அவர்தான் கும்பகோணம் போலீஸ் இன்ஸ்பெக்டர். அவரும் இதே கதையைச் சொல்லி எனது கருப்புப் பையை மேஜைமேல் வைத்து இதோ ஐயா உமது பை; நீர் ஸ்டேஷனில்வந்து சொன்னது சரிதான். இவர் தவறிப்போய் உம்முடைய பையை எடுத்துக் கொண்டு போய்விட்டார். அன்று இவருடைய தாய் எனக்குச்சொல்லியனுப்பியபோது இப்பை திறக்காமற்றான் இருந்தது. நான்பூட்டையுடைத்துத்திறந்து பார்த்ததும் பையினுள்ளே உம்முடைய பெயர் எழுதியிருக்கக் கண்டேன். சாமான்கள் அப்படியே பத்திரமாக விருக்கின்றன. எடுத்துக்கொள்ளும் என்றார். நான்என்கையிலிருந்த பையைக்கொண்டு வந்து சொந்தக்காரரிடம் ஒப்புவித்தேன். இரண்டுபையும் ஒரேமாதிரி, ஒரேகனமாக விருந்தது. தன் பையைக் கண்டதும் கும்பகோணம் பிரபுவுக்கு மிகுந்த சந்தோஷ முண்டாயிற்று. அந்தப் பையிலிருந்தவைகளை மேஜையின் பேரில் கொட்டினார். அவர் கண்களிரண்டிலும் நீர் ததும்பியது நீர் திவலைகள் சுருண்டு அம்மரத்துண்டுகளின்பேரில் விழுந்தன. "என் அன்னைக்கும் எனக்கும் என் தமயனுடைய அடையாளங்கள் இவைகள்தான். நாங்கள் சகோதரரிருவரும் ஒரே ஜாடை. என்தமயன் சிறுவுரு ஒன்றை என் அன்னை தன் கழுத்திலிடைவிடாது அணிந்திருக்கிறாள். இத்துண்டுகளையும் பூஜிப்பாள் " என்றார்.

நான் அவருடைய சகோதரவாஞ்சையையும், பெருந்தன்மையையும், தவறுதலாய்எடுத்து வந்ததை இன்ஸ்பெக்டருக்கு ரூபித்த அவர் அன்னையின் புத்திமதியையும் மெச்சி, நான் தவறுதலாய்த் தோஷம் சாற்றின குற்றத்தை மன்னிக்கவேண்டி, அவர்களிருவருக்கும் விடை யளித்து என் வியாபாரத்தில் கவனம் செலுத்திவந்தேன்.

## சுகாதார விளக்கம்

### HYGIENE

---

### XII அதிகாரம்

பண்டித நடேசசாஸ்திரியார் எழுதினது

### தொத்துநோய் பிரசமனமும், துர்க்கந்தத்தைப் போக்குதலும்

150. தொத்துநோயை அடக்கல்.—நமது தேசத்தில் வெகு கொடியவைகளாக நாம் கருதியிருக்கின்ற தொத்துநோய்கள், அம்மை, விஷபேதி, பிளேக் இவைகளாம். இவைகளின் தீமையை அரசாங்கத்தார் ஒருவாறு நன்றாக அறிந்துகொண்டு இவைகளுண்டாகும் காலங்களில்,நாம் நடந்துகொள்ளவேண்டிய பலவித முறைகளைப் பற்றியும் ஜனங்கள் தாங்களே செய்யவேண்டிய நிபந்தனைகளைப் பற்றியும் பலவித உத்தரவுகள் பிறப்பித்திருக்கின்றார்கள். அவைகளிலும் இன்னும் ஸுகஸந்தர்சன முறைகளிலும் ஏற்பட்டிருக்கும் முக்கியமான விஷயங்களை நாம் எடுத்துக்காட்டுவோம். எல்லா ஏற்பாடுகளுடைய முக்கிய கருத்து இத்தொத்துநோயின் வித்தைப் பரவவிடாமல் உடனே கண்டிப்பதாம்.

151. தொத்துநோயைக் கண்டிக்கும் ஏற்பாடுகள்.—

1. ஏதாவது தொத்துநோய் என்று சொல்லும் வியாதி உண்டானதும் அதை ஒளிக்காமல் ஜனங்கள் அதிகாரிகளிடம் தெரிவிக்கவேண்டும்.

2. தொத்துநோய் உண்டாய்விட்டதென்பது திண்ணமானவுடன் எவ்விடத்தில் அந்நோய் உண்டாயிற்றோ அவ்விடத்தை இரண்டு மூன்று பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்திற்கும் சில சிப்பந்திகள் ஏற்படுத்திச் சில மருந்துகளையும் கையோடு காவலாக வைத்திருக்க வேண்டும். விசேஷமாய் 5000-ஜனத்தொகை யடங்கிய ஒரு அம்சத்தை ஒரு பாகமாக அதிகாரிகள் பிரிப்பார்கள். ஒவ்வொரு பக்கத்துக்கும் ஏற்படவேண்டிய சிப்பந்திகளைப்பற்றியும் அங்கிருக்கவேண்டிய மருந்துகளைப்பற்றியும் சர்க்கார் உத்தரவுகள் ஏற்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பாகத்துக்கும் வேண்டிய சிப்பந்திகள் ஒரு ஸர்கில் இன்ஸ்பெக்டர்,ஒரு சேவகன், ஒரு தோட்டி. இவர்கள் அடிக்கடி தங்கள் தங்கள் எல்லைகளுக்குள் சுற்றிக்கொண்டும் ஏற்கனவே ஏற்

பட்டிருக்கும் சிப்பந்திகள் மூலமாய்ச் சுகமான வாழ்க்கைக்கு விரோதமாயிருக்கும் குப்பைகூளம், சாக்கடைத்தேக்கம் முதலியவைகளை அகற்றிக் கொண்டும் அப்பாகத்தில் வசிக்கும் குடிகளைச் சாதாரணமாயுள்ள சுகமான வழிகளைச் சரிவர பாதுகாத்துக்கொண்டிருக்கும்படி செய்துமிருக்கவேண்டும். அந்நகரம் முனிசிபாலிட்டியாகவிருந்தால் அச்சங்கத்தின் உத்தியோகஸ்தர்களும் போலீஸ் உத்தியோகஸ்தர்களும் இத்தொத்து நோயை அடக்கமுயன்று வரும் சிப்பந்திகளுக்குத் தங்களால் கூடிய உதவி செய்யவேண்டும்.

152. விஷபேதி உண்டானதும் செய்யவேண்டிய ஏற்பாடுகள்.—ஒருவீட்டில் விஷநோய் உண்டாயிற்று என்ற சங்கதி எட்டினதும் அந்நோயை அடக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள் அவ்வீடுசென்று செய்யவேண்டிய ஏற்பாடுகள் பலவுள. விஷபேதியாகவிருந்தால் நோயாளி வாந்திசெய்த அழுக்குகள், வெளிக்குச் சென்ற மல மூத்திரங்கள் இவைகளையெல்லாம் கார்பாலிக் ஆஸிட் என்ற மருந்துகலந்த ரம்பத்தூள் தூவப்பட்ட சட்டிகளில் பெருக்கித்தள்ளி அவ்வீட்டுக்கு அப்பால் எரிந்துவிட வேண்டும். சில வேளைகளில் ரம்பத்தூள் அகப்படாமற்போனால் உமி அல்லது சாம்பல் இவைகளைக்கலந்து எடுத்து அப்புறப்படுத்தவேண்டும். இம்மஷ்டுக்கள் நன்றாக தீப்பட்டு எரிய கிரோஸீன் என்று சொல்லப்படும் மண்ணெண்ணெய்யை ஊற்றி எரிக்கவேண்டும்.

துணிமணிகள், படுக்கைகள் இவைகளின்மேல் வாந்தியாவது மலமாவது பட்டிருந்தால் அவைகளையும் எரித்துவிட வேண்டும். துணிமணி படுக்கை இவைகளை எரித்துவிட முடியாமற்போனால் அவைகளைப் பரிசுத்தப் படுத்தும்பொருட்டு ஏற்பட்டிருக்கும் மருந்தை நீரில் கலக்கி கொதிக்கும்படி காய்ச்சி, காயும் அவ்வெந்நீரில் இவைகளை யமுக்கி வைத்து இவைகளின்மேல் நின்றவிஷத்தை ஒருவாறு போக்கி இவைகளை அந்நோயாளிகளுக்குத் திரும்பிக் கொடுக்கவேண்டும்.

விஷபேதி சிதறிய கட்டில் முதலிய சாமான்கள் மண்தரை, முதலியவைகளில் ரஸகர்ப்பூரங்கலந்த ஓர் வித திராவகத்தை நன்றாகத் தெளித்து பரிசுத்தம் பண்ணவேண்டும். சாக்கடைகளை நன்றாகக் கழுவி அவைகளில் கொஞ்சம் ரஸகர்ப்பூரம் கலந்த திராவகத்தை ஊற்றவேண்டும். நோயாளி நோய் நீங்கித் தேறினதும் அவன் படுத்திருந்த அறையை நாம் நன்றாக சாஸ்திரப்படி பரிசுத்தம் பண்ணிவைக்கவேண்டும். அவ்வறையின் தரையில் எங்கெங்கு வாந்தியின் மலமொரு காலத்தில் விழுந்திருக்குமோ அவ்விடங்களை எல்லாம் மண்வெட்டி எடுத்து அம்மண்ணை அப்புறப்படுத்தவேண்டும். அது சாத்தியமில்லாத பட்சத்தில் அத்தரையில் வைக்கோல் முதலியவைகளைப் பரப்பி அவ்வைக்கோலால் அவ்வறையைத் தீயிட்டு கொளுத்தவேண்டும்.

153. தொத்துநோய் காலத்தில் கவனிக்கவேண்டிய விஷயங்கள்:—

1. நமது வீடுகளை நன்றாக சுண்ணாம்பு அடித்து நமது வீடுகளின் உட்பக்கங்களிலேயும் வெளிப்பக்கங்களிலேயும் குப்பை கூளங்கள் குவிக்கப்பட்டிருந்தால் அவைகளை வீட்டுக்குச் சமீபத்தில் ஒருபொழுதும் வைக்காமல் அப்புறப்படுத்தவேண்டும். மாட்டுக் கொட்டிலின் அழுக்குத் தண்ணீர், வீட்டின் சாக்கடை நீர் இவைகள் ஒன்றும் தேங்கி நிற்காமல் அப்போதைக்கப்போது அகற்றப்படுவதில் நாம் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

2. இவ்வாறு குப்பை முதலியவைகளை அகற்றிய பிறகு அவைகளிருந்த விடங்கள் நாற்றமடித்துக் கொண்டிருந்தால் அவ்விடங்களைக் கொஞ்சம் ஆழமாகக் கொத்தி நாற்றம் நாறும் மண்ணை எடுத்து அப்புறப்படுத்தி பரிசுத்தமான மண்கொண்டுவந்து கொட்டி அவ்விடங்களை மூடவேண்டும். நாம் முதல் முதல் வெட்டி எடுக்கும் நாற்ற மண்ணை, நல்ல மண் காண்கின்ற வரையில் வெட்டி யெடுக்கவேண்டும்.

3. நாம் நமது வீட்டு உட்பக்கம் வெளிப்பக்கம் இருபக்கங்களிலேயும் சுண்ணாம்படிக்க முடியாத ஏழைகளாக விருந்தால் உட்பக்கத்திலாவது அவசியமடிக்கவேண்டும்.

4. நமது வீடுகளுள் சந்து பொந்துகளில் அடைக்கப்பட்டும் திணிக்கப்பட்டும் சில கந்தைகள், கந்தைத் துணிகளின் மூட்டைகள் இவைகளிலிருக்கலாம். இவைகளை நாம் தூங்குமறையில் குவியாதபடி பாதுகாக்கவேண்டும். ஒன்றுக்கும் உதவாத அதிக கந்தைகளை நாம் எரித்து விடலாம்.

5. வீட்டுக் கதவுகளையும் ஜன்னல்களையும் அடைத்துவைக்காமல் காற்றுப்போக்குக் குறைவில்லாதபடி எப்பொழுதும் திறந்து வைக்கவேண்டும்.

6. நகரங்களில் வசிப்பவர்களுக்குப் பெரும்பாலும் கக்கூசுகள் வீட்டிற்குள்ளேயே யிருக்கலாம்.

அவைகளில் அழுக்கு நிற்காமல் ஒரு நாளைக்கு இரு முறையாவது அவைகள் பரிசுத்தமாகும் வழியை நாம் தேடவேண்டும்.

7. அவ்வாறே நமது வீட்டைவிட்டு வெளியில் ஓடிக் கலக்கும் சிறு சாக்கடைகளையும் தினந்தோறும் இருமுறை சீராகக் கழுவவேண்டும். நமது வீட்டுக்குச் சமீபத்தில் சாக்கடைநீர் தேங்கிநிற்கும் குழிகளையும், கொட்டகையிலிருந்து மாடு முதலிய கால் நடைகளின் மூத்திரம் ஓடிவந்து தேங்கும் குழிகளையும் நாம் அடிக்கடி பரிசுத்தம் பண்ணிவைக்க வேண்டும்.

இவ்வேழு நிபந்தனைகளும் நம்மைச்சுற்றிய ஸ்தலங்களையும் நமது வாஸஸ்தலங்களையும் நாம் பரிசுத்தமாக வைத்துக்கொள்ளும் முறைகளைப் போதிக்கின்றன. இவைகளன்னியில் நாம் நமது சொந்த தேகம், உடுப்பு, உணவு, முதலிய விஷயங்களிலும் வெகு ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும்.

8. தொத்துநோய் வியாபித்திருக்கும் காலத்தில் நாம் நமது தேகத்தை வெகு பரிசுத்தமாக வைத்துக்கொண்டு எல்லா விதத்திலும் பரிசுத்தமான ஆடை உடுக்க வேண்டும். தேகத்துக்கு ஒத்துக்கொள்ளவில்லையென்று ஸ்நானம் செய்யாமலிருக்கக்கூடாது. வெந்நீரிலாவது தினந்தோறும் நாம் குளித்து நமது சரீரத்தை நாம் வெகு பரிசுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

9. நாம் புசிக்கும் ஆகாரம் வெகு சுலபத்தில் ஜீரணித்துக் கொள்ளக்கூடிய ஆகாரமாக விருக்க வேண்டும். அது புஷ்டிகரமாகவும் பரிசுத்தமானதாகவு மிருக்கவேண்டும். வயிற்றுப்போக்கை யுண்டாக்கும் கீரை முதலிய பண்டங்களை நாம் தொத்துநோயுள்ள காலத்தில் புசிக்கலாகாது. இவைகளல்லாது நாம் புசிக்கும் மற்ற காய்கறி பதார்த்தங்களை நாம் நன்றாகக் குழயவிட்டுச் சமைத்துப் புசிக்கவேண்டும். பாதி வெந்ததும் வேகாததுமான சாகங்களை நாம் இக்காலத்தில் புசிக்கவேகூடாது. சமையற்செய்யும் முன்பாக, நாம் அரியும் சாகங்களை நன்றாகக் கழுவி அரியவேண்டும். எப்பொழுதும் நாம் உபயோகிப்பதைவிட தொத்துநோய் பரவியிருக்கும் காலத்தில் வீசம் பங்கு உப்பு அதிகமாக உபயோகிக்கவேண்டும். உப்பு நல்லதென்று அதிகமாக சேர்க்க ஆரம்பித்தால் வயிற்றுப்போக்கு உண்டாகும். நாம் புசிக்க சித்தப்படுத்தும் ஆகாரத்தின்மேல் ஈ, கொசு, முதலியவைகள் வந்து உட்காராத வண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

10. தீர்த்தம்.—விஷபேதி முதலிய தொத்துநோய் பரவியிருக்கும்பொழுதும் அல்லது அந்நோய் சீக்கிரம் சம்பவிக்கலாம் என்ற பயம் உண்டாயிருக்கும்பொழுதும் நாம் உபயோகிக்கும் தீர்த்தத்தில் நாம் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். அசுத்தமான நீரை நாம் ஒன்றுக்கும் உபயோகிக்கக்கூடாது. எதற்கும் சுத்தநீரை உபயோகிக்கும் வழி தேடவேண்டும். நாம் குளிக்கும் நீர், அருந்தும் நீர், உணவுகளைச் சுத்தப்படுத்தும் நீர், தயிர், மோர் இவைகளில் கலக்கும் நீர் இவைகளெல்லாம் வெகு பரிசுத்தமான நீராகவிருக்கும் வழி பார்க்கவேண்டும்.

11. விஷபேதி உண்டாயிருக்கும் காலத்தில் நாம் நமது தேகத்தைப் பரிசுத்தம் செய்துகொள்ளுவதற்கென் றுசாதாரண பேதிக்கு சாப்பிடக்கூடாது. ஏதாவது ஒரு காரணத்தால் நமக்கு மலப்பிரவிருத்தி அதிகமானால் அதை அடக்க நாம் முயலவேண்டும்.

12. இவ்வித ஜாக்கிரதைகளுக் கெல்லாம் மேலாக நாம் மனோதைரியமாக விருக்கவேண்டும். "ஐயோ" எங்கு அந்நோய் நம்மைப் பற்றிக்கொள்ளுமோ என்ற வியாகுலமே கூடாது. அதைப்பற்றி எப்பொழுதும் பேசிக்கொண்டிருக்கின்றவனும் சுகப்படமாட்டான். ஆகையால் அந்நோயைப்பற்றி நினைக்காமலும் அதைப்பற்றி பயப்படாமலும் வெகு அலட்சியமாக விருக்கவேண்டும்.

நாமிதுவரையில் சொல்லிவந்த ஏற்பாடுகள் ஒவ்வொருவித தொத்துநோய் உண்டாகின்ற காலத்திலெல்லாம் நாம் நடத்தவேண்டிய ஏற்பாடுகள்.

154. பிளேக்.—பிளேக் என்பது ஒரு பெரும் தொத்துநோய். ஆதலால் இந்நோய் உண்டாகும் காலத்தில் இவ்வித ஏற்பாடுகளை அனுசரிப்பதுடன் இன்னும் சில அதிகமான நிபந்தனைகளையும் நாம் அனுசரிக்கவேண்டும். அரசாங்கத்தாரும் பலவிதமாய் இந்நோய்க்கு பந்தோபஸ்து செய்திருக்கிறார்கள். பிளேக் என்ற மகாமாரி நேராகவோ அல்லது மறைந்தோ மற்றொரு பிளேக் நோயாளி மூலமாகத்தான் ஒரு புதயிடத்துக்கு வருகின்றது என்று பிரசித்திபெற்ற வைத்தியர்கள் தீர்மானித்திருக்கின்றார்கள். அன்றியும் பிளேக் ஓரிடத்தில் தோன்றினால் அங்கிருந்து ஒரு வஸ்துவும் மற்றவிடங்களுக்குப் போகக்கூடாதென்று ஏற்படுத்திக்கொண் டிருக்கிறார்கள். இவ்வியாதி மற்ற விடங்களில் பரவாமல் தடுக்கப்பட பின்வரும் நிபந்தனைகளைக் கவனிக்கவேண்டும்.

155. பாஸ் போர்ட்.—Passport. மனிதர்

கள், சாமான்கள், இவைகள் ஒவ்வொன்றும்பிளேகாயிருக்கும். அல்லது இருந்தவிடம் இவைகளிலிருந்து பிளேக் நின்ற 10, 15-நாள் வரையில் மற்ற இடங்களுக்குப் போகாமலிருந்தால் அந்நோய் மற்ற இடங்களில் பரவமாட்டாது. ஆனாலிவ்வாறிருப்பது கஷ்டம். முற்றிலும்தடுக்க ஒருபொழுதும் முடியாது. பிளேக் யில்லாதவனைப் பிளேக் பரவியிருக்கும் ஊரைவிட்டு மற்ற ஊருக்குப் போகக்கூடாதென்று எப்படித் தடுக்க முடியும். அவன் அவ்வாறு போகும்பொழுது அதிகாரிகள் அவனுக்கு ஒரு சீட்டு கொடுத்து பிளேக் நோய் பரவியிருக்கும் இடத்திலிருந்து வரப்பட்டவன், அவன் போகும் ஊர் அதிகாரிகள் அவன் மேல் கண்ணோக்கமாகவிருந்து அவன் மூலமாகப் பிளேக் அவ்வூரில் உண்டாகாத வண்ணம் பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்று எச்சரிப்பார்கள். இவ்வாறு வந்தவனை 10-நாள் வரையில் பிரதிதினம் ஜாக்கிரதையாகப் பரிசோதித்து அவனுக்கு அந்தப் பத்து நாட்களுக்குள் ஜ்வரம் முதலிய நோய்கள் ஒன்றும் உண்டாகாத பக்ஷத்தில் அவனாலினி பிளேக் உண்டாகாமாட்டாது என்று நம்பி அவனை நிர்பந்தப்படுத்தாமல் விட்டுவிடுகின்றார்கள். இம்முறைதான் பாஸ்போர்ட் (Passport) முறை என்று சொல்லப்படும். பிரதான நகரங்களில் இவ்வித பரிசோதனைக் கிரமமாக நடக்கும். அதேபிரகாரம் கிராமங்களில் நடக்கமாட்டாதாகையால் அவ்விடங்களுக்காக அதிகாரிகள் செய்திருக்கும் ஏற்பாடுகளைப் பற்றிச் சொல்லுவோம்.

156. சோதனைக் கோட்டங்கள்.—Observation circles. பிளேக் நோய் உண்டாகும் காலத்தில் அந்நோய் அணுகலாம் என்ற பயமிருக்கும் ஒவ்வொரு ஜில்லாவிலும் சோதனைக்கொட்டககள் ஏற்படுத்துவார்கள். குறைந்தபட்சம் பத்துமயில் சுத்தளவுள்ள பிரதேசத்தை ஒரு கொட்டமாகப் பிரித்து அதற்தள் அச்சோதனை நடத்த ஸானிட்டரி இன்ஸ்பெக்டர் (Sanitary Inspector) என்று சொல்லப்படும் அதிகாரியை நியமிப்பார்கள். இவ்வாறு ஏற்படும் நான்கு கொட்டங்களுக்கு மேலதிகாரியாக பிளேக் ஸூபர்வைஸர் என்ற பெரிய உத்தியோகஸ்தனை நியமிப்பார்கள். இவன் இன்ஸ்பெக்டர்கள் செய்யும் வேலைகளை அப்போதைக்கப்போது பரிசோதித்து தனக்கு மேலதிகாரியான ஜில்லா வைத்தியர்மூலமாய்க் கலெக்டர் அல்லது மற்ற அதிகாரிகளுக்கு ரிபோர்ட்டுகள் அனுப்பிக்கொண்டிருக்கவேண்டும்.

157. ஜாகநக சபை.—Vigilance Committee பிளேக் காணும் முன், நாம் வெகு ஜாக்கிரதையாகவிருந்து அது நாமிருக்கும் நகரத்துக்குட்புகாமல் தடுக்கவேண்டுமல்லவா! இவ்வாறு பாதுகாத்துக்கொள்ள புத்திமான்கள் எப்பொழுதும் ஜாகரூப சபை என்று சொல்லப்படும் சபையை இந்நோய் பயமிருக்கும் காலத்தில் ஏற்படுத்திக் கொள்ளுவார்கள். ஒவ்வொருவனுக்கும் தனது தெருவும் அக்கம் பக்கமும் அதிகமாகத் தெரிந்திருக்குமாகையால் 200-வீடுகளுக்குள் ஒருவனை அவ்விருநூறு வீடுகளுக்கும் ஜவாப்தாரியாக பொறுக்கி ஜாகரூப சபையில் அவனை ஒருவனாக நியமிப்பார்கள். இவன் வேலையென்னவெனில் இவனுக்குச் சோதனைக்காகவென்று கொடுக்கப்பட்டிருக்கும் 200-வீடுகளுக்குள் ஓர்வித நோயுமில்லையா, பிளேக் பிரதேசங்களிலிருந்து ஒருவரும் வரவில்லையா என்று பரிசோதித்துக்கொண்டும், அப்போதைக்கப்போது ரிபோர்ட்டுகள் செய்துகொண்டுமிருப்பதேயாம். இவர்கள் செய்யும் வேலையானது லோகோபகாரமாக செய்யும் சம்பளமில்லா வேலையாகையால் இவ்வேலையில் நியமிக்கப்படுகின்றவர்கள் தங்கள் நற்குணங்களுக்கும் நல்ல நடத்தைக்கும் பெயர் பெற்றவர்களாகவிருக்கவேண்டும்.

158. கப்பலை விலக்குதல்.—நிலத்தின் வழியாக வரும் பிரயாணிகளைப் பரிசோதிப்பதுபோல கப்பலேறி வரும் பிரயாணிகளைப் பரிசோதிக்க பல முறைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் சென்னை ராஜாங்கத்தார் இதற்காகவென்று அச்சிட்டிருக்கும் பிளேக் நிபந்தனை புஸ்தகத்தில் * அறிந்துகொள்ளலாம். நமது ராஜதானியின் ஸானிடெரி கம்மிஷனராயிருந்த டாக்டர் கிங் இயற்றியிருக்கும் பிளேக் இன்ஸ்பெக்டர் புஸ்தகத்திலும் * நாம் தெரிந்துகொள்ளலாம். மேற்கூறிய புஸ்தகங்களில் பிளேக் உண்டாகும் காலத்தில் ஏற்படவேண்டிய வைத்திய சாலைகள், அவைகளில் கையோடு வைத்திருக்கவேண்டிய ஔஷதங்கள், ஒவ்வொரு நோயாளிக்கும் நாம் நடத்தவேண்டிய சிகிச்சை இவைகள் எல்லாவற்றையும் சாங்கோபாங்கமாய்ச் சொல்லியிருக்கின்றார்கள்.

159. அதிகாரிகள் வீடுகளைப் பரிசுத்தஞ் செய்தல்.—பிளேக் உண்டாகும் காலத்திலும் உண்டாகி நம்மை வருத்தும் காலத்திலும் நமது வீடுவாயில் முதலியவைகளை அதிகாரிகள் பரிசுத்தஞ் செய்வார்கள். அதற்கு நாம் உட்படவேண்டும் இந்நோய் பிரபலமாயிருக்கும்பொழுது வீடுதோறும் அதிகாரிகள் வந்து பரிசோதிப்பார்கள். அதற்கும் நாம் ஆக்ஷேபிக்கக் கூடாது.

160. பிளேகில் மாண்டபிணம்.—இதை எரிப்பதேதான் மற்றவர்கள் சௌக்கியத்திற்கு ஒருவித குறைவையும் உண்டாக்காது. ஆனால் இதை எல்லா மதத்தார்களும் ஒப்புக்கொள்ள மாட்டார்களாகையால் எரிக்கமுடியாத பிணங்களைப் பூமியின் அடிகளுக்குக்கீழ் மருந்துகளுடன் புதைக்கவேண்டும்.

---

* இப்புத்தகங்களை கவர்ன்மெண்டு அச்சயந்திரசாலையிலும், அடிஸன் கம்பெனியிலும் வாங்கலாம்.

# இயற்கை அற்புதங்கள்

## WONDERS IN NATURE

### XII. வாயு

### AIR

ஓர் பாத்திரத்தில் இருக்கும் தண்ணீரைக்கொட்டி விட்டால் அதில் ஒன்றும் இல்லையென்று நாம் சொல்லுகிறோம். ஒரு அறையிலிருக்கும் வஸ்துக்களை அப்புறப்படுத்திவிட்டால் அதில் ஒன்றும் இல்லையென்று சொல்லுகிறோம். இது ஸாதாரணமாக நாம் சொல்லுவது; நன்றாய் யோசித்துப்பார்த்தால் இங்கு ஒன்றும் இல்லையென்று கூறுவது அவ்வளவு ஸரியல்லவென்று தோன்றும். ஓர் விசிறி எடுத்து விசிறிக்கொண்டால் அந்த அறையில் இருக்கும் ஏதோ ஒரு வஸ்து நமதுமேல் பட்டுக்கொண்டு ஓடுவதை உணருகிறோம். அந்த வஸ்து முன்னர் அசையாது சலனமற்று இருந்தது. அது கண்ணுக்குப் புலப்படாத வஸ்துவாகையால் நம்மைச்சுற்றி ஒன்றும் இல்லை என்றிருந்தோம். அது அசையும் காலத்தில் நமது மேலே பட நமக்கு ஸ்பர்ச உணர்ச்சி உண்டாகின்றது. உடனே நம்மைச்சுற்றிக் கண்ணுக்குப் புலப்படாமல் ஓர் வஸ்து இருக்கின்றது என்பது வெளியாகின்றது. இதுதான் வாயுவென்பது. அசையும் வாயுவிற்கே காற்று என்று பெயர்.

நம்மைச்சுற்றி இருக்கும் வாயு அசையாமல் இருக்கும்பொழுது வேறு வஸ்துவின் ஸஹாயமின்றி நாம் நமது கைகளை வீசுவதாலேயே வாயுவில் அசைவை உண்டாக்கி அந்த வஸ்து இருக்கின்றது என்பதை ஸ்பர்ச உணர்ச்சியால் அறியலாம். மேலும் ஒன்றுமில்லாத வாய் குவிந்த பாத்திரம் ஒன்றில் தண்ணீர் மெதுவாக உள்ளே போகும்படி முகர்ந்தால் அதன் உள் இருக்கும் வாயு பிடித்திருக்கும் நமது கைவிரல்கள் மேல் பட்டுக்கொண்டு ஓடுவதையும் அதுகுளிர்ச்சியாக இருப்பதையும் உணரலாம். இம்மாதிரி கண்ணுக்குப்புலப்படாத வாயு என்ற ஒருவஸ்து நம்மைச் சுற்றியிருக்கிறது என்பதை நாம் அறியலாம். இதுவும் அல்லாமல் வெறும் பாத்திரத்தில் உள்ளவாயு ஓடுவதை ஓர் சோதனையின்மூலமாகக் கண்ணாரக் காணலாம். ஓர் வாய் குவிந்த பாத்திரம் ஒன்றை தலைகீழாக ஓர்வாய் அகன்ற பாத்திரத்திலிருக்கும் தண்ணீருள் அமிழ்த்திவிடுவோம். பின்னர் அந்த வாய் குவிந்த பாத்திரத்தை மெதுவாய் நிமிர்த்த முயலுவோம். அப்பொழுது மெதுவாகக் குமிழிகள் தண்ணீர் உள்ளிருந்து மேலே கிளம்புவதைக் காணலாம். ஓர் ஓட்டைச்சொப்பை இம்மாதிரி தண்ணீருள் அமிழ்த்தினால் ஓட்டைவழியாய் கோர்வையான சிறு குமிழிகள் மேலேகிளம்பும். இக்குமிழிகளே பாத்திரத்துள் இருக்கும் வாயு. இந்தச் சோதனை மூலமாக நாம் ஸாதாரணமாக வெறும் இடம் என்று சொல்லும் இடங்களில் எல்லாம் கண்ணுக்குப் புலப்படாத வாயு வொன்றிருக்கிறது என்பது வெளியாகும்.


இந்த வாயு ஓர் வஸ்து என்பதைப் பின்வரும் சோதனை மூலமாக எளிதில் அறியலாம். ஓர் போலான கண்ணாடி பந்து, அதன் உட்புறத்தோடு ஸம்பந்தப்பட்ட ஓர் குழாயும், அதை மூடவும் திறக்கவுங்கூடியதுமான ஓர் அடைக்கும்கருவியும், உடையதாக இருக்கட்டும். அதை வாயு எடுக்கும் யந்திரத்தோடு ஸம்பந்தப் படுத்தவேண்டிய திருக்கும், அதை தராசில் தொங்கவிடுவதற்கு வேண்டிய கொக்கியும் தயாராக இருக்கட்டும். முதலில் இந்தப்பந்தை வாயு எடுக்கும் யந்திரத்தில் முடுக்கி அடைப்புக் கருவியைத் திறந்துவிட்டு இதனுள் இருக்கும் வாயுவைக் கூடியவரையில் எடுத்துவிடுவோம். பின்னர் அடைப்புக் கருவியை மூடிவிட்டு பந்தைஎடுத்து கொக்கியை மாட்டி ஓர் தராசில் தொங்கவிட்டு தராசைத் தகுந்த கனம் இட்டு ஸமமாக்குவோம். பந்தின் கனம் இவ்வளவு என்பது தெரியும். இப்பொழுது பந்தை எடுத்து கொக்கி நீக்கி அடைக்கும் கருவியைத் திறப்போம். உடனே புஸ் என்ற சப்தம் கேட்கும். இதுதான் வாயுவில்லாத பந்துள் வாயு புகும்பொழுது உண்டாகும் சப்தம். இந்தச் சப்தம் அடங்கியதும், முன்போல கொக்கியைமாட்டி தராசிலிருந்து பந்தைத் தொங்கவிடுவோம். உடனே பந்துமாட்டியபக்கம் தராசு கொஞ்சம் இறங்கும். இதனாலே பந்தின்கனம் அதிகமாகிவிட்டது என்பது வெளிவரும். இது வாயு உள்ளே புகுந்ததால் உண்டானமையால் வாயுவுக்கு மற்றைய வஸ்துக்களைப்போல கனம் உண்டென்பது தெரிய வருகிறது. ஆகையால் வாயுவும் ஓர் வஸ்துதான். அது கண்ணுக்குப் புலப்படவில்லையே ஒழிய வஸ்துவுக்குரிய மற்றைய லக்ஷணங்கள் எல்லாம் அதற்கு இருக்கின்றன.

வாயுவுக்கு எல்லாப் பக்கங்களிலும் அமுக்கும் சக்தி இருக்கிறது. இதை நாம் எளிதில் உணரலாம். ஒரு சிறிய பாத்திரத்தை நமது வாயின் மேல் கவிழ்த்துக்கொண்டு அதன் உள்ளிருக்கும் வாயுவை உருஞ்சி விடுவோம். இங்கு நமது வாயே வாயு எடுக்

கும் யந்திரத்தின் தொழிலைச் செய்கின்றது. உடனே அந்தப் பாத்திரம் வாயில் ஒட்டிக்கொள்கிறது. இதனுடன் அண்ணாந்து பார்ப்போம். பாத்திரம் வாயைவிட்டு எடுபடாது. நேராக முன்புறம் முகத்தைத் திருப்புவோம், அப்பொழுதும் பாத்திரம் எடுபடுவதில்லை. கீழே நன்றாகக் குனிந்து விடுவோம். அப்பொழுதும் பாத்திரம் விழுவதில்லை. வேறு எந்தப் பக்கம் திரும்பினாலும் ஸரி, பாத்திரம் ஒட்டிக்கொண்டே இருக்கின்றது. இதனால் சுற்றி இருக்கும் வாயு எல்லாப் பக்கங்களிலும் அமுக்கும் திறனுடையதென்றும், அதனால்தான் எங்கு நோக்கியபோதிலும் வாயில் ஒட்டிக்கொண்டிருக்கும் பாத்திரம் விடுபடாது நிற்கின்றது என்றும் வெளியாகின்றது. இந்தச் சோதனையில் பாத்திரத்தை வாயிலிருந்து இழுத்துவிடுவது கஷ்டம். நன்றாக அதன் உள்ளிருக்கும் வாயுவை உறிஞ்சிவிட்டோமாகில் பாத்திரத்தை எடுக்கும்பொழுது வாயின் சதையைக்கூட அது இழுத்துக்கொண்டு வந்துவிட்டாலும் வரும். பாத்திரத்தை லகுவாக எடுக்கவேண்டுமானால் நாம் அதன் உள் வாயுவை விடவேவேண்டும். உடனே பாத்திரம் வாயில் நிற்காது கீழே விழுந்துவிடும்.

வாயு மேல் நோக்கி அமுக்குகிறது என்பதை ஓர் அற்புதச் சோதனையாலும் வெளிப்படுத்தலாம். ஓர் வாய் குறுகலான பாத்திரம் ஒன்றை எடுத்து அது நிறையும்படி தண்ணீரை விடவும். அதன் வாயை ஓர் காகிதத்தால் மூடிவிட்டு அந்தக் காகிதத்தை உள்ளங்கையால் அமுக்கிக்கொண்டு மெதுவாக அந்தப்பாத்திரத்தைக் கவிழ்க்கவும். பின்னர் மெதுவாக உள்ளங்கையை எடுத்துவிடலாம். பாத்திரத்திலிருக்கும் தண்ணீர் ஒரு பொட்டுகூடக் கீழே விழாது. வாயு தனது மேல் அமுக்கும் சக்தியால் தண்ணீரைக் கீழே விழவொட்டாமல் தடுக்கின்றது.

முன் செய்த சோதனையில் தண்ணீருடன் இருக்கும் பாத்திரத்தை ஓர் தண்ணீர் நிறைந்த தொட்டியில் கவிழ்த்து அதன் வாய் தண்ணீருள் போன உடன் அதன் வாயிலிருக்குங் காகிதத்தை எடுத்துவிடுவோம். பாத்திரத்திலிருக்கும் தண்ணீர் தொட்டியில் கொட்டிவிடுவதில்லை. தொட்டித் தண்ணீர் மட்டத்திற்குமேல் பாத்திரத்துள் தண்ணீர் நிற்கின்றது தண்ணீர் ஸாதாரணமாக இவ்வாறு குவிந்து நிற்காது இங்கு தண்ணீரை நிறுத்திவைப்பது வாயுவின் அமுக்கும் சக்தியே. இப்பொழுது முன்னதைவிட அதிக உயரமான பாத்திரத்தைக் கொண்டு முற்கூறியபடி செய்வோம். இதிலும் முற்கூறியவாறே தண்ணீர் நிறைந்திருக்கும். இவ்வாறு 34-அடிக்குள் எவ்வளவு உயரமான பாத்திரத்தில் சோதனை பார்த்தபோதிலும் தண்ணீர் உள்ளேயே நின்றுகொண்டிருக்கும். ஆகவே இவ்வளவு உயரத்தைத்தாங்கும் சக்தி வாயுவுக்கு இருக்கிறது.




முற்கூறிய சோதனையைப் பாதரஸத்தைக் கொண்டு மூன்றடி நீளக் கண்ணாடிக் குழாய் பாத்திரத்துள் செய்து பார்த்தால் அதில் மூன்றடி உயரம் பாதரஸம் நிற்பதே இல்லை. அந்த ரஸம் 30-அல்லது 29½-அங்குலத்திற்கு இறங்கி விடுகின்றது. 30 அங்குலத்தைவிட குறைவான குழாயுள் முற்கூறிய சோதனையைச் செய்து பார்த்தால் பாதரஸம்குழாய் முழுவதும் நிறைந்திருக்கும். அதைவிட எவ்வளவு உயரமான குழாயுள் செய்துபார்த்தபோதிலும் பாதரஸம் 30-அங்குலத்திற்கு இறங்கி விடுகின்றது. ஆதலால்30-அங்குலம் உயரமுள்ள பாதரஸத்தைத் தாங்கும் சக்தியோடு வாயு அமுக்குகின்றது என்பது தெரியவருகிறது.

இன்னும் நுட்பமாகவும் இந்த அமுக்கும் சக்தியை அளவிடலாம். ரஸத்தை வெடியுப்பு திராவகத்தால் நன்றாக சுத்தம் செய்து 1-சதுர அங்குலம் குறுக்கு அளவுள்ள 3-அடிக்குழாயுள் நிரப்பி அதில் வாயுக்குமிழிகள் இல்லாது உஷ்ணத்தால் செய்து முற்கூறிய சோதனையை நடத்தினால் ரஸம் 29½-

அங்குலம்வரை இறங்கிவிடும். இந்தக் குழாயின் வாயை மூடிக்கொண்டு வெளியே எடுத்து உள்ளே இருக்கும் பாதரஸத்தை ஜாக்கிரதையாகத் தவறவிடாது எடுத்து தராசில்போட்டு நிறுத்தால் 15-பவுன் கனம் இருக்கும். ஆதலால் வாயு ஓர் சதுர அங்குலத்தின் மேல் 15-பவுன் கனத்தோடு அமுக்கின்றது. (எந்தக் குழாயை வைத்துக்கொண்டு இந்தச்சோதனையைச் செய்தாலும் கணித மூலமாக இதே முடிவைக் கண்டு பிடிக்கலாம்.) மாக்டிபர் (ஜர்மனி தேசத்தில் ஓர் பட்டணம்) என்னுமிடத்தில் ஓர் பிரகிருதி தத்வ சாஸ்திரி இரண்டுபோலான 12-அடி குறுக்களவுள்ள அரைக்கோளங்கள் செய்து அவைகளை ஒன்றோடொன்று வாயு புகவொட்டாது பொருத்தி அதனுள் இருக்கும் வாயுவை, வாயு எடுக்கும் யந்திரங்களால் எடுத்துவிட்டார். அவைகளைப் பிரிக்க இருபக்கங்களிலும் ஸுமார் 20-குதிரைகளைக் கட்டி இழுக்க வேண்டி வந்தது. இந்தப் பாரத்தின் அடியில் நாம் பிறந்தது முதல் இருந்து கொண்டிருக்கிறபடியால் நமக்கு இதன் அளவு இவ்வளவு என்று தெரியாமல் இருக்கின்றது.


தண்ணீர் நிறைந்திருக்கும் ஓர் இடத்தில் வாயு சென்று தங்குமாயின் அதனுள் இருக்கும் தண்ணீரை வெளியே போகும்படி செய்யும். இந்த விஷயத்தினாலும் (தண்ணீர் நிறைந்த பாத்திரத்துள் போடுங் கற்கள் எவ்வாறு தண்ணீரைவெளியே வழிந்தோடும்படி செய்கின்றனவோ அவ்வாறு செய்வதனாலும்) வாயுவை ஓர் வஸ்துவென்று சொல்லலாம். இதைப் பின்வருமாறு நிரூபணம் செய்யலாம். ஓர் சொம்பை ஓர் தண்ணீரிருக்கும் தொட்டியில் மொண்டு தலைகீழாகத் தண்ணீருள் உயர்த்திப் பிடித்துக் கொள்ளுவோம். வேறொரு சொம்பைத் தலைகீழாகக்கொண்டுபோய் மெதுவாக அதைத் தண்ணீர் நிறைந்திருக்கும் சொம்பின் அடியில் நிமிர்ப்போம். குமிழிகளை எல்லாம் தண்ணீர் நிறைந்த சொம்புள் பிடிப்போம். அடிப்பாத்திரத்தை நன்றாக நிமிர்த்ததும், மேல் சொம்பை எடுத்துப் பார்த்தால் அதனுள் தண்ணீர் குறைந்தும் வாயு புதிதாக நுழைந்தும் இருக்கும். அடிச்சொம்பிலிருந்துவந்த வாயு மேற்சொம்பில் தங்கி அதிலிருந்த தண்ணீரை வெளியே தள்ளிவிட்டது. இந்தச் சோதனையைக் கண்ணாடிப் பாத்திரங்களோடு செய்தால் வாயு ஏறுவதையும் தண்ணீர் குறைவதையும் கண்ணாரக் காணலாம்.

வாயுவுக்கு அமுக்கினால் அமுங்கவும், விட்டுவிட்டால் பழைய ஸ்திதிக்கு வரவும் கூடிய சக்தி உண்டு. ஓர் கண்ணாடிப் பாத்திரத்தை வேறோர் கண்ணாடிப் பாத்திரத்துள் இருக்கும் தண்ணீரில் நேராய்க் கவிழ்த்து அமிழ்த்தினால், அதனுள் இருக்கும் வாயு தண்ணீரை உள்ளே வரவிடாது. ஆனால் அதை அதிக ஆழம் அமிழ்த்தினால் அதனுள் கொஞ்சம் தண்ணீர் ஏறும். மேலே உயர்த்த உயர்த்த உள்ளே ஏறும் தண்ணீர் குறையும், கீழே போகப்போக அது அதிகம் ஆகும். இதுவே முற்கூறிய வாயுவின் குணத்தைக் காட்டுகிறது.

வாயு கனம் உடைய வஸ்து. அது அமுக்கினால் அமுங்கவும், பின்னர் விட்டுவிட்டால் முன் நிலைக்கு வரவும் கூடிய சக்தியும் இருக்கின்றது, என்ற இவ்விரண்டையும் சேர்த்து நோக்கில் வாயு நம்மைச் சுற்றி இருக்கும்விதம் இவ்வாறு என்பதை உணரலாம். இது தெளிவாக இருப்பதற்கு ஒரு திருஷ்டாந்தம் எடுத்துக்கொள்ளுவோம். பஞ்சு கனமுள்ளது. அமுக்கினால் அமுங்கும் திறனுடையது. பஞ்சு அடைத்த தலையணைகள் அநேகம் எடுத்து ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைப்போம். அடியிலிருக்கும் தலையணையில் பஞ்சு மிக அடர்த்தியாயும் மேலே போகப்போக பஞ்சின் அடர்த்தி குறைந்தும் இருக்கும். இதுபோல பூமிமட்டத்தில் உள்ள வாயுவுக்கு அடர்த்தி அதிகம்; மேலே போகப்போக வாயுவின் அடர்த்தி குறைந்துகொண்டே போகின்றது. வெகு உயரம் போனால், வாயு அடர்த்தி அதிகம் இல்லாமல் போக வாயு பரந்துகிடக்கும். 500-மைல் உயரத்திற்கு மேல் வாயுவே இல்லாத வெறும் வெட்டவெளி என்று வேறு தோற்றங்களால் தெரியவருகின்றது.

இவ்வித குணங்களை உடைய வாயு எந்த வஸ்துக்களை அடக்கி உள்ளது என்பதைக் கவனிப்போம். இந்த விஷயத்திற்காகச் சில சோதனைகள் செய்து பார்ப்போம்.

வாய் அகன்ற கண்ணாடித் தொட்டியில் 6-அங்குலம் ஆழம் தண்ணீரை விடுவோம். அதன் மேல் ஒரு சிறிய பீங்கானை மிதக்கவிட்டு அதில்



கொஞ்சம் பெரிதான நிபாக்கினி என்னும்வஸ்துவை வைப்போம். (இவ்வஸ்துவை எப்பொழுதும் தண்ணீரிலேயே வைத்திருப்பது. இதைத் தண்ணீரை விட்டு எடுத்து வெளியில் வைத்தால் வெள்ளைப்புகை இதில் இருந்துவரும். இதன்மேல் இருக்கும் தண்ணீர்மறைந்ததும் தீப்பற்றிக்கொண்டு மஞ்சள் வெளிச்சத்தோடும் வெள்ளைப் புகையோடும் இது எரியும். ஆதலால் இதைத் தண்ணீர் அடியிலேயே வெட்ட வேண்டும். இது நமது கையில் படவேகூடாது). மெதுவாக இதை ஏற்றிய ஊதுவத்தியால் கொளுத்திவிட்டு இதன்மேல் உயர்ந்த கண்ணாடிப் பாத்திரம் (சுவர் விளக்கினது வாய் அகன்ற கண்ணாடியின் குறுகியவாய் நல்ல சடையால் மூடப்பட்டிருந்தாலும் போதும்) ஒன்றைச் சாக்கிரதையாக நிபாக்கினியின்மேல் கவிழ்த்துத் தண்ணீரின் அடிப்பாகத்திற்கு மெதுவாகக்கொண்டு போவோம், உள்ளிருந்து குமிழிகள் வெளியில் வாராதிருந்தால் நலம். பாத்திரத்தில் வெள்ளைப்புகை நிறைந்து விடுகின்றது. கொஞ்ச நாழிகையில் உள்ளே இருக்கும் நிபாக்கினியும் அணைந்துவிடுகின்றது. உடனே தண்ணீர் கண்ணாடிப் பாத்திரத்துள் ஏறிவிடுகின்றது. ஸுமார் அரைமணி கழித்து இதை நோக்கினால் புகை எல்லாம் தண்ணீருள் கரைந்து மறைந்து போக பாத்திரம் முன்போல ஆகிவிடும். ஆனால் 5-பாகம் அதனுள் தண்ணீர் ஏறியிருக்கும். அதன்வாயை மூடிக்கொண்டு அதை வெளியில் எடுத்து நிமிர்த்தி, அதனுள் ஓர் மெழுகுவத்தி விளக்கை விட்டால் அது அணைந்துவிடும். ஆனால் ஸாதாரண பாத்திரத்தில் அது அணையாது எரிகின்றது. இதனால் வாயுவில் இரண்டு ஆவிகள் இருக்கின்றன. நிபாக்கினியால் நீக்கப்பட்டதாயும் வாயுவில் ஐந்தில் ஒருபங்காக இருப்பதாயும், எரியும் வஸ்துக்களை எரிய இடங்கொடுக்கும்படியானதாயும் உள்ள ஆவி ஒன்று. அதற்கு பிராணவாயு என்றுபெயர். மற்றொன்று மிகுதி இருப்பதாயும் வாயுவில் 5-இல் 4-பங்காகியும் உள்ள, வஸ்துக்களை எரியவொட்டாது அணைக்கும் ஆவி. அதற்குஉப்புவாயு என்றுபெயர். இவ்விரண்டுதான் வாயுவில் பெரும்பாலும் இருப்பது. இவ்விரண்டும் தவிர பனி உண்டாகும் சோதனையிலிருந்து வாயுவில் நீராவி கொஞ்சம் இருக்கின்றதென்றும், வெள்ளையடிக்கக் கரைத்து வைத்திருக்குஞ் சுண்ணாம்பின் மேலே உண்டாகும்தெளிவான சுண்ணாம்புத் தண்ணீரின்மேல் காணப்படும் வெண்மையான ஏட்டால் வாயுவில் கொஞ்சம் கரியமலவாயும் இருக்கின்றது என்பதும் வெளியாகின்றது.

ஆகவே வாயுவில் பெரும்பாலும் பிராணவாயுவும், உப்புவாயுவும், சிறுபான்மை நீராவியும் கரியமலவாயுவும் இருக்கின்றன.

### மஹான்களும் ஸித்திகளும்.—

சுத்த ஹிருதயம் உடைய மஹான்களிடத்தில் இந்தப்பக்தியின் சக்தியை நன்றாகக் காணலாம். வருவன கூறல், அற்புத மருந்துகள், தம்மை அறியாமல் வெளிவரும் உண்மை வாக்கியங்கள், மெய்ம்மறந்து கூறல், இவைபோன்ற அற்புத சக்திகள் சுத்தாத்மாக்களுக்கு எதிர்ச்சையாய உண்டாவது. இப்பெரியோர்கள் உலகத்தில் வாழ்வதே அற்புதம். மற்றைய ஜீவராசிகள் எவ்வாறு நாளைக்கு என்ற எண்ணமின்றி வாழ்கின்றனவோ அவ்வாறே இவர்களும் மறைவாக இருக்கும்படியான ஓர் சக்தியின் வைபவத்தால் காப்பாற்றப்பட்டு வாழ்கின்றனர் என்பது இவர்களது நடத்தையை உற்று நோக்குவோருக்கு விளங்கும். மனது அசுத்தப்பட்டதும் இந்தச் சிறப்பெல்லாம் இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிப் போயவிடும். மஹானுக்குத் தாம் அற்புதச்செயகைகள் செயகிறோம் என்ற எண்ணம் வந்ததும் உடனே மனம் அசுத்தமாகிவிடும். சக்திகளும் அவரை விட்டகலும். அப்பொழுது அவர் முன்போல மஹானாக விளங்கவேண்டும் என்று எவ்வளவு பாடுபட்டபோதிலும் முன் இருந்த சக்தி அவரிடம் நிலையாது மோசம் செயதுவிடுகின்றது. சக்தி போனபின்புகூட அவன் முன் இருந்த கீர்த்தியை வஹிக்க முயலுகிறான். இதனால்தான் உலகில் அநேகம் வேஷ ஸந்யாஸிகள் உண்டாகின்றனர். புத்திமான்கள் இதை அறிந்து தமது சக்தியால் கீர்த்தி தமக்கு வரவேண்டும் என்ற எண்ணத்தை ஒருநாளும் தமது மனதில் புகுந்துகொள்ள இடங்கொடுப்பதே இல்லை. அவர்கள் தமது சக்தியால் வரும் கீர்த்தியைத் தாம் அங்கீகரிப்பதில்லை. மனதார அவை பகவானது லீலை என்று எண்ணி அதைப் பகவானது பாரமாக விட்டுவிடுவார்கள். அவர்களுக்குத் தமது வாக்கு உண்மையாகவேண்டுமே என்ற கவலை ஒருபோதும் கிடையாது. பிரம்மமாகி இருக்கும் மஹான்களது மனத்தை எப்படிப்பட்ட சக்தியாலும் ஸரி கீழே இழுக்கவல்லது அல்ல.'

# கோயமுத்தூர் வியவசாய காலேஜும் சோதனைப் பண்ணையும்

**THE AGRICULTURAL COLLEGE AND FARM : COIMBATORE**

சென்னைக்குச் சமீபத்தில் சைதாப்பேட்டையிலிருந்த இந்தக் காலேஜைக் கோயமுத்தூருக்கு மாற்ற வேண்டுமென்று கவர்ன்மெண்டார் தீர்மானித்து 1906-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 24-ம் தேதி அஸ்திவாரக்கல்நாட்டி வேலை துவக்கினார்கள். இந்தக் காலேஜ் கட்டிடத்திற்கு மட்டும் ரூபாய் 4,47,000 செலவாயிருக்கிறது. சோதனைப் பண்ணைக்காக இக் கட்டிடத்தை யடுத்து நஞ்சைப்பயிர்கள் விளையத்தக்கதும், தண்ணீர் இறைத்து தோட்டப்பயிர்கள் விளைவிக்கக்கூடியதும், மழையடித்துப் பயிராக்கக்கூடியதுமான பூமிகள் 457½ ஏகரா வாங்கப்பட்டிருக்கின்றன. காலேஜ் கட்டிடமும், சோதனைப் பண்ணை பூமிகளும், உபாத்தியாயர்களும் மற்ற சிப்பந்திகளும் வசிக்கக் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களும், மாணாக்கர்கள் வசிக்கக் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்களும் சேர்ந்து செலவு எட்டு இலக்ஷத்திற்கு அதிகமாகிறதென்று தெரியவருகிறது. இன்னும் முழு வேலையும் முடிவதற்குள் செலவு பத்து இலக்ஷத்திற்கு எட்டிப்பார்க்கலாமென்ற எண்ணப்படுகிறது.

இவ்வளவு பெருந்தொகை செலவழித்து வியவசாயத் தொழில் முறைகளை இந்து வியவசாயிகளுக்குக் கற்பிக்கவேண்டுமோ? இந்துக்கள் இன்று நேற்று வியவசாயத்தொழிலிற் பிரவேசித்தவர்களல்லவே! பல தலைமுறைகளாய் இத்தொழிலைச் செய்து வருவதின் அனுபவப்பயனாய் ஒருவித வியவசாய முறைகளை அனுசரிப்பவர்களாயிற்றே! அவர்களை நூதன முறைகளை யனுசரிக்கும்படி தூண்டுவது சாத்தியமா வென்றும், ஆங்கிலேய வியவசாய நிபுணர்களுக்கும் இந்தியாபோன்ற உஷ்ணதேசங்களில் ஸ்தாவரப்பொருள்களின் வளர்ச்சியையும், அவைகளுக்கேற்ற உணவையும் பற்றிய விபரங்கள் சோதித்தே அறியவேண்டி யிருக்கின்றனவே! அப்படியிருக்கையில் இத்தேச வியவசாயிகள் தங்கள் அனுபவத்தினல் கர்ண பாரம்பரியமாய்ச் செய்துவந்த கைகண்ட முறைகளைத் திடீரென்று மாற்றுவதும் கூட நிதானமாய் யோஜித்துச் செய்யவேண்டியதாயிருக்கின்றதே யென்றும், சந்தேகிப்பதுடன், இதைவிட ஆங்கிலேயர்கள் விசேஷமாய்த் தேர்ந்த தொழிலாகிய வர்த்தகமுறைகளை இந்துக்கள் செவ்வையாகக் கற்றறியும்படி வர்த்தகக் காலேஜ் ஒன்றை ஏற்படுத்த ஏன் கவர்ன்மெண்டார் பின்வாங்குகிறார்கள் என்றும் பலர் பிரசினை செய்கிறார்கள்.

பாடத்தெரியாதவனும் நன்றாகப் பாடுகிற பாகவதரிடத்தில் குற்றம் கூறுகிறான். பிரசங்கம் செய்யவறியாதவனும், தாஷ்டியாகப் பிரசங்கம் செய்கிறவரிடத்தில் குறை சொல்லுகிறான். கட்டிடவேலையின் நுட்பங்களை யறியாதவனும் கட்டின வீட்டுக்குப் பணிக்கை ஏற்படுத்துகிறான். இது மனிதர் இயற்கை.

கவர்ன்மெண்டார் எந்தக் காரியத்தைச் செய்ய ஆரம்பித்தபோதிலும், தகுந்த நிபுணர்களிடத்தில் யோசனைசெய்தே ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறார்கள். பெருந்தொகை செலவிடாவிட்டால் பெரும் காரியங்கள் செய்யமுடியாது. காலேஜ் கட்டிடத்திற்குள் வேண்டிய விடங்களில் ஜலம் குழாய் மூலமாய்க் கிடைக்கவேண்டிய அவசியத்தைக்குறித்தே பலவிடங்களில் குழாய்கள் வைத்தும் மெத்தையின் மேல்சிகரங்களில் எட்டு இரும்புத் தொட்டிகள் வைத்து அவைகளில் எப்பொழுதும் இரண்டடி ஜலமிருக்கும்படி செய்ய நேரிட்டது. வேளாண்மைக்கு அவசியமான எருவை ரசாயன சாஸ்திர மூலமாய்ப் பரிசோதித்து அறிவதற்காகவே அவற்றிற்குத் தகுந்தமாதிரியான கட்டிட அறைகளும், ரசாயனங்கள் செல்லத்தக்க மாதிரியான குழாய்களும் வைக்கப்பட்டன. வியவசாய சம்பந்தமான புஸ்தகங்களைப் பத்திரப்படுத்தி வைப்பதற்கு ஏற்ற விதமான ஒரு அறை அவசியமாயிருந்தபடியால், மெத்தையின்பேரில் கடப்பைக்கற்களை நன்றாக நயப்படுத்தித் தரையில் பாவியும் சுவர்களுக்குத் தகுந்தவிதமாய் வெண்சாந்து பூசி மெருகிட்டும், விட்டம் சட்டம் முதலியவைகள் தோற்றப்படாமல் நூதனமுறையாய்ச் சாந்திட்டுப் பூசி மெருகிட்டும், நல்ல வெளிச்சம் அவசியமானதால் பெரிய கண்ணாடி ஜன்னல்கள் வேண்டியவளவு வைத்தும் ஒரு விசாலமான அறை கட்டப்பட்டது. தவிர இக்காலேஜில் ரசாயன சாஸ்திரத்தையன்றி ஸ்தாவர சாஸ்திரம், ஜீவதத்துவ சாஸ்திரம், வியவசாய

சம்பந்தமான மராமத்து விஷயங்கள், வியவசாய சாஸ்திர தத்துவங்கள், இவைகள் ஒவ்வொன்றையும் பரீக்ஷித்து அறியத் தனித்தனியான அறைகளும், மூன்று வகுப்புகளாக பிரிவுபடுகிற மாணாக்கர்கள் கற்பிக்கப்படுவதற்கு அறைகளும், ஒவ்வொரு விஷயமான உபகரணங்களை யமைக்க பிரத்தியேகமான அறைகளும் அவசியமானபடியால் அவ்வளவு விஷயங்களுக்கும் இடந்தரும்படியான கட்டிடம் வேண்டுமன்றோ! இப்பேர்க்கொத்த பெரிய கட்டடம் அவசியமாக விருக்கும்பொழுது உபாயச் செலவில் கட்டுவது எப்படி சாத்தியம்? அப்படிக் கட்டினால் அது அதிக காலம் நிலைத்து நிற்கமாட்டாதன்றோ! ஆகையினாலே, இந்தக் காலேஜிக்கு ஆறு மைல் தூரத்திலுள்ள மருதகிரி என்ற குன்றிலிருந்து வெண்ணிறமான பெருங்கற்கள் கொண்டுவரப்பட்டு, வெட்டி உடைத்துக் கொத்தி நயப்படுத்தித் தூண்களாகவும், படிக்கட்டுகளாகவும் உபயோகப்படுத்தப்பட்டன. வேண்டிய இடங்களுக்குக் கடப்பைக் கற்கள் போடப்பட்டன. ஒவ்வொரு வேலைக்கும் தேக்கு மரங்களே உபயோகப்படுத்தப்பட்டன. சுதேசத் தொழிலின் அருமையைக் காட்டும் பொருட்டாக மெத்தைப் படிக்கட்டுகளுக்கு இருபுறமும் கைப்பிடிச் சுவராக மரவேலைகளால் வேலை செய்யப்பட்டன. இவ்வளவும் செய்து சிகரமில்லாதிருப்பதழகல்லவென்று முன் புறத்தில் ஒரு கோபுரம் போன்ற கட்டடம் கட்டி, அதன்பேரில் 'வியவசாயத்தைக் காலமறிந்து செய்' 'காலத்தை வீணாக்காதே' என்ற எழுத்துகளைக் கவனமூட்டுவதுபோல் எப்பொழுதும் யாவரும் மணியை யறிந்துகொண்டு சுறுசுறுப்பாய் வேலைகளை நடத்தும்படி தூண்டத்தக்க, ஒரு பெரிய கடிகார யந்திரமுமமைக்கப்பட்டது. உபாத்தியாயர்கள் நிலைத்திருந்து அதே கவலையாய்த் தங்கள்வேலையை நிறைவேற்றும்படியாகவும், மாணாக்கர்களும் வேறு விசாரமின்றி தாங்கள் மேற்கொண்ட கல்வியைப் புஸ்தக மூலமாயும் பிரத்தியக்ஷமாகவும், நிதரிசனமாகவும் திருஷ்டாந்தங்களாலும் பரீக்ஷித்தறிந்துக்கொள்ளும்பொருட்டு அவர்கள் வசிக்கத் தகுந்த கட்டிடங்களும் கட்டப்பட்டன. இவைகளெல்லாம் துட்டுச் செலவின்றிசெய்ய இராவணன் ஆண்டகாலமன்றே? அக்காலமாயிருந்தால் மயன் என்ற தேவதச்சனைக் கொண்டு உடனே செய்யென்று ஆக்கினை செய்து விடலாம். இக்காலத்தில் பணமின்றி ஒன்றுமாகாதன்றோ!

இந்துக்கள் பல தலைமுறையாய் விவசாயத்தொழிலைச் செய்து வருவதின் அனுபவத்தின் பயனால் இலாபத்தை யடைகிறார்களென்றாலும், நாகரீகமடைந்த தேசங்களில் ஜனங்கள் வியவசாயத் தொழிலில் எவ்வளவு இலாபமடைகிறார்களோ அதில் பாதி கூட இத்தேசத்தார் அடைகிறதில்லையே! அதனால் இத்தேச வியவசாய முறைகள் திருத்தப்பட்டால் விசேஷ இலாபம் கிடைக்குமென்று எண்ணுவது பிசகாக மாட்டாதன்றோ!

ஆங்கிலேய வியவசாயத்தொழில் நிபுணர்களுக்கும் இந்தியாபோன்ற உஷ்ண தேசங்களில் ஸ்தாவரப் பொருள்களின் வளர்ச்சியையும், அவைகளுக்கேற்ற உணவையும் பற்றிய விவரங்கள் நன்றாய்ப் பரிசோதித்தறிந்து உறுதிப்படுத்தி, வியவசாயிகளுக்குக் கண்ணுக்கெதிராகக் காட்டும் பொருட்டாகவேயன்றோ அங்கங்கே வியவசாயப் பண்ணைகளை ஏற்படுத்தியிருக்கிறதன்றி இக்காலேஜையடுத்து ஒரு சோதனைப் பண்ணையையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படியிருக்க இந்த முயற்சியால் பயனுண்டாக மாட்டாதென்று எங்ஙனம் கூறுவது?

இத்தேச ஜனசங்கையில் அதிகமானவர்கள் வியவசாயத்தையே நம்பினவர்களாய் அத்தொழிலையே செய்துவருவதால் அத்தொழிலை முன்னாடி விருத்தி செய்ய கவர்ன்மெண்டார் தொடங்கினார்கள். அதற்கு வேண்டிய பல அம்சங்களையும் கவனித்துக் கொண்டு வருகிறார்கள். வர்த்தகத்திலும் இந்துக்கள் அவ்வளவு அக்கரையுள்ளவர்களென்று கண்டால், அத்தொழிலை விருத்திசெய்யக் காலேஜ் ஒன்றை ஏற்படுத்துவது அவர்களுக்குச் சந்தோஷமாகவே இருக்குமென்பதில் தடையில்லை. நமது இந்துக்களே பம்பாயில் வர்த்தகத்தொழிலைக் கற்பிக்கும்படி ஒரு காலேஜ் ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள். சென்னைத் தனவான்களும் அவ்விடத்தில் ஒருகாலேஜை ஏற்படுத்த முயற்சி செய்துக்கொண்டுதா னிருக்கிறார்கள். சென்னை இராஜதானி ஜனங்களுக்குள் தைரியமும், ஒற்றுமையும், சமுத்திர யாத்திரையில் விருப்பமும் முதிருமானால் வர்த்தக காலேஜ் ஒன்றுதானா! ஏற்படக்கூடும். ஒவ்வொருதொழில் விருத்தியின் பொருட்டும் ஒவ்வொரு காலேஜ் ஏற்படுமன்றோ?

ஆகையால் கவர்ன்மெண்டார் வியவசாயத்தொழிலை விருத்திசெய்ய முன்வந்திருப்பதைக் குற்றங் கூறவாவது சந்தேகம்கொள்ளவாவது நியாயமில்லை.

அவர்கள் செய்துவரும் முயற்சியில் வேண்டிய உத விகளைச் செய்து உற்சாகப்படுத்துவது இந்துக்களு டைய முக்கிய கடமை.

தவிர கோயமுத்தூர் வியவசாய காலேஜில் நிய மிக்கப்பட்டிருக்கும் பல சாஸ்திர நிபுணர்களும் தகுந்த சாதனங்களோடு விடாமுயற்சியாய் உழை த்து ஒவ்வொரு பயிருக்கும் தகுந்த உணவையும், செய்பாக்கையும் கண்டுபிடித்தும், செய்து காட்டி யும் வந்தார்களானால் நன்மை பயப்பதற்குச் சந்தேக மில்லை. இந்த நிபுணர்களின் முயற்சியின் பயனுய்க் கோதாவரி, தென்னாற்காடு ஜில்லாக்களில் வியாதிக ளுக்குட்படாத மோரிஸ் கரும்புகளைப் பயிரிட்டு நல்ல பலனைக்கொடுத்திருக்கிறது. கோயம்புத்தூர் பண்ணையிலும், இக்கரும்பைப் பயிரிட்டு வெல்லமும் செய்யப்படுகிறது. இவ்விடத்திலும் மற்ற கரும்பு களைவிட அதிக பயனைக் கொடுத்து வந்ததாகவே கருதப்படுகிறது. இப்படியே பருத்தி, வேர்க்கடலை, மிளகு, சணல், சோளம் கால் நடைகளின் மேய்ச் சல்புல் முதலியவைகளைக் கவர்ன்மெண்டுப் பண்ணை களில் பயிரிட்டுச் சோதனைகள்செய்ததில், சில திரு த்தங்களும் சாதகங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக் கின்றன. இன்னும் அநேக நூதன முறைகளும் சீர்திருத்தங்களும் கண்டுபிடிக்கப்பட்டு வியவசாயி களுக்கு விசேஷபலனைக் கொடுக்குமென்றே கருதப் படுகிறது.

மூடநம்பிக்கைகள்.—படிப்பில்லா அஞ்ஞானிகளிடம் தான் காணப்படும் என்பதே ஓர் மூட நம்பிக்கையாகும். படித்தவர்களது மூட நம்பிக்கைகள் அதிஸூக்ஷ்மமாக இருப்பதால் அவைகளின் உண்மையான ஸ்வரூபம் அவர் களுக்கும் மற்றையவர்களுக்கும் வெளிப்படையாக விள ங்கமாட்டாது. ஆதலால் அது மிகுந்த கேட்டை விளை விக்கக்கூடியது. அதை அஞ்ஞானத்தடிப்பினாலே படித் தவர்களே மற்றவர்களுக்குப் புகட்டி அவர்களையும் அம் மூடநம்பிக்கைகளை நம்பும்படி செய்து கஷ்டத்திற்குள் ளாக்குவார்கள். இம்மாதிரியான படித்தவர்களிடம் காண ப்படும் மூடநம்பிக்கைகளுக்கு ஓர் உதாரணம். "வேதாந் தம் எவனுக்கும் விளங்காத விஷயத்தைக் கூறுவது, மனிதனுக்கு நன்மை விளையக்கூடியவைகள் எல்லாவற் றையும் அவனிடம் இருந்து ஒழித்துவிடுகிறது. மனி தனைக் கல்லுக்கு ஸமானமாகச்செய்து, உலகம் அவனால் ஓர் பிரயோஜனமும் அடையாவண்ணம் செய்துவிடுகின் றது" என்பதே.

## மங்களத்தின் ரகசியம்

**A GRAVE RESPONSIBILEITY UNVEILED**

இல்லாளை இல்லாளும் வேண்டாளீன்றெடுத்த தாய்
செல்லாதவன் வாயிற் சொல். [வேண்டாள்

என்று ஒரு சுத்தமான குரல் இனிமையாகப் பாடிக்கொண்டிருந்தது.

"மங்களம்" நீ சொல்வது உண்மைதானு? என்று நியாயஸ்தலத்துக்குப் புறப்பட்டுக்கொண்டி ருந்த வனமாலி வாசற்படியண்டை நின்று கேட் டாள். அவர் மங்களத்தை மணந்து இன்னும் ஆறு மாதங்கூட ஆகவில்லை. அவள் இப்பாட்டைச் சொன் னது வனமாலிக்குத் துயரத்தை விளைவித்தது.

புருஷன் சாப்பிட்ட இலையை எடுத்தெறிந்துவிட்டு இடத்தைச் சுத்திசெய்யும்பொழுது மேற்படி பாட லைச் சொல்லிக்கொண்டிருந்த மங்களம் தன் கணவ ருடைய வாடிய முகத்தை நிமிர்ந்து பார்த்து குலு ங்க நகைத்தாள். உடனே அவரருகில் ஓடிவந்து அவர் கன்னத்தில் ஆர்வத்துடன் ஒரு முத்தங்கொ டுத்துவிட்டு "ஏமாந்துபோனீரா? நான் அதை உண் மையென்று நம்புவேனு? அந்தப்பாடல் உமக்கு வரு த்தத்தைக் கொடுப்பதாயிருந்தால் நான் இனி அதை ப்பாடுவதேயில்லை. அந்தப் பாட்டில் சொல்லியிருப்ப தெல்லாம் பொய்தான். எப்படியிருந்தபோதிலும் அப்பாட்டுக்கும் நமக்கும் சம்பந்தமேயில்லை" என் ருள்.

வனமாலி மங்களத்தைத் தன்னருகிலிழுத்து அணை த்து நெற்றியில் ஒருமுத்தங் கொடுத்துவிட்டு "மங்க ளம், அவசரப்பட்டுப் பரம ஏழையாகிய என்னை மண ந்துகொண்டு விட்டதற்காக இப்பொழுது வருத்தப் படுகிருய் என்று எண்ணினேன் நான் என்ருர்."

மேல் சொல்வதற்குள் மங்களம் வனமாலியின் வாயைத் தன் கையினுல் பொத்தி "என் தெள்ளமு தே! அப்படிச் சொல்லாதே. என்னைப்பற்றி அவ்வ ளவு இழிவாக நீர் நினைக்கலாமா? என் கண்மணி! இவ் வுலகத்திலுள்ள செல்வ மெல்லாவற்றைக் காட்டி லும் நீர் எனக்கு மேலானவரன்ருே? உமக்காக உம் மை நான்மணந்தேனேயன்றி உமது செல்வத்துக்கா வது உமது பெருமைக்காவது நான் மணக்கவில்லை யே! எனக்கிருப்பது ஒரு குறைதான். அதாவது நான் என் தாய்தகப்பனை விட்டுப் பிரிந்திருக்கிறேனே என்பது தான். நான் அவர்களுக்கு ஒரேபெண் என்

பது உமக்குத்தெரியுமே. அவர்கள் என்னை எவ்வளவோ செல்வமாக வளர்த்து வந்தார்கள். நீரும் நானும் உயிரோடிருக்கும் வரையில் நான் உம்மை விட்டுப் பிரிந்திருக்கமாட்டேன். உம்மையல்லாமல் எனக்கு என் தாய்தந்தையர் வேண்டியதில்லை" என்றாள்.

வனமாலியின் கண்ணில் நீர் பெருகிற்று. உயர்ந்த தனவானுக்கு ஏக புத்ரியாகப் பிறந்து காதலினால் தன்னை மணந்து கொஞ்சமேனும் வருத்தத்தைக் காட்டாமல் தனக்குக் குற்றேவல் செய்து வருவது மன்றி இவ்வளவு அன்புடனும் அறிவுடனும் பேசுவதைக் கேட்க கண்ணினின்றும் நீர் வடியாமல் எப்படியிருக்கும்? அவர் குனிந்து மிக்க பட்சத்துடன் திரும்பத் திரும்ப மங்களத்தை முத்தமிட்டார்.

"என் விலையில்லா மாணிக்கமே! உன்னைக் கடவுள் கடாக்ஷிக்கட்டும். உனக்கு ஒரு குறைவுமில்லாமல் கடவுள் காப்பாற்றுவார்" என்று சொல்லிவிட்டு வனமாலி தெருவிலிறங்கி நியாயஸ்தலம் நோக்கிச் சென்றார்.

வனமாலி பி. எல். பாஸ்பண்ணினவர். கொஞ்சம் தனக்கிருந்த பிதிரார்ஜிதத்தையும் படிப்புக்காக செலவழித்துவிட்டார். வக்கீல்பரீக்ஷை பாஸ்பண்ணி இன்னும் ஒரு வருஷம் கூட ஆகவில்லை. ஆதலால் அவரிடம் கட்சிக்காரர்கள் அதிகமாக கேஸ் கொண்டு வருகிறதில்லை. செலவுக்குப் போதிய பணம் கையில் இல்லாததால் சிக்கன ஜீவனம் செய்யவேண்டி வந்தது. மங்களம் ஒரு லட்சாதிபதியின் ஏக குமாரியாயிருந்தபோதிலும் தன் புருஷனுடைய நிலைமையையறிந்து பர்த்தாவுக்கேற்ற பதிவிரதையாக விருந்தாள். அவளுடைய பெற்றோர்களின் இஷ்டத்துக்கு விரோதமாக வனமாலியை மணந்துகொண்டதால் அவர்கள் வனமாலிக்காவது மங்களத்துக்காவது உதவி செய்வதில்லை.

வனமாலியின் உருவம் கண்ணுக்கு மறையும்வரையில் மங்களம் அவனைப் பார்த்துக்கொண்டே நின்றாள். பின் புன்னகை புரிந்துகொண்டு வீட்டுக்குள் திரும்பினாள். உள்ளே சென்று ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு "பாவம் நான் அவருக்கு உதவி செய்ய முயன்றுகொண்டிருப்பதை அவர் அறியவில்லை. நான் கற்றிருக்கும் கல்வியையும் சங்கீதத்தையும் ஊர் பிள்ளைகளுக்குக் கற்பித்து அதனால் சம்பாத்தியம் செய்கிறேன் என்று அவருக்குத் தெரியாமலிருக்கிறது. இப்பொழுது என்னிடம் ஆறு பிள்ளைகள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்த இரகசியத்தை அவர் அறிந்துகொண்டுவிடப் போகிறாரோ என்று பயமாயிருக்கிறது. எதிர் பாராதவண்ணமாய் திடீர் என்று அவரிடம் இந்த ரகசியத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று எனக்கு ஆவலாயிருக்கிறது" என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டேயிருந்தாள். இவ்வாறு கொஞ்சநேரம் சிந்தனையிலாழ்ந்திருந்து விட்டுப் பின்பு எழுந்துப் பத்துபாத்திரங்களை எல்லாம் தேய்த்துக்கழுவி நேர்த்தியாக அடுக்கி வைத்துவிட்டுத் துடப்பம் எடுத்து வீட்டைச் சுத்தம் செய்தாள். பிறகு தன் நல்லுடையை யெடுத்து சீராயணிந்துகொண்டு தலைமயிரைக் கோதி முடித்துக்கொண்டு வெளிப் புறப்பட்டாள்

தன் புருஷனுக்குத்தெரியாமலும் அவனுக்குச் சந்தேகம் உதிக்காமலும் கொஞ்சம் பணம்சேர்க்க வேண்டுமென்பது மங்களத்துக்கு வெகுநாள் கோரிக்கை. தீபாவளி பண்டிகைக்கு முதல் நாள், தான் சேகரித்தபணத்தைத் தன் புருஷனிடம்கொண்டு கொடுத்து "நாதா! நமதுபண்டிகைச் செலவுக்காக நானும் கொஞ்சம் பணம்சேர்த்து வைத்திருக்கிறேன். நம்மிருவருக்கும் இப்பொழுது இப்பணத்தைக்கொண்டு புது சோமன் புடவைகள் வாங்கலாம். அன்றியும் மேற்செலவுக்கும் போதுமான பணம் இதிலிருக்கிறது" என்று சொல்லவேண்டுமென்று அவளுக்கு ஆவல் இருந்தது. இந்த எண்ணத்தினால் தான் ஊரிலுள்ள சிலசிறு பெண்களுக்குச் சங்கீதம் சொல்லிக்கொடுக்க மங்களம் ஒத்துக்கொண்டது; அக்காரியத்துக்குத்தான் இப்பொழுது அவள் வெளிப்புறப்பட்டதும். கணவனை எந்தவிதமாய்ச் சந்தோஷப்படுத்தலாம் என்று எண்ணிக்கொண்டே போகும்போது இவளுடைய மெலிந்து உயர்ந்த அத்தை எதிரில் வரக்கண்டாள். அவளைக் கண்டதும் மங்களத்துக்குத் தூக்கிப்போட்டது போலாயிற்று. "இது என்ன துர் அதிர்ஷ்டம். இவள் எனக்குமுன் இப்பொழுது வந்துதோன்றினாளே. எதற்காக இங்கே வருகிறாள்? இவள் என்னை விடப்போகிறதில்லையென்று எனக்கு நிச்சயமாகத்தெரியும். என்னைப் பிடித்துக்கொண்டு ஆயிரம் கேள்விகேட்கப்போகிறாள். நான்போகும் காரியத்தை அவளிடம் சொன்னால் உடனேபோய் அதை என்நாதனிடம் சொல்லிவிடுவாள். இத்தனைநாள் நான் இரகசியமாகக் காப்பாற்றிவைத்திருந்ததெல்லாம் வெளிப்பட்டுவிடும். அல்லாமலும் இவள்போய் என் அப்பாவிடம் நான்

ஊர்ப் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லிவிடுவாள். அங்கே வீட்டில் எல்லோரும் பணம் சம்பாதிக்கும் பொருட்டு என் புருஷன் என்னை வேலை செய்யச் சொல்லி நிர்ப்பந்தம் செய்கிறானென்று எண்ணிக் கொள்ளுவார்கள். இது என்ன அனர்த்தத்தில்வந்து மாட்டிக்கொண்டேனே. நான் என்ன செய்யட்டும்'' என்று சொல்லிக்கொண்டாள்.

மங்களத்தின் அத்தை நெருங்கி வந்துவிட்டாள். அவளினின்றும் தப்பிப்போவதற்கு முடியாமல்போயிற்று. ஆதலால் "எது வந்தபோதிலும் அனுபவித்துத் தான் தீருகிறது'' என்று கொஞ்சம் துணிவுடன் மங்களம் நின்றுகொண்டிருந்தாள். அத்தை மங்களத்தின் எதிரேவந்து நின்று "மங்களம் என்ன சங்கதி சௌக்கியமாயிருக்கிறாயா? எங்கேபோகிறாய் அம்மா'' வென்றாள். அதற்கு மங்களம் கொஞ்சநேரம் தயங்கி நின்றுவிட்டு "சுகமாகத்தானிருக்கிறேன் அத்தை. நான் கற்பகத்தின் வீட்டுக்குக் கொஞ்சம் காரியமாகப்போகிறேன்'' என்றாள்.

மங்களத்தின் போதாத காலம் கற்பகத்தின் மைத்துனர் ஒருவர் நல்ல வளர்த்தியும் ரூபமுள்ள வாலிபராயிருந்தார். அவர் ஒரு சமயம் மங்களத்தை மிகவும் காதலித்திருந்தார். இது அவளுடைய அத்தைக்குத் தெரிந்த விஷயம். கற்பகம் வீட்டுக்குப் போகிறேன் என்று மங்களம் சொன்னதும், அத்தை மறுவார்த்தை பேசாமல் பல்லைக் கடித்துக்கொண்டு போய்விட்டாள். அவள் போகும்போதே "வேடிக்கைதான்! மங்களம் எதற்காக கற்பகத்தின் வீட்டுக்குப் போகவேண்டும்? அங்கே கற்பகம் மைத்துனரிருக்கிறாரே. மங்களத்தின்மேல் எப்பொழுதும் எனக்கு நம்பிக்கையே கிடையாது அவள் மகா கர்வியாயிற்றே. பரம ஏழையான வனமாலியைப்போய் நாங்கள் சொல்வதை எல்லாம் தட்டிவிட்டு ஒரே பிடிவாதமாகக் கலியாணம் பண்ணிக்கொண்டாளே. கற்பகத்தின் மைத்துனனைக் கண்டு பேசுவதற்காகத்தான் அவள் வீட்டுக்குப்போகிறாள். இதை நான் வனமாலியிடம் போய்ச் சொல்லவேண்டுவது அவசியம். அவனுக்கு நல்லது செய்யவேண்டுமென்பது என் கருத்தல்ல. ஆனபோதிலும் கடமை கடமைதானே. என் கடமையை நான் செய்யத் தவறக்கூடாது'' என்று முணுமுணுத்துக்கொண்டே நியாயஸ்தலம் சென்று வனமாலியைக் கண்டு அவரைத் தனியாக ஒரு அறைக்குள் அழைத்துக்கொண்டுபோய் "வனமாலி! ஒரு கடமையை நான் உனக்குச் செய்யவேண்டுமென்று தோன்றியதால்தான் உன்னிடம்வந்தேன்'' என்றாள்.

வனமாலிக்கோ ஒன்றும் விளங்கவில்லை. பற்பல எண்ணங்கள் மனதில் உதித்தன. ஆதலால் அவர் அவளை "என்ன சங்கதி அத்தை'' என்று மரியாதையாய் கேட்டார்.

அத்தையோ ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு "நான் உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன். பதில் சொல். மங்களம் இன்று காலையிலெங்கு சென்றாளென்று உனக்குத் தெரியுமா'' என்றாள்.

வனமாலி புன்னகைகொண்டே ஆம் தெரியும். மங்களம் வீட்டிலிருக்கிறாள். நான் வரும்போது அவள் வீடு சுத்தி செய்துகொண்டிருந்தாள் என்றார்.

அத்தை "அவள் சங்கதி உனக்கு ஒன்றுமே தெரியாதுபோலிருக்கிறது. இப்பொழுதுதான் அவள் கற்பகத்தின் மைத்துனனைக் கண்டு பேசுவதற்காக கற்பகத்தின் வீடு போனதை நான் பார்த்துவிட்டு வந்தேன். அந்தத் தடியனும் இவள் வரவை எதிர் நோக்கி வாயிற்படியில் காத்துக்கொண்டிருக்கிறான். இதை உன்னிடம் சொல்லவேண்டுவது என் கடமையென்று நான் இங்கே வந்தேன்'' என்றாள்.

வனமாலி முகம் கடுத்து "உன் கடமையா! உன் வேலையை நீ பார்க்கவேண்டுவது தான் உன் கடமையென்று எனக்குத் தோன்றுகிறது என் மனைவியின் மேல் எனக்குக் கொஞ்சமும் சந்தேகம் கிடையாது. என் உயிர்போனாலும் நீ அபிப்பிராயப்படுவது உண்மையாயிருக்குமென்று நான் நம்பவே மாட்டேன். இனிமேல் நீ என் காரியத்தில் பிரவேசிக்கவேண்டியதில்லை. உன் காரியமெதுவோ அதைப்பார்த்துக் கொண்டு போ'' என்றான்.

அத்தைக்குக் கோபம் பிறந்து இடத்தை விட்டு எழுந்து நின்று "உன்னிஷ்டப்படியே செய்யப்பா. ஆமாம். இது என்வேலை யன்றுதான். இப்பொழுது உன் மனைவி கற்பகத்தின் வீட்டிலில்லாவிட்டால் நீ என்னை எது வேண்டுமானாலும் செய்துகொள்'' என்றாள்.

வனமாலி "போதும் நிறுத்து. என் மனைவி தனக்கு இஷ்டமானவிடத்துக்குப் போய்வர ஆட்சேபனை

யென்ன. உனக்கு எதோ புத்தி கலங்கியிருக்கிறாப்போலிருக்கிறது" என்றார்.

அத்தை, இல்லையப்பா இல்லை. நீ மங்களத்தை மணப்பதற்கு முன் அவளும் கற்பகத்தின் மைத்துனனும் எவ்வளவு ஒற்றுமையாகவிருந்தார்களென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான். நான் இன்று அவளைப் பார்த்தபொழுது அவள் நேரே கற்பகம் வீட்டுக்குத்தான் போனாள். கற்பகம் மைத்துனனும் வாசற்படியில் நின்று காத்துக்கொண்டிருந்தான். ஆகையினால்தான் நான் பார்த்ததை உன்னிடம் சொல்லலாமென்று வந்தேன். நீ எவ்வளவு அவமரியாதையாக என்னை நடத்தியபோதிலும் நான்செய்ய வேண்டிய கடமையைச் செய்தாய்விட்டது. இனி எப்படி வேண்டுமென்றாலும் போ" என்றாள்.

வனமாலி, "உன் நடத்தையை இந்தச் சமயத்தில் அங்கீகரிப்பார் யாருமில்லை. எனக்கும் என் மனைவிக்கும் எங்கள் காரியம் நன்றாகத்தெரியும் ஆதலால் நீ போய் வரலாம் அத்தை" என்று கடுங்கோபத்துடன் சொன்னார்.

தன் வார்த்தை வனமாலியிடம் எறாதென்றெண்ணி அத்தையும் வெளிச் சென்றாள். வனமாலியும் "இவளுக்கு என்ன கிருத்திரமம்! என்ன தைரியம்" என்று சொல்லிக்கொண்டார்.

ஆனால் "அந்தரங்கத்தில் ஒருவேளை இருந்தாலுமிருக்கலாமோ" என்கிற சந்தேகமுதித்தது. உடனே அவர் ஒன்றும் தோன்றாமல் நியாயஸ்தலத்தினின்றும் இறங்கி கற்பகம் வீட்டை நோக்கி நடந்துவந்தார். தூரத்திலிருந்தே மங்களம் கற்பகம் வீட்டிலிருந்து இறங்கி வருவதையும் அவளுக்குப் பின் கற்பகத்தின் மைத்துனன் அவளைத் தொடர்ந்து வருவதையும் கண்டுவிட்டார். கொஞ்சநேரம் தானிருந்த இடத்திலிருந்தே அவர்களை வனமாலி உற்றுப்பார்த்தார். அவர் மனமெரிந்தது. உடனே நியாயஸ்தலத்திற்குத் திரும்பிவிட்டார்.

மறுபடியும் அன்று சாயந்திரம் வீட்டிற்குத் திரும்பிவந்ததும் வனமாலி தன் மனைவியை ஒரு கேள்வியும் கேட்கவில்லை. கலியாணம் செய்துகொண்டது முதல் இன்றுதான் அவர் வியாகூலத்துடன் மௌனமாயிருந்தார். இதை மங்களம் வியப்புடன் கவனித்து வந்தாள். ஆனால் புருஷனுடைய மாறுபாட்டைப்பற்றிக் கேட்க பயந்தாள்.

இப்படியே சிலநாள் கழிந்தது. வனமாலி தன்னையுருக்கிக்கொண்டிருந்த மனோவியாகூலத்தை மறைத்துக்கொண்டே வந்தார். மங்களமோ தன்னிரகசியத்தை வெளியிடக்கூடாதென்று பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்து பணம் சம்பாதிப்பதிலேயே கவனமாயிருந்தாள்.

கடைசியில் தீபாவளிக்கு முதல் நாள் வந்தது. மங்களம் நூறு ரூபாய் சேர்த்துத் தயாராக வைத்திருந்தாள். வனமாலி சாப்பிட்டதும் மங்களம் அவனருகில் தாம்பூலமெடுத்துச் சென்று இந்த ரூபாயையும் அவர் கையில் கொடுத்து "நாளை தீபாவளிச் செலவுக்காக என் பங்கு பணம் இந்தா என் நாதா" என்றாள். வனமாலி தன் மனைவியைப் பார்த்துத் திகைத்தார். பின்பு "என்ன மங்களம்! இது என்ன! இந்தப் பணம் உனக்கு எப்படி கிடைத்தது" என்றார். மங்களம் மிக்க மனப்பூரிப்புடன் வனமாலியினருகிலுட்கார்ந்து, தான் பிள்ளைகளுக்குப் படிப்பு சொல்லிக்கொடுத்ததற்காகச் சம்பளம் கேட்டனுப்பிய பில் (Bill) களை எடுத்துக்காட்டி "நீர் மாத்திரம் நம்மிருவருக்காக உடல் வருந்தி உழைக்க நான் பார்த்துக்கொண்டு சுகமாயிருக்க எனக்குப் பிரியமில்லை. ஆதலால் நானும் ஒரு தொழில் செய்துகொண்டு வந்தேன். கற்பகத்தின் பெண்களுக்கும் அடுத்தவீட்டிலிருக்கும் கற்பகத்தின் மைத்துனருடைய மைத்துனி குழந்தைகளுக்கும் வித்தை கற்பித்து இப்பணத்தைச் சம்பாதித்தேன். நீர் எதிர்பாராத வண்ணம் திடீர் என்று உமக்குத் தெரிவிக்கவேண்டுமென்று நான் இதை இரகசியமாக வைத்திருந்தேன், என்றாள்.

வனமாலியின் முகத்திலிருந்த விசனக்குறியெல்லாம் பறந்துபோயிற்று.

வனமாலி, "ஆனால் கற்பகத்தின் மைத்துனருக்குக் கலியாணம் ஆய்விட்டதா? எனக்கு அது தெரியாமற்போயிற்று மங்களம்" என்றார்.

மங்களம், "நம் விவாகத்துக்கு ஒருவருஷத்திற்கு முன்னாமேயே அவர் விவாகஞ் செய்துகொண்டுவிட்டாரே. ஆனால் இந்தவூரில் விவாகம் நடக்கவில்லை. வெளியூர்போய்ப் பெண்தேடி மணந்தார்' என்றாள்.

இதைக்கேட்ட வனமாலிக்கு வெட்கமும் அடக்கமுமுண்டாயிற்று. அவர் தன் மனைவியைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு மார்போடணைத்துத் தான் அத்தையிடமிருந்து கேட்டகதையை ஆதியோடந்தமாகச் சொன்னார். பிறகு தான் ஆத்திரப்பட்டு மங்களத்தின்மேல் கெட்ட அபிப்பிராயங் கொண்டிருந்ததற்காக மிகவும் மன்னிப்பு கேட்டுக்கொண்டார்.

பதிவிருதா சிரோமணியான மங்களம், புருஷன் வருந்த இடங்கொடுப்பாளா? தான் புருஷனுக்குத் தெரியாமல் இரகஸியமாகச் சம்பாதிக்கப்போனதே இடையில் நேர்ந்த மனஸ்தாபத்திற்குக் காரணமென்று குற்றத்தை எல்லாம் தன்மேலேற்றிக் கொண்டு வனமாலியின கவலையை அகற்றினாள்.

அன்றுமுதல் மங்களமும் வனமாலியும் ஆதரவுபட்டு ஒரு இடுக்கணுமின்றி சம்சார வாழ்க்கையைச் சுகமாக இனிது கழித்துவந்தார்கள், என்று சொல்லவும் வேண்டுமோ?

இந்தக் கதையினால், தம்பதிகள் ஒருவரறியாமல் ஒருவர் இரகசியத்தை மறைத்து வைத்துக்கொள்ளக் கூடாதென்று ஏற்படுகின்றது.

## நீலி வசீகரம்

### TAMING OF THE SHREW

வநி.—அப்பா, மன்னிக்கவேண்டும் (நமஸ்கரித்தல்.)

ரகு.—நீ என்ன குற்றம் செய்தனை? விஜயராகவ உடையார் எங்கே?

விஜ.—இதோ இருக்கிறேன்; நான் தான் நல்ல நாயக உடையாரின் உண்மை மகன்; உம்முடைய பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொண்டவன் நான்தான்; போலிப்பேர்வழிகள் உம்மை மயக்கி விட்டனர்.

போ.—அடே! என்ன மோசம்!

நல்ல.—போக்கிரிப் பையல், சுப்பராயன் எங்கே? என்னை அதட்டிப் பேசினவனைக் கூப்பிடு.

ரகு.—வேடிக்கை பண்ணாதேயுங்கள்.—நீ கோவிந்த வாத்தியார் அல்லவா?

வநி.—கோவிந்த வாத்தியார் இப்போது ஸ்ரீராம பிரான் பெயர்களுள் ஒரு * பெயரையுடைய உடையாராய் மாறிவிட்டார்.

விஜ.—ஐயா! இதெல்லாம் காதல் செய்த கூத்து; கண்மணி வநிதயை அடையவேண்டிய உபாயத்துக்காக நானும் சுப்பராயனும் மாறுவேஷம் போட்டுக்கொண்டோம்; என் எண்ணம் முற்றுப் பெற்றுவிட்டது; சுப்பராயன் செய்ததெல்லாம் எனக்காகவேதான்; ஆதலால், ஐயா, அவனை மன்னித்துவிடுங்கள்.

நல்.—அவனைக்கொன்று குழியிலிறக்கிவிடுகிறேன்; என்னைச் சிறைச்சாலைக்கு அனுப்பவேண்டுமென்றானல்லவா?

ரகு.—இதைக்கேளும்; (விஜயராகவ உடையாரை நோக்கி) என் மகளை, எனது சம்மதமில்லாமல் நீர் கல்யாணம்செய்து கொண்டுவிட்டீரா?

நல்.—தேவரே! பாதகமில்லை; எல்லாம் எனக்குத் திருப்தியாகிவிட்டது; மேல் விஷயங்களைச் சாவகாசமாய் யோசிப்போம்; ஆனால் என்னை வஞ்சிக்க வெண்ணிய வேலைக்காரப் பயல்களை உதைக்க வேண்டும். (போதல்)

ரகு.—நானும் இந்தமோசத்தை நன்றாய்த் தீர விசாரித்துவருகிறேன். (போதல்)

போ.—என்கதி இலவுகார்த்த கிள்ளையின் கதி போலாய்விட்டது; இருந்தாலும் ஒருவேளை நல்ல சாப்பாடு கிடைக்கும் (போதல்)

* இந்திய ஸ்திரீகள் புருஷர்களின் பெயர்களை நேராகச் சொல்வதில்லை; அவசியமானால் குறிப்பால்தான் தெரிவிப்பார்கள்.

(நாராயணத்தேவரும் கௌதமியும் முன் வருதல்)

கௌ.—நாதா! இந்தவேடிக்கை முழுவதையும் பார்ப்போம், வாருங்கள் போவோம்.

நா.—முதலில்என்னை ஒருதரம் முத்தமிட்டுக்கொள், பிறகு வருகிறேன்.

கௌ.—நன்றாகவிருக்கிறது! இந்தத் தெருவீதியிலா?

நா.—என்னைக்கண்டால் வெட்கமாயிருக்கிறதோ. உனக்கு?

கௌ.—ஐயோ! அப்படியொன்றுமில்லை; தெருவில் நாலுபேர் பார்க்கையில், முத்தமிட்டுக்கொள்ள வெட்கமாகவிருக்கிறது.

நா.—அப்படியானால், திரும்பி ஊருக்குப் போய் விடுவோம், வா;—எலே! வண்டியைக் கட்டு சீக்கிரம்

கௌ.—வேண்டாம், வேண்டாம்; முத்தமிட்டுக் கொள்ளுகிறேன்; ஒருதரமல்ல; பத்துதரம்வேண்டுமானாலும் செய்கிறேன்; கொஞ்சம் நில்லுங்கள்.

நா.—இது நன்றாக விருக்கவில்லையா?.— போவோம், வா, கோது; (போதல்)

களம் 2.—விஜயராகவ உடையாரின் விடுதியில் ஓர் கூடம்; (ரகுநாததேவர், நல்லநாயக உடையார், பொன்னம்பலத்தேவர், தீர்த்தயாத்திரி, விஜயராகவ உடையார், வநிதேசுவரி, நாராயணதேவர், பிரதாபருத்திரதேவர், சுசீலை, வருதல். சுப்பராயன், கேசவன், பொன்னன் முதலியோர் பணி செய்ய நிற்கின்றனர்).

விஜ.—மலைகளை யெல்லாம் தாண்டியாய்விட்டது பெருஞ்சமுத்திரங்களையுங்கடந்து, துறைப்பட்டணமும் வந்து சேர்ந்தேன். என்னைப்போல அதிருஷ்டவான் யாவனிருப்பான்? அரும்பொற்செல்வமாகிய வநிதேசுவரி எனக்கு மனைவியாக வாய்த்தபின் எனக்கு என்ன குறையிருக்கும்?—நாராயணத்தேவரே, நீரும் உமது மனைவியாகிய கௌதமிதேவியும் இங்கு வந்து என்னைப் பெருமைப்படுத்தியதற்குப் பெரிதும் சந்தோஷப்படுகிறேன்; அம்மாதிரியே பிரதாபருத்திரதேவரும் தமது மனைவியை யழைத்து வந்தது எனக்கு அளவற்ற இன்பத்தைக் கொடுக்கின்றது. இன்றை விருந்துக்கு நீங்கள் இருக்க வேண்டும்.

நா.—எப்போதும் உண்பதுதானு வேலை!

ரகு.—மதுரையில் இந்தச் சுகத்துக்குக் குறைவில்லை,

நா.—மதுரையில் எந்தச் சுகத்துக்குத்தான் குறை? எல்லாம் இன்பந்தான்.

பிர.—எல்லாம் இன்பமா?

நா.—பிரதாபருத்திரரே, அப்படியானல் உமக்கு இன்பமில்லையென்று தோன்றுகிறது. சுசீலைக்குப் பயப்படவேண்டியிருக்கிறதோ?

சுசீ.—நான் ஒன்றுக்கும் பயப்படுவதில்லை.

நா.—நீ ஒன்றுக்கும் பயப்படமாட்டாய் என்பது தெரியும்; நான் எண்ணிய பொருள் அதுவன்று! பிரதாபருத்திரருக்கு உன்னிடம் பயமிருக்கிறது.

சுசீ.—குற்றமுள்ள நெஞ்சு குறுகுறு என்றிருக்கும்; நீர் சொல்வது உண்மைதான்.

கௌ.—சுசீலே! குற்றமுள்ள நெஞ்சு என்றாயே! அதன் பொருள் என்ன? விளங்கச்சொல்லு.

சுசி.—நீ வருத்தப்படாமலிருந்தால் சொல்லுகிறேன்: உன்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு, உன்னிடம் பயப்படுகிற உன் புருஷனுக்கு, அவரைப்போலவேயே மற்றெல்லோருக்கும் அவரவர் மனைவியிடத்தில் பயமிருக்கும் என்று தோன்றுகிறதுபோல விருக்கிறது. இப்போது பொருள் தெரிந்ததா?

கௌ.—நீ சொல்வதில் ஒரு வார்த்தைகூட நிஜமில்லை.

நா.—பேஷ்! கௌதமி! நன்றாகப் பதில்சொல்லியடக்கினாய். இருக்கட்டும், நீபோ.

(கௌதமி, சுசீலை, வசிதேசுவரி மூவரும் போதல்).

போ.—என்னவிருந்தாலும், நாராயணத்தேவர்பாடு கொஞ்சம் கஷ்டம்தான்.

நா.—என்னகஷ்டம்?—அது கிடக்கட்டும்; சுப்பராயா! நீ பாடுபட்டதற்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லையே! கார்த்திருந்தவன் பெண்டாட்டியை நேற்றுவந்தவன் கொண்டுபோனான் என்ற கதையாக வல்லவா முடிந்துவிட்டது.

சுப்.—நான் எனக்காக ஒன்றும் செய்யவில்லை; எல்லாம் என் எஜமானருக்காகத்தான் செய்தேன். யுத்தத்தில் எதிர்நின்று சண்டைசெய்வது போர் வீரர்களாயினும், ஜயம், தோல்வி இரண்டுக்கும் பாத்தியப்பட்டவர் தளகர்த்தர் அல்லவா? வேட்டையில் ஓடியாடித்திரியும் நாய்கள் வேட்டை மிருகங்களை எஜமானனுக்காகத்தானே பிடித்துக் கொடுக்கின்றன.

நா.—நல்ல உபமானம் சொன்னாய். அப்படியானல் நீ வேட்டைநாய்க்குச் சமானமா?

சுப்.—அப்படியே யிருக்கட்டும்; தாங்கள் நாயில்லாமல், சுதாவில் வேட்டையாடினீர்களே. வேட்டையில் பிடித்த மான் உம்மேல் பாயும்போலிருக்கிறதல்லவா?

ரகு.—நாராயணத்தேவரே! ஜாக்கிரதை; சுப்பராயன் உமது பேரிலேயே திரும்பிவிட்டான்.

விஜ.—பேஷ்! சுப்பராயா! நன்றாக மடக்கினாய்!

பிர.—என்ன, தேவரே! இசைவு கேடாகவாக்கைக் கொடுத்துவிட்டீரே!

நா.—இசைவு கேடென்ன? உங்கள் வார்த்தையில் கொஞ்சமேனும் உண்மை யிருந்தாலல்லவா எனக்கு வருத்தமுண்டாகும்?

ரகு.—மாப்பிள்ளைத் தேவர்வாள்! என்னதான் மறைத்துச் சொன்னாலும், உமது மனைவி நீலிதான்; அதில் சந்தேகமில்லை.

நா.—இல்லவே இல்லை; என் மனைவி நீலியல்ல; பந்தயம் போடுவோம்: நாம் எல்லோரும் அவரவர் மனைவியைக் கூப்பிட்டனுப்புவோம்; யாருடைய மனைவி உடனே கேட்டு வருகிறாளோ, அவருக்குத்தான் ஜயம் என்று வைத்துக்கொள்ளுவோம்.

பிர.—சரி; பணயம் என்ன?

விஜ.—இருபது பவுன்.

நா.—சீ! இருபது பவுன்! நான் கோழிச்சண்டைக்குக்கூட அவ்வளவு குறைவாக பணயம் வைக்கமாட்டேனே!

விஜ.—ஆனல், நூறு பவுன்.

நா.—சரி; இருக்கட்டும்; அது போதும்.

பிர.—யார் முதலில் ஆரம்பிக்கிறது?

விஜ.—நான் ஆரம்பிக்கிறேன்.—கேசவா, நீ போய் உனது எஜமானியை நான் வரச்சொன்னதாகச் சொல்லிவிட்டு வா.

கே.—இதோ போகிறேன். (போதல்)

ரகு.—வசிதை நிச்சயம் வந்துவிடுவாள்; ஜயித்தால் பாதி எனக்கு.

விஜ.—பாதிக்கு இங்கே பங்கு கொடுக்கமாட்டேன் முழுவதும் எனக்குச் சொந்தம்.

(கேசவன் திரும்பி வருதல்.)

எங்கே யவள்? என்ன சொன்னாள்?

கே.—ஏதோ வேலையாக இருக்கிறாளாம்; இப்போது வரமுடியாதென்று சொல்லச்சொன்னாள்.

நா.—எப்படி, எப்படி! வேலையாகவிருக்கிறாளா? வர முடியாதென்பதற்கு இது ஒரு காரணமா?

போ.—இதுவாவது கொஞ்சம் பொறுக்கக்கூடியதாகவிருக்கிறது.—உம்முடைய மனைவி என்ன சொல்லி யனுப்புவாளோ? வெகு கேவலமாகவிருக்கும் பார்ப்போம்.

நா.—தானே தெரிகின்றது; வீண் பேச்சேதற்கு?

பிர.—கேசவா, நீ போய் எனது மனைவியை நான் உடனே வரச்சொல்லிக் கேட்டுக்கொள்கிறதாகச் சொல்லிவிட்டு வா.

(கேசவன் போதல்.)

# சிறுவர்க்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

மானஸ பூஜையின் பெருமை.—பாண்டவருள், அர்ச்சுனன் மிகுந்த ஆடம்பரத்தோடு சிவபூஜை செய்வது வழக்கம். வெள்ளியாலாகிய பூஜாபாத்திரத்தோடும், அபிஷேகம், தீபாராதனை முதலிய பெரிய ஆடம்பரத்தோடும் வெகுநாழிகை, யாவரும் பார்க்கும்படி பூஜைகளைத் நடத்துவான். பீமஸேனனோ கோயில் முதலிய ஸ்தலங்களுக்குப் போகாது எப்பொழுதும் தன் மனதிலே பகவானைத் தியானம் செய்வது வழக்கம். ஆகையால் இவன் செய்யும் பூஜை ஒருவருக்கும் தெரியாமல் இருந்தது. இதுபற்றி அர்ச்சுனன் தனது தமயனைப் பக்தியற்றவன் என்றும் தன்னை விடத்தாழ்ந்தவன் என்றும் எண்ணத் தொடங்கினான். எல்லாங்கண்டறியுஞ் சக்திவாய்ந்த கிருஷ்ண பகவான் இதை உடனே தெரிந்துகொண்டு ஸகஜமாய்க் 'கைலாஸம்சென்று பரமசிவனைத் தரிசித்து வருவோம் வா' என்று அர்ச்சுனனைக் கூப்பிட அர்ச்சுனன் ஒன்றும் அறியாதவனாகையால் வருவதாக ஒப்புக்கொண்டான் இருவரும் கைலாஸம் நோக்கிப் புறப்பட்டார்கள். கைலாஸகிரியண்டை போகையில் ஒரு மனிதன் ஒரு பெரிய வண்டி நிரம்ப வாடிய புஷ்பங்களைக் கொண்டுவருவதைக் கண்டார்கள். அர்ச்சுனன் இதென்ன என்று வண்டி இழுத்து வருபவனைக்கேட்க அவன் வேலை அவஸரத்தில் இருந்ததால் அவன் இதற்குப் பதில் கூடச சொல்லவில்லை. உடனே கிருஷ்ணார்ச்சுனர் அவன் என்ன செய்யப்போகிறான் என்பதைப் பார்க்க அவன் பின்னே செல்ல, அவன் இப்புஷ்பங்களை ஒரு மலைபோல் குவிந்திருக்கும் வாடல் புஷ்பக் குவியலிடம் கொண்டுபோய்க் கொட்டுவதைக் கண்டார்கள். அங்கு நின்றுகொண்டிருக்கையில் அனேக வண்டிகள் நூற்றுக் கணக்காக வாடல் புஷ்பங்களைக் கொண்டு கொட்ட அதைக் கண்டமாத்திரத்தில் அர்ச்சுனனுக்கு இதன் உண்மையை அறிய வேண்டும் என்ற அடங்கா ஆவல் உண்டாயிற்று. அவன் இவ்வேலை செய்பவரை எவ்வளவோ தரம் கேட்டுப்பார்த்தபோதிலும் அவர்கள் மறுமொழி கூடச் சொல்ல ஒழிவு இன்றி விரைவில் தமது வேலையைச் செய்து கொண்டிருந்தனர்.

வெகுநாழிகை அர்ச்சுனன் இவ்வாறு கேட்டதின் பேரில் ஒருவன் மாத்திரம் வெகு கோபத்தோடு பின்வருமாறு சொன்னான். 'எங்களுக்கு வேலையே அஸாத்தியம். நீர் எங்களை இவ்வாறு தடைசெய்யாதேயும். ஐந்நூறுவண்டி நிர்மால்லியங்கள்தான் நாங்கள்இங்கு கொண்டுவந்து கொட்டி இருக்கிறோம். இன்னும் ஐந்நூறுவண்டிப் புஷ்பங்கள் சிவபெருமானது பாதத்தில் குவிந்துகிடக்கின்றன. நேற்றுப் பாண்டவ வீரனாகிய பீமஸேனன் செய்த பூஜையில் விழுந்த புஷ்பங்கள் இவை. அவன் இன்று பூஜை தொடங்குவதற்கு இன்னும் கொஞ்ச நாழிகைதான் இருக்கிறது. அதற்குள் நாங்கள் இந்நிர்மால்யங்கள் எல்லாவற்றையும் எடுத்தெறிந்து விடவேண்டும். இனிமேல் எங்களை இவ்வாறு தடை செய்யாதேயும்' என்று சொன்னான். இதைக்கேட்டதும் அர்ச்சுனனுக்கு ஆச்சரியம் அதிகரிக்க 'அர்ச்சுனனா, இவ்வாறு பூஜை செய்தது; அல்லது பீமனா? என்று அர்ச்சுனன் அந்த வேலைக்காரனைக் கேட்டான். 'அர்ச்சுனனா! பீமன்தான் இப்பூஜையைச் செய்தது. அர்ச்சுனனது பூஜையெல்லாம் வெறும் ஆடம்பரம்தான்' என்று அவன் மறுமொழி கூறுகையில், அங்கு ஒருமனிதன் ஒருசிறு கூடையில் கொஞ்சம் புஷ்பத்தைக் கொண்டு வருவதை அர்ச்சுனன் கண்டான். உடனே அவனை நோக்கிக் கிருஷ்ணபகவான் 'இது யார் பூஜைசெய்தது என அவன் 'இது அர்ச்சுனன்என்ற டம்பாசாரி செய்த பூஜை' என்று மறுமொழி சொன்னான். உடனே அர்ச்சுனனுக்குத் தான் வீண் கர்வப்பட்டு பீமனை அவமதித்ததாகப்பட, மனங்கலைந்து வெட்கத்தால் தலை குனிந்துவிட்டான். சற்றுநாழிகையானதும் 'யான்செய்யும் ஆடம்பரமான பூஜையைவிட எனது தமயன் சாப்பாட்டிற்கு முன்புசெய்யும் மானஸபூஜையே மேல் என்பதை இப்பொழுது தான் நான் நன்றாய் அறிந்தேன்' என்று வாய்விட்டுக் கிருஷ்ணபரமாத்மாவிடம் சொல்லித் தனது கர்வத்தைப் போக்கிக்கொண்டான். இதனால் மானஸ பூஜையின் மேன்மை நன்றாய் விளங்குகிறது.

* *
*

கேடுவான் கேடுநினைப்பான் அல்லது அகச்சண்டை புறச்சண்டை.—பாண்டவர்கள் தாம் வனவாஸம்செய்துவந்த காலத்தில் துவைதவனத்தில் காற்று மழை வெய்யில் முதலியவைகளால் மிக வருந்தும்படி நேரிட்டது. இதனால் அவர்கள் தேகம் மெலிந்து மிகுந்த கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். பாண்டவர்களிடமிருந்து துரியோதன ஸபைக்குச் சென்ற சில பிராம்மணர்கள் அவர்களது நிலைமையைத் துரியோதனனிடம் தெரிவித்தார்கள். இது துரியோதனனுக்கு மிகுந்த ஸந்தோஷத்தை உண்டாக்கியது. பாண்டவர்களது துக்கத்தை அதிகப்படுத்தவேண்டும் என்ற கொடிய எண்ணம் அவனுக்குவர அவன், 'நாம் நமது தம்பிமார்கள் ஸ்நேஹிதர்கள் பரிவாரங்கள் முதலியவர்களோடு துவைதவனம்போய் ஸுகமாகக் கிரீடாதிகள்செய்து ஆனந்திக்கலாம். அதைக்கண்டு பாண்

டவர்கள் துக்கம் அதிகரிக்கும்' என்று யோசனை செய்து கொண்டு வெளிப்படையாக' நாங்கள் துவைத வனத்திலிருக்கும் எங்கள் பசுக்கூட்டங்களை மேல்பார்வை பார்க்கப் போகிறோம்.' என்று சொல்லிக்கொண்டான். இதைக்கேட்ட திருதிராஷ்டிரன் இவனது கெட்ட எண்ணத்தைத் தெரிந்து கொள்ளாது போய்வரும்படி அனுமதி கொடுக்க எல்லோரும் துவைதவனம் புறப்பட்டுப் போய்ச்சேர்ந்தனர். அங்கு வந்ததும் தமது பசுக்களைக் கவனியாது ஒருவாறு பார்த்துவிட்டு பாண்டவர்கள் கஷ்டப்படும் இடத்திற்கு அருகாமையிலிருந்த தோட்டத்தில் அவர்கள் புகுந்தாகள்.

அந்தத் தோட்டத்தில் இருந்த ஓர்குளத்தில் இவர்கள் ஜலக்ரீடை செய்யலாம் என்று உள்ளம் பூரித்தனர். இம்மாதிரி இவர்கள் புகுந்த இடமாகிய அந்தத் தோட்டம் குபேரனுடையதாக இருந்தது. இவர்கள் அங்கு வரும்முன் குபேரன் பட்டணத்திலிருந்து சித்திரஸேனன் என்ற ஒரு கந்தர்வ ராஜன் அங்கு வந்து ஜலக்ரீடை செய்துகொண்டிருந்தான். இதனால் அப்பொழுது கந்தர்வ ராஜனுக்கும் துரியோதனாதியருக்கும் பெரிய போர் உண்டாயிற்று. அதல் முடிவில் கந்தர்வ ராஜன் ஜயம் அடைந்து துரியோதனாதியரையும் அவர்கள் பெண்டுகளையும் ஒழுங்கிற்கு விரோதமாக பர புருஷர்களோடு சேர்த்துக் கட்டி எல்லோரையும் சிறைபிடித்துக்கொண்டு ஆகாயத்தில் கிளம்பிவிட்டான். அப்பொழுதுதான் கேடுவான் கேடு நினைப்பான் என்பதைத் துரியோதனன் நன்றாக அறிந்தான். இதில் அகப்படாதிருந்த சிலர் ஓடோடியும் வந்து பாண்டவர்களிடம் துரியோதனாதியருக்கு வந்த ஆபத்துக்களைத் தெரிவித்தனர். இதைக் கேட்டதும் கருணா நிதியாகிய தருமபுத்திரர் துரியோதனாதியரைச் சிறைமீட்டு வரும்படி தமது தம்பிகளாகிய பீமார்ச்சுனனை ஏவினர். அவர்கள் முதலில் தமக்குத் தீங்குசெய்த துரியோதனாதியரைக் காப்பாற்றுவது அழகன்று என்று வாதாடினர். அப்பொழுது தருமபுத்திரர் முதலில் 'நமக்குப் பிறர் எவ்வளவு கெடுதிகள் செய்தபோதிலும் அவர்களுக்கு நாம் கெடுதியைச் செய்யலாகாது. அவ்வாறு செய்வதால் நாமும் அவர்களுக்கு ஸமானமாவோம்' என்று நியாயம் சொல்லியும் கேட்காத தம்பிகளை நோக்கி 'நம்முள் வரும் சண்டைகளில் நாம் ஐந்து பேரும் நூறுபேருமாகப் பிரியலாம். வெளியிலிருந்து ஒருவன் நம்மோடு சண்டைக்கு வருவானாயின் நாம் நூற்றைந்து பேராகத்தான் இருக்கவேண்டும்' என்று புத்திமதி கூறினர். இதைக்கேட்டதும் பீமார்ச்சுனர் மிகுந்த வேகத்துடன் சென்று கந்தர்வனுடன் போர்செய்து அவனை வென்று துரியோதனாதியரை விடுவித்து தருமபுத்திரர் முன்பு கொண்டுவந்து நிறுத்தினார்கள். அப்பொழுதும்கூட தர்மபுத்திரர் துரியோதனனைப் பரிஹாஸம் செய்யவேயில்லை. அவனுக்கு வந்த ஆபத்தை நினைந்து கொஞ்சம் துக்கப்பட்டு அவனிடம் நயவார்த்தைகள் சொன்னார். துரியோதனாதியருக்கு 'நாம் பிறருக்குசெய்ய நினைத்த தீங்கு நம்மேலேயே திரும்பிவிட்டதே!' என்ற வெட்கம் பாதிக்கத்தொடங்க, ஒன்றும் பேசாது தலைகுனிந்து நின்றுகொண்டிருந்துவிட்டு மிகுந்த துக்கத்துடன் அவர்கள் தமது ஊர்போய்ச் சேர்ந்தனர்.

*
* *

புத்தியால் அறியோனாப் புராணன் பக்தியாம் வலையில் பிடிபடுவான்.— பகவான் துரியோதனாதியரிடம் பாண்டவர்க்காகத் தூது செல்லப் புறப்படுகையில் ஸஹாதேவன் பகவானை நோக்கி 'நீ தூதுபோனால் என்ன, போகாதிருந்தால் என்ன; துரியோதனன் பாகங்கொடுத்தால் என்ன, கொடுக்காமலிருந்தால் என்ன; திரௌபதி கூந்தலை முடித்தால் என்ன, முடிக்காவிட்டால் என்ன; நீ நினைத்தபடி காரியங்கள் முடிக்கும்விதம் எனக்கு எப்படித் தெரியும்' என்றான். இவன் எல்லோரையும் போலத் தனது அபிப்பிராயத்தை வெளியிடாது ரகஸியம் தெரிந்தவன்போலப் பேசியதைக்கண்ட பகவான், அவனிடம் உள்ள ரகஸியத்தை அறியவேண்டுமென்று அவனைத் தனிமையாக ஒரு மண்டபத்திற்கு அழைத்துப்போய் 'நீங்கள் எல்லோரும் சொல்லியபடி பாரதயுத்தம் நடவாது நிறுத்த உபாயம் என்ன?' என்று கேட்டார். அதற்கு ஸஹாதேவன் 'நீ பாரதயுத்தத்தில் எல்லோரையும் சாம்பலாக்கி பூபாரம் நீக்கவந்திருக்கிறாய். நீ நினைத்தால் அல்லவா பாரதயுத்தம் நிற்கும். அப்படி இருப்பினும் என் அபிப்பிராயத்தில் கர்ணனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்து, அர்ச்சுனனைக் கொன்று, திரௌபதியின் கூந்தலையும் அறுத்து, உன்னையும்பிடித்துக் கட்டிவிட்டால் இந்த யுத்தம் உடனே நின்றுவிடும்' என்று சொன்னான். அப்பொழுது பகவான் 'முன்னே சொல்லியவைகள் எல்லாவற்றையும் நீ செய்தாலும் என்னை எவ்வாறு உன்னால் கட்டமுடியும்' என்று கேட்க, 'நீங்கள் உங்கள் ரூபத்தைக் காட்டுங்கள். நான் கட்டுகிறேன்' என்றான் ஸஹாதேவன். உடனே பகவான் அநேக ரூபங்களோடு அவன் முன் தோன்ற அவன், பகவானது உண்மை ரூபத்தைத் தன் ஞானத்தால் உணர்ந்து தனது கருத்தாகிய (பக்தியாகிய) கயிற்றினால் கட்டிவிட்டான். அக்காலத்தில் பகவான் தம்மை விட்டுவிடும்படி கேட்டுக்கொள்ள, அவன் 'எங்கள் ஐவரையும் வரும் யுத்தத்தில் காக்கவேண்டும்' என்று கேட்டுக்கொண்டான். பகவான் அப்படியே ஆகட்டும் என்று சொல்லி, அப்பொழுது நடந்த விஷயங்களை ஒருவருக்கும் சொல்லாதிருக்கும்படி கட்டளையிட்டு பாண்டவர்கள் இருந்த இடம்வந்து சேர்ந்தார்.

இங்கு கூறியிருக்கும் கிருஷ்ண ஸஹாதேவ ரஹஸ்ய ஸம்வாதத்தை வில்லிபுத்தூர் ஆழ்வார் கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தில் வெகு அழகாகக் கூறியுள்ளார்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### 2. விழாவெடுத்தகாதை

நன்னெறி வழுவாதவர்க்குத் தெய்வந் துணை என்பதற்கு ஓர் ஐயமும் இல்லை. அவரை என்றும் நல்லறிவுடையாரிடத்தே வைப்பது கடவுளினது வைபவம். மனதிலுண்டாகும் துன்பம் வெளிக்கூறாதிருந்திட்டால் விரியும்; அதிகமாகும். அதைப் பொறுப்பது மிகவும் கஷ்டம். அதைப் பொறுக்கமுடியாது போயினும், உடன்கூறி துன்பமாற்றுவதற்கு தக்கவர் கிடைப்பின்தான் கூறுவர். கோவலனும் கண்ணகியும் தாமுற்றவற்றைக் கூறத்தக்க தகைமையுடையவள் என்று கவுந்தியிடம் தமது வரலாற்றை எல்லாம் கூறினர். தமது கஷ்ட நிலைமையும், தாம் தனியாக வாழவேண்டுமென்று கொண்ட ஆவலும், இவற்றை எல்லாம் முழுதும் கவுந்திக்குச் சொற்றனர்.

இதற்குள் தனது வேலையை முற்றும் நடத்தவேண்டுமென்ற ஆவல் பூண்டொழுகும் கோவலனுக்கு கவுந்தியிடம் கண்ணகியை அடைக்கலமாகவைத்து மதுரைமாநகர் சென்று அதனிடையுள்ள நிலைமையை அறிந்து சிலம்பை விற்று தான் செல்வப்பெருக்கொடு வாழவேண்டுமென்று மனதிற்பட்டது. இதற்குள் மதுரை எல்லையைக் கடந்து மதிற்புறம் வந்து ஆயர்பாடி இருக்குமிடம் சேர்ந்தனர்.

கவுந்தியும், தன் நன்வழிக்கோட்பாடின் மனோபவத்தினால் தான் நற்குணமுடையாரை நல்லிடத்தே வைக்கவேண்டுமென்ற ஆவலோடு அவரோடே ஆயர்பாடியுள் வந்தாள். கண்ணகியின் கற்பின் நிலைமையும், மனத்தின் உயர்ந்த பாவமும், அவள் மனதைக் கண்ணகிப்பால் கலக்கும்படிச்செய்துவிட்டது. கண்ணகியைவிட்டுச் செல்வதென்றால் கவுந்திக்குக் காலெழவில்லை. நற்குணமுடையார்க்கு கடவுள் தானே கருணை வடிவாக உதவிசெய்வது யார்தான் அறியாதவர்? அவர் கருணாவிலாஸத்தின் ஸாதனம் போல்தான் கவுந்தி கண்ணகிக்கும் கோவலனுக்கும் பட்டது.

ஆயர்பாடி வந்தடைந்தனர். அதை முற்றுங் கண்டானந்தங் கொண்டனர், நல்லிடமொன்று வேண்டி அலைந்தனர், இதற்குள் கண்ணகியைக் கவுந்திபால் அடைக்கலம் வைத்துவிட்டு "நான் மதுரைமாநகரஞ்சென்று, சிலம்பை விற்குமிடங்கண்டு, அதை விற்று, வெறுங் கையனாயிருப்பதை ஒழிந்து, செல்வமோங்கியவனாக வருவேனென்று" கூறினன் கோவலன். அப்பொழுது அங்கு மாடலன் என்னும் தோழன் ஒருவன் தோன்ற அவனோடு வேடிக்கையாக காலத்தைப் போக்கிக்கொண்டிருந்தனன்.

இதற்குள் கவுந்தி, "இனத்தோடே இனஞ்சேரவேண்டும்" என்ற எண்ணங்கொண்டு, அவ்விடத்து இடைச்சியர் கூட்டத்துள் பெரியாளாகிய மாதரி என்பவளைக்கண்டு அவளது நன்னடக்கை, குணவிசேஷம் முதலியவற்றைக் கண்டு ஆநந்தம்கொண்டனள். அவளிடத்து கண்ணகியை அடைக்கலம் வைக்கலாமென்று எண்ணினாள். "பசுவைக்காத்து அதன் பயனை எல்லாருமடையச் செய்யும் இம்மடந்தையர்க்கு கீழ்மை என்பதே கிடையாது. இம்மாதரி, நம்மிடை பேசும் வழியிற் பார்க்குமிடத்து நெஞ்சத்தில் அழுக்குடையவள் அல்லள். அதுமாத்திரமன்று. பெரியவள்; ஈகைகுணமுடையவள். இம்மாதரி குணத்திற் சிறந்தவள். ஒழுக்கத்தில் உயர்ந்தவள். இவள்பால் தான் கண்ணகியை அடைக்கலம் வைக்கத் தகுந்தவள்" என்று கவுந்தி எண்ணினாள்.

எண்ணியதும், "மாதரி! நான் சொல்வதைக் கேள். இம்மடந்தை உயர்குலத்திற் பிறந்தவள். அவள்கணவனும் மேல்வகுப்பைச்சார்ந்த வாணிபன். இவர்களை? உம்மிடம் வைத்தனன். இவரைக்காணாத பொருளைக்கொண்டு போற்றுவதுபோல, போற்றி, விருந்தோம்பி வரவேண்டும். இவள் கண்ணகி. அழகிற் சிறந்தவள். புகழிற்பெருத்தவள். குணத்திலுயர்ந்தவள். இவள் கணவன் மதுரைசென்று வாணிபம்செய்து வரும்வரையும் இவளை உனக்கு அடைக்கலம் புகுவித்தேன். இவளை மங்கள நீரிலாட்டி தாயும் தந்தையும் இவளுக்கு நீயேயாகிக் காப்பாற்றுவாயாக! என்னோடு இப்பொழுது வந்த இக்கண்ணகியின் சீரடியின் உருவைப் பூமிதேவியும் இதுகாறும் கண்டதில்லை. இவள் அகம்விட்டு வெளிவந்தவளல்லள். வாசற்படி கடவாதவள். கற்பென்னும் கவசத்தினை அணிந்த பெருந்தெய்வமீது. இக்கற்பினுருவத்திற்கு அடைக்கலம் தருக! பின் போகும் வழிக்கு பேரின்பமளிக்கும் ஸாதன மிதுவே ஆகும்" என்றுமாதரியை நோக்கி கவுந்தி சொல்லி அவள்பால் கண்ணகியை அடைக்கலம் வைத்துவிட்டுத் தன்வழியே தான் சென்றாள்.

மாதரியால் ஏவப்பட்டு, ஆயமாதர்கள் சுவையுடைய பண்டங்களைக் கண்ணகிக்குக்கொடுத்து அடிசில் செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். அவர் ஏவியவாறு மங்கள நீரில் ஸ்நாநம்செய்து சுவையோடு கூடிய அடிசில்செய்து கோவலனுக்கிட்டு அவன் பசியார உண்டபிறகு, எஞ்சி நின்றதைத் தானுமுண்டு ஸுகமாக இருந்தனள். என்றும் சமையல்செய்யத் தெரியாதவள் கணவன்மேலன்பென்கிற வலிமை

யால் சுவைமிக்க அன்னம் சமைத்தது அதிசயமே! உண்டிகொண்ட தன் கணவனுக்கு வெற்றிலையும் பாக்கும் அளித்து, அருகில் நின்றனள் கண்ணகி.

கோவலன் இவற்றைக்கண்டனன். மாதவியின் வெளியன்பிற்கும் கண்ணகியின் உள்ளன்பிற்கு முள்ளபேதம் அவன் மனதைப்பிளந்தது. அவனுக்கும் பொறுக்காது, இவ்வாறு தானே கூறினான்:—"கண்ணகி! யான் உன் மனமறியாப் பேதையாயிருந்தனன். நல்லொழுக்கத்தைவிட்டுக்கொடுவழியில் வாழ்ந்த எனக்கு நற்கதியுண்டோ? இதைக் கவனியாது உன்னையும் சிறுமைப்படச்செய்தேன். யானும் இழுக்கடைந்தேன். என் சொல்தவறாது நடுயாமத்தில் மதுரைவர முழுமனத்தோடு எழுந்த உன்னைக்காணுந்தோறும் என் மனம் வெட்கமடைகின்றது. என்ன பாவம் செய்தேன், நான் எவ்விதம் உய்வேன்."

அது கேட்ட கண்ணகி "யான் அது காறும் நீவிரில்லாமையால் இல்லறம் நடத்தமுடியாது, நீவிர்தகாத ஒழுக்கத்தில் வீழ்ந்ததினால் என் மாமியவர்க்கும் மாமனவர்க்கும் உண்டான வெறுப்பு யான் எதிரில் நிற்பதாலே அவர்க்கு விருத்தியாவதனாலும், அன்றியும், உம்மிடம் யான்கொண்ட பாசத்தின் வலிமையும்,இரண்டும் கலந்து நீவிர்கூவியதும் யான் ஒருமைப்பட்டு வந்தனன். நீவிர் வருத்தமடையவேண்டா"மென்று கூற,கோவலன் "இனியுன் சிலம்பைத்தா. அதை மதுரை சென்று விற்றுவருவேன்" என்றான். அவளுமதை மிக வணக்கத்தோடு தந்தனள். அதை வாங்கிக்கொண்டு "என் பிறிவாற்றாது வருத்தப்படவேண்டாம். நான் துரிதமாய் வருவேன். கவலையொழி" என்று சொல்லிக்கொண்டேயிருந்த கோவலன் அவள் தனித்திருக்கும் நிலைமையை யோசித்து தன் கண்ணில்கண்ணீர் ததும்ப, அவள் கண்டால் வருந்துவாளென்று எண்ணி திரும்பிப் பாராமல் எதிர்க்கண்ட துற்சகுணங்களைக் கவனியாது மதுரையூர் அடையப் போந்தனன்.

கோவலன் போனதும் அநேக துற்சகுனங்கள் நேர்ந்தன. பிரையிட்ட தாழிகளில் பால் தோயவில்லை. காளை மாட்டின் கண்களின் நீர் சிந்தியது சிந்தியவண்ணமாக நின்றது. வெண்ணெய் உருகவில்லை. கன்றுகள் துள்ளி விளையாடவில்லை. குழைந்து நிற்கின்றன. பயந்து பசக்கூட்டம் ஆற்றும் பசுவின் கழுத்திற்கட்டிய மணிகள் அறுந்து வீழ்ந்தன. இவற்றை எல்லாம் கண்ட மாதரி நமக்கேதோ துன்பமுள்ளது. இதை நீக்க வழி தேடவேண்டுமென்று நிஸ்சயித்தாள்.

யோசித்தனள். கோபாலனைக்காக்கும்படி வேண்டவேண்டுமென்றனள். மாயவனை வாழ்த்திடில் மாயமாத் துன்பம் போமென்றேத்தினாள். முன்னாள் திருமாலை இத்தகைய காலத்தில் வணங்கும் பொருட்டு ஒரு கூத்தாடுவதுண்டு. இது ஓர் பெருவிழா. கண்ணனது மகிமையைக் கூறும் கூத்து. இதற்கு ஆய்ச்சியர் குரவை என்று பெயர். குரவை என்பது எழல்லது ஒன்பது பேர் கைக்கோத்தாடுமோர் கூத்து. இக்கூத்தைப் பெண்மணியாகிய கண்ணகி எதிரில் ஆடத் தலைப்பட்டனர். இதனால் பசுவும் கன்றும் துன்பம் நீங்குமென்று சொல்லினாள்.

பாணர்கள் வந்து மாயவனென்னும் நரம்பும் பின்னையுங் கலக்க கைக்கிளை இடப்பக்கத்தே படர யாழைமீட்ட தோழிகளெல்லாங் கலந்து கைக்குட் கைக்கலந்து கண்ணனைப்பாடி கன்றுகளின் வலிதீர குரவையாடினார். "புள்ளூநங் கடவுளைப் போற்றுதும் போற்றுது" மென்று எல்லாரும் போற்றி,

"மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழி[த்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே !
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே !

"பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுந்
திருவடியுங் கையுங் கனிவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே !
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே !

" மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா லூற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே!
நாராய ணாவென்னா நாவென்ன நாவே.!" *

எனத்துதித்து (கண்ணகிக்காய் தெரியாது). போற்றிய ஆய்ச்சியர் குரவை அவட்கெவ்வாறு உதவியாகியதென்பது பின்தானே தெரியவரும்.

* சிலப்பதிகாரம்—ஆய்ச்சியர் குரவை—படர்க்கைப்பரவல்.

# விசேஷ வர்த்தமானங்கள்
## GENERAL NEWS

ஹாலிவால் நக்ஷத்ரம்.—நமது போதினியில் பிரசுரமான இயற்கை அற்புதங்கள் என்னும் தலைப்பின் கீழ் 1909ஹு ஏப்ரல்மீ 10-ம் பகுதியில் எழுதி வெளியிட்டுள்ள வால் நக்ஷத்ரங்கள் என்னும் வியாஸத்தைப் படிப்பவர்களுக்கு ஹாலிவால் நக்ஷத்ரத்தைப்பற்றிய விஷயங்கள் சில (305-பக்கத்திலிருந்து) தெரியவரும். இந்த நக்ஷத்ரம் ஸுமார் 1911-வருஷம் தெரியவேண்டியது. இது 1909ஹு அக்டோபர்மீ 10வ அன்று இங்கிலாந்திலுள்ள கேம்ப்ரிட்ஜ் நகரத்து நக்ஷத்ர சாலேயில் தூர திருஷ்டிக் கண்ணுடி மூலமாகப் பார்க்குங்கால் புலப்பட்டதாம். இது ஸாதாரண கண்ணுக்குத் தென்படுவது அஸாத்யம். இந்த வால்நக்ஷத்ரம் பூமியின் அருகாமையில் வந்துகொண்டே இருக்கின்றது. பூமிக்கு மிகவும் ஸமீபத்தில் வந்தால் ஒருவேளை ஸாதாரணமாகத் தெரிந்தாலும் தெரியலாம். ஸுர்யனுக்கும் இந்த வால் நக்ஷத்திரத்திற்கும் பொதுவாகஸுமார் 3,00,00,00,000 மைல் தூரம் இருக்கும். இப்பொழுது இது நாள் ஒன்றிற்கு ஸுமார் 25,00,000 மைல் வீதம் ஓடி வருகின்றது. பூமிக்கு அருகாமையில் வரும்பொழுது இதற்கும் பூமிக்கும் ஸுமார் 2,40,00 000 மைல் தூரம் இருக்கும். இது முதவில் மிருகசீர்ஷ நக்ஷத்திரத்தின் அருகாமையில் மங்கலான நக்ஷத்திரம் போலக் காணப்படுமோம். பின்னர் வானத்தில் இது கொஞ்சம் பரந்து காணப்படுமாம். இத்தருணம் தப்பினுல் இதை மறுபடியும் சற்றேறக்குறைய 1987-ம் வருஷம்தான் பார்க்க முடியும்.

* *
*

விவசாய வறுமையும் பட்டுப் பூச்சி வளர்த்தலும்.—நம்முடைய விவசாயிகள் வறுமை யடைந்திருப்பதற்கு அநேகம் காரணங்கள் உள. ஆனல் இவ்வெளிமைத்தனத்தை ஒருவாறு குறைப்பதற்கு வழி யொன்றுண்டு. பயிர் நடும் காலத்தில் இவர்களுக்கு இடைவிடாமல் வேலை செய்யும்படியாயிருக்கும், ஆனல் மற்ற காலங்களில் இவர்களுக்கு வேலையில்லை யென்றே சொல்லலாம். அப்பொழுது வீண்காலம் கழிக்காமல் ஏதாவது ஒரு தொழிலைச் செய்தால் அதனுல் கொஞ்சம் வரும்படியடையலாம். பட்டுப் பூச்சி வளர்த்தலை ஒரு தொழிலாகக் கொள்ளலாம். பட்டுப் பூச்சிகளில் மூன்று வகையுண்டு. அவைகாட்டுப்பூச்சி, ஆமணக்கிலை, மாவிலை இவைகளைத்தின்று ஜீவிக்கும் பூச்சி, முசுக்கட்டைச் செடியின் இலையையே உண்ணும் பூச்சி என்பன. ஆமணக்குச் செடியும் மாமரமும் இந்தியாவில் எவ்விடத்திலும் விசேஷமாய் விளையும். ஆகையால் இவைகளின் இலையைத் தின்னும் பூச்சியைச் சுலபமாய் வளர்க்கலாம். மாவிலையைத் தின்னும் பூச்சியின் பட்டுப் பிசின் ஏறியும், கூண்டினின்று பிரித்துச் சுற்றுவதற்குச் சிரமத்தை உண்டுபண்ணின போதிலும் தக்க யந்திரத்தைக்கொண்டு அந்த மேன்மையான பட்டை முற்றிலும் உபயோகிக்கலாம். முசுக்கட்டைச் செடியினிலையையே தின்னும் சைனு அல்லது ஜப்பான் பூச்சியையும் இந்தியாவில் வளர்க்க முடியும். முசுக்கட்டைச் செடி குளிரான காஷ்மீரத்திலும், வறட்சியுள்ள பர்மாவிலும் வளர்க்கப்படுவதனுல், அதை இந்தியா முற்றிலும் வளர்க்கலாம். நம்முடைய விவசாயிகள் இப்படிப்பட்ட லாபமுள்ள ஒரு தொழிலைப் பயிர்வேலையில்லாதகாலத்தில் செய்வார்களானுல் அவைகளைக்கொடிய வறுமை தீண்டாது.

* *
*

சப்பாத்துக்கள்ளி ஒரு கால்நடைத் தீவனம்.—சப்பாத்துக்கள்ளி முள்ளில்லாமல் வளர்க்கப்படும் பட்சத்தில் கால்நடைகளுக்கு ஒரு நல்லதீவனமாகலாம் என்று ஒரு கிருஷிசாஸ்திரி அபிப்பிராயங்கொள்ள, கால்நடைத் தீவனமின்றி வருந்தும் நம்மிந்தியாவில் இவ்விஷயமாய்ச் சில பிரயத்தனங்கள் நடந்தன. உதாரணமாகப் 'புனுகாட்டில் பார்மில்' சிலர் வெகு பிரயாசைப்பட்டும், கடைசியில் சப்பாத்துக்கள்ளி தீனிக் குதவாது என்ற தீர்மானத்திற்கு வந்தனர். நிற்க, அமெரிக்காவில், காலிபோர்னியா என்ற பிரதேசத்தில் மிஸ்டர் பர்பாங்க என்ற ஒரு தாவரசாஸ்திரி, முள்களும், கெட்டியான நரம்புகளும் இல்லாமல், ஒருவரைச் சப்பாத்துக் கள்ளியை விருத்தி செய்திருப்பதாகக் கேள்விப்பட்டுக் கீழ் வங்காளத்திலுள்ள தென் சில் ஹெட்டில் இவ்வகையான சப்பாத்துக்கள்ளி தருவிக்கப்பட்டுப் பயிற்சி செய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. இக்கள்ளியில் முள்ளில்லாமலிருப்பதுடன், ஏக்கர் ஒன்றுக்கு வருஷா வருஷம் 100 முதல் 200 டன் வரையில் தீவனத்திற்குரிய கள்ளி விளைகிறதாம். இந்தியாவில் கால்நடைத் தீவன விஷயம் நம்மை வருத்திக்கொண்டிருப்பதாலும் இக்கள்ளியால் கால் நடைகளின் கஷ்டம் நிவர்த்தியாகலாம் என்ற நம்பிக்கை யுண்டாவதாலும், பாரஸ்ட் உத்தியோகஸ்தர்களும், தாவர சாஸ்திர நிபுணர்களும், தென்சில்ஹெட்டில் நடந்துவரும் பரிசோதனையை ஆவலுடன் கவனித்து வருவார்களென்று உறுதியாக நம்பப்படுகின்றது.

* *
*

மண் எண்ணெய்.—உலகத்தின் நானுபாகங்களிலும் காலாகாலங்களில் காடுகளிலுள்ள ஏராளமான பெரிய மரங்கள் வீழுந்து மண்ணுேடுசேர்ந்து பூமிக்குள் பென்னம் பெரிய பர்வதம்போல பார்ப்பாராய்ப் புதைந்திருக்கின்றன. இந்த மரச் சிதைவுதான் நிலக்கரி என்பது. கரியிலிருந்து ஒருவித திராவகமானது தண்ணீர் போலக் கசிந்து ஊறுகிறது. அதுதான் மண்ணெண்ணெய். இந்த எண்ணெயா

னது உலகமுழுவதிலும் இருந்த போதிலும் ஐம்பது வருஷங்களுக்கு முன்னேதான் அதைக் கண்டுபிடித்தார்கள். அமெரிக்க இந்தியர் அதை வெகு காலத்துக்கு முன்னே கண்டறிந்து அதை வாதம், குளிர்க்காய்ச்சல் முதலிய வியாதிகளுக்கு மருந்தாக உபயோகித்து வந்தார்கள். மண் எண்ணெயின் உற்பத்திஸ்தானங்கள் சாதாரணமாய்ப் பள்ளத்தாக்குகளேயாம். அது இருக்குமிடத்தை அதைச்சுற்றிலுமுள்ள ஆகாயத்திற் விசேஷித்த வாசனையினாலும், அங்குள்ள தண்ணீரில் தோன்றும் எண்ணெய் மயத்தினாலும் அறியலாம். அமெரிக்காவில் மண்ணெண்ணெய் எடுக்கிற நாட்டிற்குப் பென்சில்வேனியா என்று பெயர். மண்ணெண்ணெயிருக்குமிடத்தில் உயரமான இருப்புக்கிராதிகளை நாட்டி அவற்றினருகில் ஒரு சிறு குடிசைகட்டுவார்கள். அந்தக்குடிசைக்குள் ஒரு யந்திரத்தைவைத்துக் கிராதியுடன் இசைத்துச் சில இடங்களில் வெகு ஆழமாய்ப் பூமியைத் தோண்டுவார்கள். சில ஸ்தலங்களின் சமீபத்திலே எண்ணெய் இருக்கும் இதனால் அங்குள்ள ஏழைகளான அநேக ஜனங்களுக்கு நல்லவேலை இருக்கிறது. பணக்காரரும் அதில் பணம் போட்டுப் பெருந்திரவியம் திரட்டுகிறார்கள். மண்ணெண்ணெய் இருக்கிற கூடுகள் திடீரென்று பெரிய பட்டணங்களாய் எழும்பி எண்ணெய் வற்றினவுடன் அழிந்துபோகின்றன.

நமது நாட்டுக்கு அமெரிக்காவிலிருந்தும் ருஷியாவிலுமிருந்தும் பர்மாவிலிருந்தும் மண்ணெண்ணெய் வருகிறது. இந்த எண்ணெயில் பல தரங்களுண்டு. தரங்களுக்குத் தக்கதாக விலையும் வித்தியாசப்படும். உயர்தர எண்ணெய் உபயோகிப்பதால் அதிக தீங்கொன்றும் சம்பவியாது. தாழ்ந்ததரத்தெண்ணெய் ஏராளமான புகையை யெழுப்பி ஆகாயத்தை அசுசியாக்குவதுடன் மற்றும் பலதீங்குகளும் விளைவிக்கிறது. ஆதலால் சிறிது விலை கூட்டிக்கொடுத்து உயர்தர எண்ணெய் வாங்கி உபயோகிப்பதே உத்தமம்

நமக்கு நூதனமாய்ப் புகைவண்டி, புகைக்கப்பல் மின்தபால் முதலியவைகள் கிடைத்திருப்பதுபோல் இந்த மண்ணெண்ணெயும் கிடைத்திருக்கிறது. அதின்விலை இலகு, அதின் பிரகாசமோ அதிகர். மேலும் அது துர்வாடைகளை அகற்றக்கூடியதாகவும் இருக்கிறது. அது தேசத்திலே அதிகமாய்ப் பரவினபோதிலும் பழைய எண்ணெய்களின்விலை முன்னைப் போலவும் அதற்கதிகமாகவு மிருக்கிறது. அது வரவில்லையானால் நமது பழைய எண்ணெய்கள் ஒருதுட்டுக்கு ஒரு சொட்டென்றாகிவிடும்.

*
* *

தண்ணீரைப் பரீக்ஷிக்க.—அநேக இடங்களில் குடிக்கத்தகுந்த சுத்த சலம் அகப்படுவதில்லை. அதிக அசுத்தமான சாக்கடைச் சலங்களின்சாரம் சில கிணறுகள், குளங்கள், ஆறுகள் இவைகளின் சலத்தில் கலந்திருப்பதுண்டு. இந்தமாதிரிச் சலத்தைக் குடிப்பது தேகத்துக்குப் பல வியாதிகளை உண்டாக்கும். சலத்தில் அசுத்தம் கலந்திருக்கிறதாவென்று அறிவதற்குக் கீழே சொல்லியிருக்கும் பரீட்சையைச் சோதித்துப் பார்க்கலாம். எந்தச்சலத்தைப் பரிசோதனை செய்யவேண்டுமோ அதை ஒரு சுத்தமான வெள்ளைப்போத்தலில் நிறைய ஊற்றவேண்டும். அந்தப்போத்தலில் கொஞ்சம் சர்க்கரையைச் சேர்த்துக் காற்றுப்போகாதபடி நன்றாய் அடைத்து மூடிவிடவேண்டும். இந்தப் போத்தலை வெயிலில் இரண்டு மூன்று நாட்களுக்கு வைக்கவேண்டும். போத்தலிலுள்ள சலம் சாதாரண சலம்போல் இருந்தால் அசுத்தம் இல்லை. பால்போன்ற நிறமாகிவிட்டால் அசுத்தம் கலப்பு என்று ஊகிக்கவேண்டியது.

* *
*

கொசுகுகளைப்பிடிக்க.-சாதாரணமாய்க் கொசுகு பகலில் மனிதர்களைத் தொந்தரவு செய்கிறதில்லை. இரவிற்றான் சனங்களைத் தூங்கவொட்டாமற் கடிக்கிறது. இதற்குக்காரணம் என்னவென்றால், கொசுகுகள் சூரியவெளிச்சங் கண்டவுடன் வெளிச்சத்தைவிட்டு ஓடி, வீட்டு அறைகளிற் குளிர்ச்சியான இடத்திற் போய் மறைந்துகொள்ளும். இந்தச் சுபாபத்தையறிந்து இந்திய அரசாட்சியிற் சிற்றுயிர் லட்சண சாஸ்திரியாயிருக்கும் மார்க்ஸ்வேல் லீப்ராய் என்பவர் கொசுகுகளைப் பிடிக்க ஒரு சுலபமான வழி கண்டுபிடித்திருக்கிறார். ஒரு அடி நீளம் ஒன்பது அங்குல அகலமுள்ள ஒரு சிறிய பெட்டிக்குக் கீல் வைத்து மேல்மூடி போடவேண்டும். இந்தப்பெட்டி மேல்மூடியில் ஒழு சிறு துவாரஞ்செய்து அதை இழுத்து மூடும்படியாய்ச் சிறிய சொருகுபலகை வைக்கவேண்டும். பெட்டியின் அடிப்புறத்திற் தகரம் போட்டுப் பச்சைக் கம்பளி போட்டுவைக்கவேண்டும். இப்படிச் செய்த பெட்டியைக் காலையிலெடுத்து, வீட்டு அறையிற் குளிர்ச்சியானவிடத்தில் மூடியைத்திறந்து வைத்துவிடவேண்டும். கொஞ்சநேரங்கழித்து மூடியைச் சாத்திவிடவேண்டும். பின்பு பென்சீன் என்று சொல்லப்பட்ட திராவகத்திற் கொஞ்சமெடுத்துப் பெட்டி மூடியிலுள்ள சிறுத்துவாரத்தின் வழியாய் உள்ளேவிட்டுச் சொருகுபலகையை இழுத்து மூடி விடவேண்டும். இப்படி ஒருமாதஞ் செய்ததில் 2300 கொசுகுகள் பிடிக்கப்பட்டனவாம். இப்படிச் செய்வதாற் கொசுகுகள் தொந்தரவு முழுமையுந்தீருமென்று தோன்றவில்லை. ஒருக்கால் கொஞ்சங் குறையலாம். மேலே சொல்லியபடி செய்வதில் அதிகம் செலவாகாது. ஆகையால் அதைச் செய்துபார்க்கலாம்.

# சிறந்த தமிழ்ப் புத்தகங்கள்

இவை யாவராலும் புகழப்பெற்றது. அநேகம் பாடசாலைகளிலும் பாடப்புத்தகமாக உபயோகப் பட்டு வருகின்றன. மிகவும் சுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீராமாயண வினுவிடை, 2-ம் பதிப்பு.— ரூ. அ.
இதில் அநேக நூதனமான விஷயங்கள் ஒழுங்குபடுத்திச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனந்த ராமாயணம், அத்யாத்ம ராமாயணம் இவைதளிலிருந்து எடுத்தெழுதிய சுருக்கமும் ராமாயணத்தின் உட்பொருளும் அடங்கியது. 226-பக்கங்கள் கொண்டது. ஸ்ரீராம பட்டாபிஷேக படத்துடன். ... ... ... ... 0 12 0

ஸ்ரீமகாபாரத வினுவிடை, முதல்பாகம்.— இதில் ஆதி, ஸபா, ஆரண்ய, விராட, உத்தியோக பர்வங்களடங்கியது. புதிப் பதிப்பு. இப்பதிப்பில் சிற்சில சீர்திருத்தங்களும் ஒழுங்குகளும் புதிதாகச் செய்யப்பட்டிருக்கிறது. பீடிகையில் சிற்சில பாகங்கள் புதிதாகஸம்ஸ்கிருத பாரதத்திற்கு ஏற்பமாற்றி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வோர் பர்வ ஆரம்பத்திலும் அவ்வவ்விடத்தில் வில்லிபுத்தூரார் எழுதியுள்ள காப்பு செய்யுளை அமைக்கப்பட்டிருக்கிறது. முடிவில் எழுதியுள்ள அனுபந்தத்தில் தமிழ்ப் பாரத்திலுள்ள புதிய கதைகளைச் சுருக்கமாகஎடுத்து எழுதப்பட்டிருக்கிறது ... 0 12 0

ஆரியமத உபாக்கியானம், 3-ம் பதிப்பு.— உயர்ந்த தர்மங்களைத் தெளிவாய் எடுத்துக்காட்டும் 50-இனியகதைகள் கொண்டது. ஒவ்வோர் கதையும் நமது புராணங்களிலிருந்தே எடுத்து எழுதியது. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு நீதியை நன்கு விளங்குகிறது. ... ... ... 0 2 0


ஸ்ரீ மஹா பாரத வினுவிடை, 2-ம் பாகம் இதில் பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய ஸௌப்திக, ஸ்திரீ பர்வங்களடங்கியது. மிகவும் இனிய நடையில் எழுதப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, அர்ச்சுனனுக்குக் கீதை உபதேசம் செய்யும் பாகம் மிகவும் அழகாய் வர்ணிக்கப்பட்டிருக்கிறது இத்தகைய புத்தகம் ஒவ்வோர் ஹிந்துக்கள் வீட்டிலும் அவசியமிருக்கவேண்டும். ... 0 12 0

குறிப்பு.—மேற்குறித்த புத்தகங்களைத் தவிர, இன்னும் எங்களிடம் அநேக விதமான தமிழ்ப் புத்தகங்கள் கிடைக்கும். கிரய ஜாப்தா வேண்டுவோர் ½-அணு ஸ்டாம்பு அனுப்பினல் உடனே அனுப்பப்படும்.

பிரதாப முதலியார் சரித்திரம் ... 1 0 0
மதிமோசவிளக்கம் ... ... ... 0 12 0
அராபிநைட் கதை படங்களுடன் ... 2 8 0
மஹாராஜா துறவு ... ... 0 6 0
விபின சந்திரபாலர் உபன்யாஸம் ... 0 8 0
குணசீலன் ... ... ... 0 10 0
கமலாம்பாள் சரித்திரம் ... ... 1 4 0
தேவலோக கிரிமினல் கேஸ் ... ... 1 8 0
களாபூர்ணோதயம் ... ... ... 0 10 0
விக்டோரியா சரித்திரம் ... ... 1 4 0
பிரபு லிங்கலீலை (வசனம்) ... ... 0 12 0
விநோதரஸமஞ்சரி ... ... ... 1 2 0
தானவன் எனும்போலீஸ் நிபுணன் கண்டு பிடித்த அற்புதக்குற்றங்கள் ... ... 1 0 0
கைவல்லிய நவநீதம், மூலமும் உரையும் ... 1 0 0
சிவமஹாபுராணம் 48 படங்களுடன் ... 5 0 0
நாலடியார் மூலமும் உரையும் ... ... 1 2 0
ஸ்ரீபக்த லீலாம்ருத வசனம் ... ... 3 0 0
ஸ்ரீ விவேகாநந்த விஜயம் ... ... 1 4 0
நைடதம் மூலமும், உரையும் (படங்களுடன்) ... ... ... ... 2 0 0
நீதிவிவாதமஞ்சரி (இந்தியன் பினல் கோட் சட்டம் சாக்ஷி சட்டம், அடி தண்டனைச் சட்டம், இவை வியாக்கியானத்துடன் ... ... ... 2 8 0
மாணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் ... ... 1 0 0
பிரபோத சந்திரோதய வசனம் ... 1 0 0
பக்த விஜயம் முதல்பாகம் ... ... 2 0 0
ஷை 2-ம் பாகம் ... ... 2 0 0
ஷை 3-ம் 4-ம் பாகங்கள் ... 2 0 0
தேகதத்வசாஸ்திரம் படங்களுடன் ... 2 8 0
கலாவதி ... ... ... ... 1 8 0
ரூபாவதி ... ... ... ... 1 0 0
மதிவாணன் ... ... ... 0 6 0
சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா 6-திருமுறையும் ... ... 3 0 0
கருட புராணம் வசனம் படத்துடன் ... 0 8 0
தேவி பாகவதம் ... ... ... 3 12 0
நவக்ரகஸ்தோத்ரம் அஷ்டோத்தர அர்ச்சனை தமிழ் சுலோகம் தமிழில் அர்ச்சனை நாமம் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் படிக்கவேண்டியது ... ... 0 2 0
சிவஸஹஸ்ர நாமம் சுப்பிரமணியர், கணபதி லலிதா இவர்களுக்கு அஷ்டோத்தரம், தமிழ் சுலோகம் தமிழில் அர்ச்சனை ஒவ்வொருவரும் வாங்கிஅர்ச்சிக்கவேணும் 0 4 0
தேசிகப்ரபந்த வ்யாக்கியானம் ... ... 3 0 0

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி,
மைலாப்பூர், மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
10 MAR 1910
MADRAS.




* * * மாணிக்கக் கற்கள் சிதறியதும் * * * அரசன் தலைசாய்ந்துயிர்போயதும், காலம் ஒன்றுதான் * * * (ஸ்திரீகளுக்கான பக்கத்தில் பக்கம் 229-பார்க்க.)